Devi in KANMANI -Tamil Fortnightly**march**-1, 2009; Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

# என்னைப் பற்றி




கண்மணியை வாசிக்கும் நேச மிகு உங்களுக்கு வணக்கம்!

படிப்புக்கேற்ற வேலை வாய்ப்புகளும் வாழ்க்கை வசதிகளும், பெருகிவரும் சமயத்தில், எண்ணற்ற குடும்ப உறவுகளும் அர்த்தமற்று நேசம் குறைந்து போய்விட்டன. அன்பால் கட்டுண்டு வாழவேண்டிய தாம்பத்ய வோ் இன்று வியாபார நோக்குடன் பார்க்கபபடுவதால் பட்டு போய்விடுகின்றன. உணர்வுபூர்வ உறவு இன்று இரும்புச ங்கிலி போல் இறுகி நிற்கிறது.

பணம், அந்தஸ்து அந்த நேசத்தை தருமா? படியுங்கள்; நேசியுங்கள்.

உங்கள் தோழி,

ஆர்.மணிமாலா.



# காதல் தேரினிலே...

''வேல் வேல் வடிவேல்... வேதாந்த வடிவேல்
நாதாந்த முடிவேல் நான் மறைகள் போற்றும் வேல்
தேவியருள் தந்தவேல், தேவர் மூவர் போற்றும் வேல்
குழந்தை குமரன் வேல் குன்று தோறும் நின்ற வேல்!''

பூஜையறையில் கண்மூடி, கைகள் சேவித்து, கனிரென்று பாடிக் கொண்டிருந்தாள் சீதாலட்சுமி.



அறுபதை நெருங்கும் வயது. கவலையும், நோயும், ஆறேழு வயதை கூட்டிக் காண்பித்தது. கறுப்பும், வெள்ளையுமான சரக்கூந்தலை நுனியில் முடித்திருந்தாள்.

நெற்றியில் பட்டையாய் திருநீறு. காதில் சின்னதாய் அந்த காலத்து இட்லி கம்மல், எழுக்கற்கள் பதித்த மூக்குத்தி, இரண்டு பவுனில் செயின்.

முருகனை உள்ளம் உருகி பாடிக் கொண்டிருந்த சீதாலட்சுமியின் கண்களில் கண்ணீர். இடையிடையே இருமல். உள்நோக்கி எரிந்த காமாட்சி அம்மன் விளக்கின் திரியை குச்சியை எடுத்து ஒழுங்குப்படுத்தினாள்.

அவந்திகா குளித்து முடித்து சல்வாரை

## ஆர். மணிமாலா



அணிந்துக் கொண்டு கிச்சனிற்குள் ஓடினாள்.

துப்பட்டாவின் இரு பக்கமும் இணைத்து பின்பக்கமாய் முடிச்சிட்டாள். வெங்காயத்தையும், கத்தியையும் வைத்துக் கொண்டு மளமளவென்று வேலையில் இறங்கினாள்.

நறுக்கியவைகளை ஓரமாக வைத்துவிட்டு ரவையை வாணலியில் போட்டு பொன்னிறமாக வறுக்க ஆரம்பித்தாள்.

பரமேஷ்வர் இடுப்பில் டவலுடன் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டவன்... தன்னறைக்கு சென்று அவசரமாய் துடைத்து ஜூங்கியோடு வெளியே வந்தான்.

''என்ன டிபன் அவந்தி?''

''உப்புமாண்ணா!''

''உனக்கு அது மட்டும் தான் சமைக்கத் தெரியுங்கறதை மூணு நாளா அதையே பண்ணி நிரூபிக்கணுமா?''

வெங்காயம் வதக்கியபடி அண்ணனை செல்லமாய் முறைத்தாள்.

''நல்லாயிருக்குன்னு அன்னைக்கு ஒரு பேச்சுக்குத் தானே சொன்னேன்?''

''அண்...ணா!'' சிணுங்கினாள்.

''சரி... சரி... சீக்கிரம் முடி... சாப்பிட்டுக் கிளம்பணும். உப்புமாக்கு சைட் டிஷ் என்ன பண்ணே?''

''என்ன பண்ணலாம்?''

''இதிலே உலகமகா குழப்பம் வேறயா? மூணு நாளா தேங்காய் சட்னி தானே பண்ணினே? அதையே பண்ணு!''

''ரொம்ப கிண்டல் பண்றேண்ணா! எனக்கு மட்டும் விதவிதமா சமைச்சு சாப்பிடக்கூடாதுன்னு விரதமா என்ன? எகிறிப்போன விலைவாசியால... நம்ம குடும்ப பட்ஜெட் ரெண்டு மடங்கா எறிடுச்சு. அதனால நாக்கை கட்டுப்படுத்த வேண்டியிருக்கு. உனக்கு பூரிமசாலான்னா ரொம்ப புடிக்கும். கோதுமை மாவையும், எண்ணெய் விலையையும் நினைச்சுப் பார்க்கிறப்ப பல்ஸ் ரேட் எகிறுதே!''

''கிழவி மாதிரி பேசாதே! ஆபீஸ் நேரம் போக பார்ட் டைமா இன்னொரு வேலைக்கும் சொல்லி வச்சிருக்கேன். சமாளிச்சுக்கலாம். என்னென்ன மளிகை சாமான் வேணுமோ, அத்தனையும் லிஸ்ட் போட்டு வை. வாங்கித்தர்றேன். சீக்கிரம் ரெடி பண்ணு. சாப்பிட்டுக் கிளம்பணும்''

''இதோ அஞ்சு நிமிஷத்துல சட்னி அரைச்சிடறேன்'' வேகமாய் தேங்காயை துருவ ஆரம்பித்தவளின் கண்கள் ஜன்னலில் பதிய ஆச்சரியமாய் அலறினாள்.

''அண்ணா... அண்ணா... இங்கே வாயேன்!''

வெளியேறியவன் மறுபடி ஓடிவந்தான் பதற்றமாய்.

''என்ன... என்ன அவந்தி?''

''ஷ்... அந்தபக்கம் போகாதே. ஜன்னல்ல பார்!''

''என்ன இருக்கு?''

''தெரியலே? மூணு சிட்டுக்குருவிங்க உங்கார்ந்திட்டிருக்கே?''

''இதென்ன உலக அதிசயமா?''

''பின்னென்ன? சட்டுக்குருவிங்களை காட்டிடு பார்ப்போம்!''

''அதானே? முன்னேயெல்லாம்... கிச்... கிச்சுன்னு கத்தி கத்தி வரும். நம்ம வீட்டு போட்டோ பின்னாடி கூடு கட்டி குஞ்சுப் பொரிக்கும். இப்பல்லாம் கண்லயே படறதில்லே, ஏன்?'' வியப்பாய் கேட்டான்.

''தெரியலே... பட், செல்போன் டவர்ல இருந்து வெளிப்படற கதிர் வீச்சு சிட்டுக்குருவி இனத்தையே அழிச்சிடுதாம்.''

''ப்ச்... அநியாயம் இல்லே? மனுஷங்க தங்களோட வசதியை பெருக்கிக்கறதுக்காக கண்டுபிடிச்ச விஞ்ஞானம் இந்த மாதிரி வாயில்லா ஜீவனுங்க உயிரை அழிக்கறதுக்கும் பயன் படணுமா?'' வருத்தப்பட்டான்.



''எட்டப்பா ரொம்ப மகிழ்ச்சியாப் காணப்படுறாரே? என்ன காரணம்?''

''கபாலியை, 'கையும், மா மூ லு மா ய்' பிடிச்சுட்டாராம்!''

-அன்பா.

''இன்னைக்கு எல்லாமே அப்படித்தானே ஆகிப்போச்சு. இதோ இன்னும் அரைமணி நேரத்துல கரன்ட் போகப்போகுது. மணிக்கணக்குல கரன்ட் இல்லாம அவஸ்தைப்படறோம். கேட்டா மின்சாரப் பற்றாக்குறைங்கறாங்க. அடிமட்டக் காரணம் என்ன? வெளிநாட்லேர்ந்து நிறைய பேர் இங்கே வந்து தொழிற்சாலை அமைச்சிருக்காங்க. அதுக்கு கரன்ட் தேவைப்படுது. வரவேற்க வேண்டிய விஷயம் தான். நிறைய பேருக்கு வேலை கிடைச்சிருக்கு தான். ஆனா, அஞ்சுமணி நேரம் கரன்ட் இல்லாததால நம்ம நாட்லே எத்தனையெத்தனை தொழில்கள் நலிவடைஞ்சு போச்சு? பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாம போயிடுச்சே?



எத்தனை குடும்பம் பட்டினியால சாகுது? இதைப்பார்க்கும் போது பெரிய தொழிற்சாலைகள் அவசியமான்னு தோணலே?''

''வெரிகுட் அவந்தி. பரவாயில்லையே, இந்தளவுக்கு யோசிக்கறியே...''

''என்னை என்ன மரமண்டைன்னு நினைச்சியா?''

''நிஜம் தான். அப்படித்தான் நினைச்சிட்டிருந்தேன்.''

அ...ண்...ணா!'' சிணுங்கலுடன் முகத்தை சுருக்க... சிரித்துக் கொண்டே, பூஜையறைக்கு வந்த பரமேஷ்வர் இருபத்தொன்பது வயது இளைஞன். குறை சொல்ல முடியாத வசீகரம். மென்மையான குணமுடையவன் என்பதை சொல்லும் முகம். தனியார் வங்கியில் கேஷியர்.

அப்பா இல்லாத குடும்பத்தை சுமக்கும் பொறுப்பான ஆண்.

சீதாலஷ்மி இன்னும் பாடிக் கொண்டிருந்தாள். குரல் கம்மிப்போயிருந்தது.

''அம்மா''

''ஏறு மயிலே நீயே நீ வா வா ஷண்முகா...''

''அம்மா...''

''ஐங்கரத்து இளையவனே வா... வா... ஷண்முகா...

''அம்மா... உன்னைத்தான்!'' தோள் தொட்டு அசைத்தான்.

''அ... என்னப்பா?''

''என்னம்மா இது? நீ பண்றது உனக்கே நல்லாயிருக்கா? உடம்புக்கு முடியலே... எல்லா நோயும் போர்ஷன் பிரிச்சு உட்கார்ந்திருக்கு. ரெண்டு நாளா சளி, இருமல் வேற! சாத்தலையோட மணிக்கணக்குல உட்கார்ந்து பாடி பூஜை பண்ணித்தான் ஆகணுமா?''

''என் ஒரே நம்பிக்கை இந்த முருகன் தானப்பா?''

''சரி... எந்திரி. நீயும் தான் நாள் தவறாம பத்துப்பாட்டு பாடி கூப்பிடறே. வந்தாரா உன் வடிவேலன்?''

''கிண்டல் பண்ணாதே பரமு!''

''இது கிண்டல் இல்லேம்மா. வருத்தம். எனக்கு உன் ஹெல்த் கண்டிஷன் முக்கியம். உன்னை வருத்திக்கிட்டு சாமி கும்பிடறதிலே எனக்கு நம்பிக்கையும் இல்லே. பிடிக்கவுமில்லே. வாம்மா. நேரமாச்சு. உட்காரு. அவந்திகா ரெண்டு பேருக்கும் தட்டுப்போடு.''

''கேஸ் ஜெயிச்சிடுச்சின்னா எனக்கு வேறென்னப்பா கவலை? உங்கப்பாவுக்கு கிடைக்க வேண்டிய சொத்து கிடைச்சாலே போதுமே. அவந்திகாவை நல்ல இடத்துல கல்யாணம் பண்ணிக் கொடுத்திடலாம். சொந்தமா நமக்குன்னு ஒரு வீடு வாங்கி நிம்மதியா, மருமகள், பேரக்குழந்தைகள்னு காலத்தை ஓட்டிடுவேன்!'' என்றார் சீதாலஷ்மி.

## 2

பரமேஷ்வர் அம்மாவை பரிதாபமாய் பார்த்தான். எந்த நம்பிக்கை இவளிடம் இத்தனை எதிர்பார்ப்புகளை விதைத்திருக்கிறது? சட்டத்தின் கண்களுக்கு தெரியும் நியாயம் எதிராளியிடம் இருக்கும்போது, ஏன் பணத்தையும், நேரத்தையும் உடம்பையும் விரயமாக்கி வேதனைப்பட வேண்டும்?

சீதாலஷ்மியின் நம்பிக்கை எதிர்காலத்தின் மீதான பயம், தன் நிலையை நினைத்து கோபம், எல்லாமாக சேர்த்து பிடிவாதமாக கேஸ் போட வைத்தது.

சீதாலஷ்மியின் கணவர் வேணுரங்கன், அவர் தகப்பனாரின் அறிவிக்கப்படாத இரண்டாந்தாரத்து மகன். முதல் மனைவிக்கு மூன்று பையன் ஒரு பெண். எந்த விசேஷத்திலும், காரியத்திலும் வேணுரங்கனின் தாயாருக்கு அழைப்பில்லை. கும்மிடிப்பூண்டியில் முக்கால் கிரவுண்டில் ஒரு வீடெடுத்து அவர்களை அமர்த்தியதோடு, அவ்வப்போது சென்னையிலிருந்து வந்துப்போவார் வேணுவின் தகப்பனார் குமாரகுரு. அவர் குடும்பத்திலும் சரி, உறவினர்கள் மத்தியிலும் சரி, ''அந்த சரஸ்வதிய குரு வைச்சிருக்கார்' என்று தான் சொல்வார்களே ஒழிய... சின்ன வீடு என்றோ, ரெண்டாந்தாரம் என்றோ, வாய்தவறியும் அந்த உரிமையைச் சொல்வதில்லை.

சென்னையில் திருவல்லிக்கேணியில் குமாரகுருவுக்கு நான்கைந்து வீடுகள் உண்டு. அதில் ஒன்றை வேணுரங்கன் பெயருக்கோ, அல்லது சரஸ்வதி பெயருக்கோ எழுதி வைப்பதாக சொன்னது நிஜம். ஆனால் அதை செயல்படுத்துவதற்கு முன் திடீரென வந்த அட்டாக்கில் பொசுக்கென போய் சேர்ந்து விட்டார் குமாரகுரு.

சாவில் கூட அவர்களை சேர்க்கவில்லை. சரஸ்வதி துடித்துப்போனாள்.

சிரமப்பட்டு மகன் வேணுரங்கனை ஆளாக்கி சீதாலஷ்மிக்கு திருமணம் செய்து வைத்து பேரன் பரமேஷ்வரனை பார்த்துவிட்டு மேலே போய் சேர்ந்தாள்.

வேணுரங்கன் நல்லவர். ஆனால் சொத்துக்கு ஆசைப்படாதவர். அதனால் தனக்குரிய உரிமைக்கான முயற்சியில் அவர் ஈடுபடவில்லை. ஒரு நாள் காய்ச்சலில் வேணுரங்கன் இறந்துவிட சீதாலஷ்மி தவித்துப்போனாள். நல்லவேளை, பரமேஷ்வர் படித்து முடித்து வேலைக்குப் போக துவங்கியிருந்ததால் குடும்பம் நடத்த சீதாலஷ்மி சிரமப்படவில்லை.

ஆனால் சேமிப்பென்று எதுவும் இல்லாமல், வளர்ந்து வரும்



அவந்திகாவை பார்க்கும்போது அடிவயிற்றில் அடுப்பெரிந்தது.

நியாயமாய் அந்த சொத்தில் நமக்கும் பங்கிருக்கும் போது ஏன் பெறக்கூடாது? யோசித்து, யோசித்து எண்ணங்களை மெருகேற்றி வக்கீலை கலந்தாலோசித்து விட்டு வந்த போது தான் பரமேஷ்வர் அறிவுரைத்தான்.

''நீ நினைக்கிறமாதிரி இது அவ்வளவு எளிதான விஷயமில்லைம்மா. நம்மக்கிட்டே சட்டப்பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. எதுக்கு நமக்கு?''

''உனக்கு தெரியாது பாமு. தாத்தாவோட சொத்து பேரன்களுக்குத்தான். நீங்களும் குமாரகுருவோட பேரன், பேத்தி தானே? எனக்கு தெரிஞ்ச என் மாமனார் இன்னாருக்கு இதுன்னு யாருக்கும் உயில் எழுதிவைக்கலை''

''எல்லாம் சரிம்மா. சட்டத்தோட சந்து பொந்தை எல்லாம் அவங்க பணம் வச்சு அடைச்சிடுவாங்க. கேஸ் நடத்தறது சாதாரண விஷயமா? வக்கீலுக்கு எவ்ளோ பீஸ் ஆகும் தெரியுமா? வாய்தா வாங்கியே நாள் கடத்தி பணம் பறிப்பாங்க.''

''நான் பார்த்திருக்கிற வக்கீல் அப்படியில்லே. நாம கண்டிப்பா ஜெயிப்போம். குறைஞ்சது மூணு நாலு கோடி சொத்து நமக்கு வரணும். அதுக்காக கொஞ்சம் செலவு ஆகும் தான். கும்மிடிப்பூண்டி வீட்டை விக்கிறதா முடிவுப்பண்ணிட்டேன்'' என்றபோது தான் ஆடிப்போனான் பரமேஷ்வர்.

ஆனாலும், அவன் எத்தனை தடுத்தும் அம்மாவின் பிடிவாதம் தான் வென்றது.

மூணு வருடமாய் கேஸ் நடக்கிறது. முடிகிற பாடாய் தெரியவில்லை.

''உங்கப்பா அப்பவே விவரமா கேட்டு வாங்கி இருக்கணும்'' சீதா சாப்பிட்டுக் கொண்டே மறுபடி கேஸ் பற்றிப்பேச...

மென்மையாய் அவள் தோளைப்பற்றினான்.

''எப்பவும் இதைப்பத்தியே யோசிச்சிட்டிருக்காதம்மா. உலகத்தைப் பத்தி உனக்கு தெரியலே. இங்கே ஒருத்தன்கிட்டே பணமிருக்கும். இன்னொருவன் கிட்டே பணப்பை இருக்கும். இதுதான்ம்மா உலகம். நம்மக்கிட்டே பணப்பை இருக்கு. என்கிட்டே உழைப்பிருக்கு. போதாதா அதை நிரப்ப? கேஸ் ஜெயிச்சா ஜெயிக்கட்டும். இல்லேன்னாலும் கவலையில்லை. நானில்லையா உங்களை காப்பாத்த?'' என்கிறான்.

மனசு கேக்கலை பாமு!''

''இந்த வயசுல இத்தனை கவலை, யோசனை, டென்ஷன் ஆகாதும்மா. நீ நல்லாயிருந்தா அது போதும்.''

''என் பிள்ளைங்க நல்லாயிருந்தா போதும்னு நினைக்கறது தப்பா?''

''இல்லே... சாப்பிடு!''

அம்மாவிடம் மேலும் வாதம் செய்ய விரும்பாமல் முற்றுப்புள்ளி வைத்தான்.

அடுத்த பத்து நிமிடத்தில் பைக் சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

''அம்மா... வர்றேம்மா!''

''போய் வாப்பா!''

''அண்ணா ஒரு நிமிஷம்''

''என்ன?''

ஹேண்ட் பேக்குடன் ஓடிவந்தாள்.

''டி.வி.எஸ். ல என்னை டிராப் பண்ணிடேன்.''

''எய்... ஏற்கனவே எனக்கு லேட்டாயிடுச்சு!''

பிளீஸ்ண்ணா ஆன் த வே ராயப்பேட்டை... என்னை இறக்கி விட்டுட்டு போய்ட்டின்னா... ஜெமினிக்கு ஷேர் ஆட்டோல போய்டுவேன். இதிலே உன் டைம் வேஸ்ட்டாகாது.''

''பேசிட்டிருக்காதே. ஏறு!''

''அம்மா... வர்றேன்.''



அம்மாவிடம் சொல்லிக் கொண்டு பரமேஷ்வரின் பின்னால் அமர்ந்துக் கொண்டாள் அவந்திகா.

''பார்த்துப்போ... துப்பட்டாவை இழுத்து பிடிச்சுக்கோ. பைக் புறப்பட்டது.

பரமேஷ்வர் பணிபுரியும் வங்கி ராயப்பேட்டையில் இருந்தது. அவந்திகா பணிபுரியும் அலுவலகம் ஜெமினியில்! ஒரு பத்திரிகை அலுவலகத்தில் டி.டி.பி. ஆபரேட்டராக பணி புரிகிறாள்.

நல்ல வேளை சிக்னல் விழாததால் விரைந்து செல்ல முடிந்தது.

பரபரப்பான சென்னை சாலைகளில் அதே பரபரப்பை சுமத்த

''உங்க பக்கத்து வீட்டு சேவல் அறுபது ரூபா தான் பெறும்...

அதை போய் ஐநூறு ரூபா கொடுத்து வாங்கி இருக்கீங்களே?''

''சிக்கன் பிரியாணி போட்டு சாப்பிடுவதோடு, இனி அந்த சேவல் என்னை நாலு மணிக்கே கூவி எழுப்பி விடுவதில் இருந்தும் தப்பிக்கலாமே!''

-கு.அருணாசலம்,
தென்காசி.



முகங்களுடன் வாகன ஓட்டிகள்.

''அவந்தி''

''என்னண்ணா?'' காற்றில் அலைபாய்ந்த கேசத்தை ஒதுக்கியபடி அவன் கழுத்தருகே குனிந்தாள்.

''நீ ஏன் மேற்கொண்டு படிக்கக்கூடாது?''

''என்னது?''

''இதுக்கேன் அலர்றே? நீ படிச்ச பி.ஏ. எக்னாமிக்ஸ் இந்த காலத்திலே எடுபடாது. பி.சி.ஏ. ஜாயின் பண்ணு எதிர்காலத்துக்கு கை கொடுக்கும்.''

''இப்ப என்ன படிச்ச ஒரு வேலைக்குப் போகணும். அதான் டி.டி.பி. படிச்சுட்டு வேலைக்குப் போய்க்கிட்டிருக்கேனே! ஆரம்பத்திலேயே படிப்புல ஆவரேஜ் ஸ்டூடண்ட் நான். ஒரு டிகிரி முடிக்கணுமேன்னு ஈஸியான கோர்ஸா எடுத்துப் படிச்சேன். பி.சி.ஏ. படிக்கறதுக்கெல்லாம் பெரிய மண்டை வேணும். எனக்கது இல்லே''

''நான் விளையாட்டுக்கு சொல்லலே அவந்தி. இப்போதைய வாழ்க்கை முறைக்கு தொழில் கல்வி அவசியம். உலகத்தைப் பத்தி உனக்கு புரியலே. யோசி. உடனே பதில் சொல்லாதே!''

''இன்ட்ரஸ்ட் இல்லேண்ணா!''

''ப்ச்... உடனே பதில் சொல்லாதேன்னு சொன்னேன்''

''நீ எப்பக் கேட்டாலும் இதே பதிலைத்தான் சொல்லப்போறேன்.'' முணுமுணுத்தாள் அவந்திகா.

மேலும் பத்து நிமிடங்கள் காக்க வைத்த பின்பு தான் வந்தான் கவுசிக்.

அவனைப் பார்த்ததும் மலர்ந்த முகத்தை வலுக்கட்டாயமாய் சீரியஸாக்கிக் கொண்டு முறைத்தாள் அவந்திகா.

''முறைக்கக்கூட தெரியலியே என் செல்லத்துக்கு. அசடுதான் வழியுது. ஏறு'' பைக் உறுமட, இண்டலாய் சொன்னான்.

''எவ்ளோ நேரம் வெயிட் பண்றதாம்? வர்ற பஸ்சை எல்லாம் மிஸ் பண்ணிட்டு நிக்கறப்ப... பார்க்கறவங்க தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?''

''யார் தப்பா நினைச்சா நமக்கென்ன அவிக்குட்டி? லவ்வருக்காக வெயிட் பண்றதுன்னா சும்மாவா?''

''அச்சோ... அதை ஏன் இவ்ளோ சத்தமாப் பேசறீங்க?''

''மொதல்ல ஏறு. எங்கே போகலாம்?''

''எங்கேயாவது!''

''இப்படியெல்லாம் உசுப்பேத்திவிட்டா ஹோட்டலுக்கு போய் ரூம் போட்டுடுவேன்.''

''ச்சீ... ரொம்ப அசிங்கமா பேசறீங்க...'' முகம் சுளித்தாள்.

''இருபது, முப்பது வருஷத்துக்கு முன்னாடி வாழ்ந்த காதலி

மாதிரியேப் பேசறே அவிக்குட்டி. நீ தேற மாட்டே.. ஏறு!''
பில்லியனில் அமர்ந்தாள்.

## 3

''உனக்கு போரே அடிக்கலியா அவிக்குட்டி?''

மாங்காய் சீவலுடன் மணத்த கார சுண்டலை சுவைத்தபடி கவுசிக் கேட்டபோது... அலை உயர்ந்தெழுந்து ஆர்ப்பரித்தது.

''மொதல்ல ஒரு ரிக்வெஸ்ட். நானும் எத்தனையோ முறை சொல்லியாச்சு. அதென்ன அவிக்குட்டி? புலிக்குட்டி, பூனைக்குட்டி மாதிரி. நல்லாவேயில்லே!''

''அதுக்கு நான் என்ன பண்ணட்டும்? இருபத்திமூணு வருஷத்துக்கு முன்னாடியே உங்கம்மா, அப்பா யோசிச்சு நல்லப்பேரா வச்சிருக்கணும்''

''அவந்திகான்றது அசிங்கமான பேரா என்ன? அழகா அவந்திகான்னு கூப்பிடலாமே!''

''எந்த லவ்வராவது காதலி பேரை முழுசா சொல்லி கூப்பிடுவானா? மண்டு...!''

''அதுக்காக...?''

''அப்படித்தான் கூப்பிடுவேன். எனக்கு பிடிச்சிருக்கு. கல்யாணத்துக்கு பிறகு வேணும்னா மாத்திக்கலாம். இதை விடு. நான் கேட்டதுக்கு பதில்! உனக்கு போர் அடிக்கலியா?''

''எதுக்கு?''

''வாரத்துல மூணு நாள் மீட் பண்றோம். அந்த மூணு நாளும் இதே பீச்ல தான்! இதே சுண்டல் முறுக்கு தான். அலுக்கலையா உனக்கு? எனக்கு அலுத்துப்போச்சு'' என்றான் சலிப்பாக.

அவந்திகா பதில் சொல்வதற்குள்... கவுசிக் பற்றி!

வசீகரமான ஆறடி இளைஞன். டி.வி. சீரியலில் கதாநாயகனாக முயற்சிக்கலாம். அம்மா, தங்கை மட்டுமே. சிரமப்பட்டு லஞ்சம் கொடுத்து மத்திய அரசுப்பணியில் அமர்ந்து விட்டான். நடுத்தரக்குடும்பம்.

''அதுக்காக நீங்க கூப்பிடற இடத்துக்கெல்லாம் வந்துட முடியுமா?''

''எந்த லவ்வர்தான் சினிமாவுக்குப் போகலே?''

''சினிமான்னா ஆபீசுக்கு லீவு போடணும். லீவு போட்டா சம்பளத்துல பிடிப்பாங்க. லாஸ் ஆப் பேன்னா வீட்லத் தெரிஞ்சுடாதா? அதுவும் அம்மாவும், நானும் ஜாயிண்ட் அக்கவுண்ட்!''



''அதைக்கூட சமாளிக்க முடியாதா? சரி... சினிமா வேணாம். ஒரு பீட்ஸா கார்னர், காபி ஷாப்... அல்லாமல்... இப்படி எங்கேயும் வரமாட்டேங்கறே! கேட்டா அங்க வர்றப்பொண்ணுங்க ஜீன்ஸ், மிடி, டாப்ஸ்ன்னு டிரஸ் பண்ணிக்கிட்டு ஸ்டைலா இங்லீஷ் பேசவாங்க. எனக்கு படபடன்னு வேகமா இங்லீஷ் பேச வராது. அந்த மாதிரி டிரஸ் பண்ணவும் தெரியாதுன்னு ஒதுங்கிப்போறே. பிராக்டிகலா இரு அவிக்குட்டி. அணியற உடை மனசோட வெளிப்பாடு தான். எனக்கு உன் மனசு பிடிச்சிருக்கு. உன் உடையும் பிடிச்சிருக்கு. நான் குடும்பம் நடத்தப்போற பொண்டாட்டி சேலையும், சல்வாரும் அணியறதே போதும். இங்லீஷ் நாலெட்ஜ் இருந்தா... எப்ப வேணாலும் சரளமாப் பேசலாம். ஸோ நீ குறையா நினைக்கிற எதுவும் எனக்குக் குறையா தெரியலே. ஓகே?''

''தாங்க்ஸ் கவுசிக். நீங்க என்னை புரிஞ்சுவச்சிருக்கறதுக்கு அப்புறம் இன்னைக்கு காலைல அம்மா...''

''அழகாப்பேச்சை மாத்தறது மட்டும் கைவந்த கலை உனக்கு!''

''அதெல்லாமில்லே. நான் சொல்றதை கேளுங்களேன்'' என்றபடி கேஸ் பற்றி அம்மா கவலைப்பட்டதையும், அதீத தீவிரம் காட்டுவதையும் சொன்னாள்.

''அண்ணா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் எப்பவும் அதே நினைப்பு அம்மாவுக்கு''

''இருக்கட்டுமே அவிக்குட்டி. அவங்களுக்கு சேர வேண்டியதை உங்களுக்காக வாங்கிக் கொடுக்க போராடறது நல்லதுதானே? சட்டங்கள் புதுபுதுசா வந்துக்கிட்டேயிருக்கு.

கண்டிப்பா உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும் பாரு!''

''அப்படியா சொல்றீங்க..'' என்றாள் வியப்புடன்.

''பார்க்கத்தானே போறே?''

''அப்ப அண்ணன் ஏன் எப்பவும் நம்பிக்கையில்லாமலே பேசறார்!''

''பயந்தாங்கொள்ளிப்போல...''

''சேச்சே... அண்ணன் ரொம்ப ஸாப்ட் நேச்சர். சுய உழைப்பில உயரணும்னு நினைக்கிறவர். என்னைக்கூட மேற்கொண்டு படிக்க சொல்லி வற்புறுத்தறார்.''

''அதெல்லாம் ஒண்ணும் படிக்க வேண்டாம். இப்போதைக்கு ஜாலியா லவ் பண்ண நேரம் ஒதுக்கு.

அப்புறம் என் பேரப்பிள்ளைகளுக்கு நல்ல பாட்டியா, என் குழந்தைங்களுக்கு நல்ல அம்மாவா, என் அம்மாவுக்கு அடக்கமான மருமகளா, நல்லா சமைச்சுப்போட்டு, நான் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைஞ்சுக் கொடுக்கற பொண்டாட்டியா, வீட்டோட இருக்கறதுக்கு இந்த படிப்பே போதும். ஆமா, இதென்ன ஸ்ப்ரே புதுசா?'' அவள் கழுத்தருகே வாசம் பிடித்தபடி கேட்டான்.

''என் கேட்கறீங்க?''

''வழக்கமா யூஸ் பண்ற மாக்ஸ் ஸ்பிரே இல்லே. புது வாசனையா இருக்கு. இங்கே நிறைய அடிச்சியோ கும்முனு வாசனை தூக்குது.'' கழுத்திற்கு கீழே மூக்கை வைத்து உரசினான்.

அவந்திகா சட்டென விலகி அமர்ந்தாள்.

''ம்ஹூம்... இதெல்லாம் வேண்டாம்.''

''எய்... இப்ப என்ன பண்ணிட்டேன்? கிஸ் பண்ணினேனா? இல்லே இங்கே தொட்டேனா? இல்லே...

இதோ இங்கே தான் தொட்டேனா?''

''அய்யோ யாராவது பார்க்கப் போறாங்க. இப்படியெல்லாம் விளையாடாதீங்க... டைமாய்டுச்சு. புறப்படலாம்.''



''வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும்.''

''சார் மாணவர்களான எங்களை உங்களால்தான் அறுக்க முடியும்னு சொல்கிறீங்களா சார்''.

-அசோக்ராஜா. திருச்சி.

''இதிலே மட்டும் தெளிவா இரு. தெரியாமதான் கேட்கிறேன். உண்மையைச் சொல்லணும்.''

''என்ன?'' என்றாள் எழுந்து நின்று பின்பக்க மணலை தட்டிக் கொண்டே.

''நீ வயசுக்கு வந்துட்டியா, இல்லையா?''

''ச்சீ... எவ்ளோ அசிங்கமாப் பேசறீங்க?''

''பின்னே என்ன? ஒரு பீலிங்குமில்லே மண்ணாங்கட்டியுமில்லே. மரக்கட்டையா நீ? உஷாரா இருக்க வேண்டியது தான். அது நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது தான்.

ஆனா நீ கொஞ்சம் ஓவர் இல்லே?''

''இல்லே கவுசிக்! எனக்குள்ளும் ஆசை இருக்கு. அதுக்கு கொஞ்சமே கொஞ்சம் இடம் கொடுத்தால் சாம்பலாகிவிடும். நெருப்பு கூட இருக்கிற பொருளையும் நெருப்பாக்கிடும். என்னைப் புரிஞ்சுக்குங்க.''

''பாரேன் பேச்சுக்கூட பழங்காலத்துப் பொண்ணுங்க மாதிரியே! உடனே கொத்து தண்ணிய ஆத்து வெள்ளமா அடிச்சிட்டு



போய்டும்னு வசனம் பேசிடாதே தாயி. தாங்க மாட்டேன்.'' கையெடுத்து கும்பிட்டான்.

''கிண்டலா?'' பட்டென்று அவன் பின்புறத்தில் அடித்தாள்.

''மை காட்... இன்னொரு முறை அடி!'' இனிய அதிர்ச்சி அவனுக்கு.

''பைக்ல உட்கார்ந்தாக்கூட பேலன்சுக்கு என்னை பிடிச்சுக்காத பைங்கிளி. என் பின் பக்கத்துல அடிக்கற துன்னா சும்மாவா? அடி ப்ளீஸ்!''

''ஐயோ தெரியாம அடிச்சிட்டேன் கௌசிக்... விடுங்களேன்!'' சிணுங்கினாள்.

''விட்றதா? எவ்ளோ பெரிய ஸர்ப்ரைஸ்... இதுக்கே இன்னைக்கு என் பிரண்ட்ஸ் அத்தனை பேருக்கும் டிரீட் தரப் போறேன்!''

அவன் பேசப்பேச... வெட்கத்தில் கூசிப் போனாள்.

அவந்திகாவை வழக்கப்படியே இறக்கி விடற இடத்தில் டிராப் பண்ணி விட்டு அன்றைய சம்பவங்களை அசை போட்டபடி பைக்கை செலுத்திக் கொண்டிருந்தான்.

அவனறியாமல் வாய் விட்டு சிரித்தான்.

கிண்டல் பண்ணுகிறானே ஒழிய.... அவந்திகாவிடம் அவனுக்குப் பிடித்ததே பழமைத்தனம் தான். அவளின் சிணுங்கலும், நழுவலும், ஒதுங்கலும், அவன் மீதான ஆசையை, காதலை அதிகரிக்கவே செய்தது.

பாக்கெட்டிலிருந்த செல்போன் கூப்பிட, பைக்கை ஓரமாய் நிறுத்தி, எடுத்து ''ஹலோ'' என்றான்.

''கௌசிக் நான் தான்!''

''சொல்லு கேசவ்... தெரியுது!''

''எங்கேடா இருக்கே?''

''ஆபீஸ் முடிஞ்சு வீட்டுக்கு போய்ட்டிருக்கேன்!''

''ஆபீஸ் முடிஞ்சு வீட்டுக்கு தான் வந்தேன். நீ வந்திருப்பேன்னு!''

''நான் உன் வீட்டுக்கு தான் வந்தேன். நீ வந்திருப்பேன்னு!''

''கொஞ்சம் வேலை அதிகம் லேட்டாயிடுச்சு. பத்து நிமிஷத்துல வீட்ல இருப்பேன். அங்கேயே இரு...''

''சரி''

கேசவ் பத்து வருட நண்பன். அவசியமில்லாமல் வீடு தேடி வர மாட்டான்.

''என்னவாயிருக்கும்?''

காத்திருந்தவன் முகத்தில் சிரிப்பைத் தாண்டிய பதட்டமும், கவலையும் இருந்தது.

''இரு மச்சான் டிரஸ் மாத்திட்டு வந்திடறேன்.''

''இரு மச்சான் டிரஸ் மாத்திட்டு வந்திடறேன்.'' மொட்டை மாடிக்கு முகம் கழுவி லுங்கிக்கு மாறியவன், அழைத்துச் சென்றான்.

கௌசிக்கின் தங்கை பிரார்த்தனா காப்பியுடன் வந்தாள்.
அவள் போன பின்பு கேட்டான்.

''என்ன கேசவ் டென்ஷனாயிருக்கே?''

''ஒரு ஹெல்ப் வேணும்டா!''

''என்ன சொல்லு?''

''அவசரமா ஒரு மூவாயிரம் வேணும்!''

''மூவாயிரமா எதுக்கு?''

ஆச்சரியத்துடன் கேட்டான்.

## 4

''அந்த சனியனுக்கு திடீர்னு ஷுகர் வந்திருக்கு. நாளைக்கு புல் செக்கப் பண்ண சொல்லி டாக்டர் என் தலையில இடியை தூக்கிப் போட்டுட்டான். போதாததுக்கு குழந்தைக்கு தடுப்பூசி போடணும். எல்லாத்துக்கும் சேர்த்து மூவாயிரம் ஆகும். ரெண்டு மாசத்துல திருப்பிக் குடுத்துடறேன்... ப்ளீஸ்டா மச்சான்.''

''சீச்சீ... எதுக்குடா கெஞ்சறே? தர்றேன். ஆனா, மாலினிக்குப் போய் ஷுகர் வந்திருக்குன்னா நம்பவே முடியலே. இவ்ளோ சின்ன வயசுல வருமா?''

''என் தலை சுழி நல்லா இல்லாதப்ப எல்லாமே வரும்டா!''

''பாவம்டா மாலினி!''

''அவ என் பாவம்? நான் தான்டா பாவம்!
எலலாத் தொல்லையையும் சுமக்கிறேனே... நான் தான் பாவம்!''

''நீ ஏன்டா இவ்ளோ டென்ஷனாகறே? எல்லாம் சரியாப் போகும். வெளியேப் போய்ட்டு வரலாம்.''

''ப.....ண....ம்.!''

''அதுக்கு தான்டா.. ஏ.டி.எம்.ல எடுத்துத் தர்றேன். கிளம்பு!''

''தாங்க்ஸ்டா மச்சான்!'' நெகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டான் கேசவ்.

★★★

மூன்று அறைகள் கொண்ட சற்றே பெரிய வீடு. வழவழப்பான சிகப்பு நிற சிமெண்ட் தரை. ஹால் நடுவில் நீலக்கலரில் பூ வரையப்பட்டு நடுவில் கோலி பொருத்தியிருந்தது. ஹாலில் இருந்த இரண்டு தூண்களும், நீளக்கம்பி வைத்த ஜன்னலும், அந்த வீட்டுக்கு முப்பத்தைந்து நாற்பது வயதிருக்கும் என்றது.

வாசலில் ஒரு பக்கம் முருங்கை மரமும், மறு பக்கம் அருநெல்லி



மரமும், அதோடு பின்னிப் பிணைந்திருந்த குண்டு மல்லி செடியும், அந்த பழங்கால வீட்டிற்கு ஒரு சோலையைத் தந்தது.

முருங்கை மரத்தை ஒட்டி ஒரு கை பம்ப் இருந்தது.

யாரோ பம்ப் அடிக்கும் சப்தம் கேட்டு வெளியில் வந்தாள் காமாட்சி.

பக்கத்து வீட்டு அஞ்சலை குடத்தில் தண்ணீர் அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து முகம் மாறியது காமாட்சிக்கு.

''இது உனக்கே நல்லாயிருக்கா அஞ்சலை?''

''ஏன்க்கா அப்படி கேட்கறே?''

''உன் குடும்பம் நல்லாயிருக்கணும்... என் குடும்பம் நாசமாப் போகணுமா?''

''என்னக்கா இப்படி எல்லாம் பேசறே? அப்படி என்னப் பண்ணிட்டேன் உன்னை?''

''மணி என்ன? எட்டாகப் போகுது. விளக்கு வச்சப்பிறகு இப்படி என் வீட்டு பம்புல என்னைக் கேக்காம தண்ணியடிக்கறே!''

''வீட்டுக்கு வெளியே தானக்கா இருக்கு?''

''வீட்டுக்கு வெளியே இருந்தா... பொது சொத்தாயிடுமா? கவர்மெண்ட்காரனா போட்டுக் கொடுத்தான்? என் பணம், என் இடம். இனி இந்த மாதிரி நைட்ல எல்லாம் தண்ணிப் பிடிக்கிற வேலையே வச்சுக்காதே!''

''சரிக்கா... மன்னிச்சிடு! அதற்கு மேலும் அவளிடம் வாய் கொடுக்க அஞ்சி அகன்றாள் அஞ்சலை.

உள்ளே வந்த அம்மாவிடம் சிடுசிடுத்தாள் பிரார்த்தனா.

''ஏம்மா சாதாரண தண்ணி விஷயம். அதுக்குக் கூட சண்டைப் போடுவியா? நாளைக்கு நமக்கு ஏதாவது ஆபத்து, அவசரம்னா அக்கம், பக்கத்திலே இருந்து தான் உதவி வரும்... அதை மறந்திடாதே!''

''என்னைக்கிடி... நீ என்னைப்பத்தி நல்ல விதமாய் சொல்லியிருக்கே? இதிலே நீ எதுக்கு மூக்கை நுழைக்கிறே? போ... உங்கண்ணன் வந்துடுவான், அதுக்குள்ளே சட்னியை அரைச்சிடு!''

''எல்லாம் அரைச்சாச்சு. மாவு புளிச்சுப் போய் பொங்கி வழியுது. நீ போய் அதுக்கிட்டே ரெண்டு அதட்டு அதட்டி அடக்கி வை!''

''என்னடி, வர வர உனக்கு கிண்டல் அதிகமாப் போச்சு! அம்மாங்கிற மட்டு மரியாதை இலலாம பேசறே?'' காமாட்சி முறைத்தாள்.

''ஐயோ அம்மா அப்படியெல்லாம் எதுவுமில்லே... உன் தவறை சுட்டிக் காட்டினேன். அது தப்பா?''

''நான் உனக்குத்தாயா? நீ எனக்குத் தாயா?''

''சிங்கான கேள்வி ஆளை விடு!''

பிரார்த்தனா அறைக்குள் ஓடிப் போனாள்.

வாசலில் பைக் வரும் சப்தத்தைத் தொடர்ந்து ஷூவை கழற்றிப் போட்டு விட்டு கௌசிக் உள்ளே வந்தான்.

''வீட்டுக்கு வந்ததும், வராததுமா அந்தப் பரதேசி கூட எங்க கிளம்பிட்டே?''

''அம்மா இப்படியெல்லாம் பேசறே? கேசவ்வைப் போய் பரதேசிங்கறே?''

பரதேசின்னு சொல்லாம என்னன்னு சொல்ல? நல்லக் குடும்பத்துல வசதியா பொறந்து, வளர்ந்து, தலையெடுத்ததும் பெத்தவங்களை மறந்து.. ஒரு பன்னாடைக் கூட ஓடிப்போய் என்ன வாழ்ந்து கட்டிக்கிட்டான்? அவன் ஆத்தாக்காரி போன வாரம் கூட மார்க்கெட்ல என்கிட்ட இவனை நெனச்சு அழறா. சரி.. அவன் எதுக்கு வந்தான்? பணம் கேட்டானா?''

''சும்மா பார்க்க வந்தான்மா... நீ வேற குடையாதே... பசிக்குது... என்ன இருக்கு?''

''தோசை... புதினா சட்னி!''

''இன்னிக்கு காலைல, நேத்து நைட்ல, நேத்திக்கு காலைல தொடர்ந்து தோசை தான். சாப்பிட்டுக்கிட்டிருக்கறதா ஞாபகம்!''

''மாவு இன்னும் காலியாகலே. உட்காரு சூடாப் போட்டு எடுத்துட்டு வர்றேன்!''

உடை மாற்றி அமர்ந்தவனின் முன் தட்டில் சூடாய், வட்டமாய் வந்து விழுந்த தோசையின் வாசத்தில் புளித்த வீச்சம்.

பிய்த்து வாயில் வைத்தவனின் முகம் கோணியது.

''என்னம்மா இது... ரொம்பப் புளிக்குதே!''

''சட்னியா? ஏன்டி... எக்கச்சக்கமா புளிய வச்சு அரைச்சுத் தொலைச்சிட்டியா?''

''சட்னி நல்லா தான் இருக்கு. தோசை தான் ரொம்ப புளிக்குது.''

''மூணு நாளாயிடுச்சுன்னா மாவு புளிக்க தானே செய்யும்?''

''அதுக்கு தான் பிரிட்ஜ் வாங்கித் தர்றேங்கிறேன். வேணாங்கறே!''

''நமக்கு பிரிட்ஜ் எதுக்கு? அதை உன் தங்கச்சி கல்யாணத்துக்கு வாங்கிக்குடு. இந்த வீட்டுக்கு தேவையான சீர் செனத்திய... உன்னைக் கட்டிக்கப் போறவ கொண்டு வரட்டும்.''

''இப்படி பேசறது தப்பும்மா. இந்த காலத்துல ஒரு மிடில் கிளாஸ் பேமிலி தங்களோட சம்பாத்தியத்துல மூணு வேளை நல்ல சாப்பாடு சாப்பிடறதே பெரும்பாடா இருக்கு. நீ என்னடான்னா வீட்ல மிக்ஸி, கிரைண்டர் தவிர, ஒரு கட்டிலோ, பிரிட்ஜோ, வாஷிங்மெஷினோ வாங்க விடாம வீட்டுக்கு வரப்போற மருமக கொண்டு வரட்டும்னு வீட்டையே காலியா வச்சிருக்கே. பாவம்மா.!''

''பாவமாவது, புண்ணியமாவது, வரப்போறவளுக்காக இப்பவே வக்காலத்து வாங்காதே! உன் பொண்டாட்டி கொண்டு வர்ற



''பத்து வருஷமா தவறாம பிச்சை போடுறீங்க...நன்றிக்கடனா இதை வச்சிக்குங்க தாயி!''

''என்னப்பா...இது?''

''ஒரு சினிமா தியேட்டர் கட்டி இருக்கேன்... படம் பாக்க இலவச பால்கனி டிக்கெட்''.

- ச.ஆ.கேசவன்,
கோவில்பட்டி.



வரதட்சணையை வச்சு தான் பிரார்த்தனாவோட கல்யாணத்தை நடத்தப் போறேன்.''

''அம்மா நீ பேசறது உனக்கே அசிங்கமாயில்லே? நீ பெத்தப் பொண்ணை கரை சேர்க்க யாரோ ஒரு தகப்பன் கஷ்டப்பட்டு சம்பாதிச்சுக் கொடுக்கணுமா? அதை விட நான் கடைசி வரை இப்படியே இருந்துடலாம்!''

''வயசுப் பொண்ணு இவ்ளோ பேசக் கூடாது. வாயை மூடு! இந்த காலத்துல எத்தனை பேருக்குடி சொந்த வீடு இருக்கு? வாடகை வீட்லேயே கடைசி வரை காலம் தள்றவங்க நிறைய பேர். ஒரு வேளை இந்த வீட்டுக்கு வரப்போறவளோட பிறந்த இடம் வாடகை வீடா இருந்தா அவ அதிர்ஷ்டசாலி தானே? நமக்கென்னடி விசாலமான வீடு அதுவும் சொந்த வீடு.

எனக்கப்புறம் ஆளப்போறவ அவ தானே? அதுக்காக அவளைப் பெத்தவன் கஷ்டப்படறதிலே தப்பேயில்லே. ராஜா மாதிரி பிள்ளையை பெத்து வச்சிருக்கேன் பாரு... மகாராணி மாதிரி ஒரு மருமகளை கொண்டு வர்றேனா, இல்லையான்னு?''

கௌசிக்கும், பிரார்த்தனாவும் சலிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அம்மா எப்பப் பார்த்தாலும் இதே பேச்சு தானா? தோசையும் புளிக்குது... அதை விட உன் பேச்சும்... அண்ணா நான் என் ரூம்லேயே போய் சாப்பிட்டுக்கறேன்.'' தட்டுடன் உள்ளே எழுந்துப் போனாள் பிரார்த்தனா.

''கொழுப்பு ஜாஸ்தியாய்டுச்சு... வேறென்ன சொல்ல?'' சிடுசிடுத்தபடி உள்ளேச் சென்றாள் காமாட்சி.

உள்ளே சிரித்தபடி சென்ற பிரார்த்தனா கல்லூரியில் இறுதியாண்டு பி.பி.ஏ. படிக்கும் அழகான... நல்ல பெண்!

## 5

''டைமாச்சு. சீக்கிரம் எடுத்துட்டு வா... சாப்பிட்டுட்டு கிளம்பணுமில்லே? செகண்ட் ஹேண்ட்ல வாங்கின பைக்கையும் வித்தாச்சு. பஸ்ல போய், ரயிலைப் பிடிச்சு... தாம்பரம் போகணும்... சீக்கிரம்!'' கேசவ் பரபரத்தான்.

ஒரு ஹால் கொஞ்சமே விஸ்தாரமாய் இருந்தது. அது தான் பெட்ரூமாகவும் இருந்தது. ஒரு பாத்ரூம், சமையலறை! அவ்வளவு தான். அதற்கே ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாடகை! தவிர கரண்ட்டுக்கும், தண்ணீருக்கும் தனியாக வசூலித்தார்கள்.

கேசவ் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்தான். அவன் வாங்கும் ஆறாயிரம் ரூபாய் சம்பளத்தில், வீட்டு வாடகை, சாப்பாடு, போக்குவரத்து செலவு, மருத்துவ செலவு என முழி பிதுங்கிப் போயிற்று. மாதா மாதம் கடன் வாங்கினாலே ஒழிய சேமிப்பு என்று எதுவும் இல்லை.

''வந்தியா?''

''இதே வந்துட்டேங்க!'' சமையல் பாத்திரங்களோடு அருகில் அமர்ந்தாள். மாலினி.

தட்டை வைத்துப் பரிமாறினாள்.

''என்ன சமையல்.

''ரசம்... அவரைக்காய் பொரியல்!''

''தலைவிதிடா சாமி!'' நெற்றியில் அறைந்துக் கொண்டான்.

மாலினி பரிதாபமாய் விழித்தாள்.

''என் நேரத்தைப் பார்த்தியா? டிபன்னு ஒண்ணு இருக்கறதையே மறந்தாச்சு. மூணு வேளைக்கும் ஒரே சாப்பாடு போடு என் மூஞ்சியையே பார்த்திட்டிருந்தா என்ன அர்த்தம்?'' சிடுசிடுப்பாய் கேட்டான்.

எச்சிலை விழுங்கிக் கொண்ட மாலினி பவ்யமாய் பரிமாறினாள்.

வேண்டா வெறுப்பாய் பிசைந்து சாப்பிட்டவன், ''இந்த அவரைக்காயை பொரியல் தவிர வேற மாதிரி சமைக்கத் தெரியாதா?''

''சமைக்கிறேங்க.''

''தினத்துக்கும் ஒரே மாதிரி சமையல்.

எப்படி இருந்தவன் நான்? காலைல விதவிதமாய் டிபன், கறியும், மீனும் இல்லாம மதிய சமையலே கிடையாது.

எல்லாமே ரெண்டு மூணு வருஷத்துல தலை கீழா மாறிப்போச்சல்லா?'' இடது கையால் ஷேவ் பண்ணாத தாடையை சொறிந்துக் கொண்டான்.



மாலினி... மதிய உணவடங்கிய சின்ன டிபன் கேரியரை அவன் வழக்கமாய் எடுத்துப் போகும் பேகில் வைத்தாள்.

இளைத்து, கறுத்து, முடிக்கொட்டி, மெலிதாகிப்போன பின்னலுடன் வசீகரம் தொலைத்திருந்த மாலினியை வெறுப்பு மண்டிய பார்வையுடன் நோக்கினான்.

உத்திரத்தில் மாட்டியிருந்த தூளி லேசாய் ஆடத்தொடங்கி... சிணுங்கி அழ ஆரம்பித்தது குழந்தை.

''இதோ இதோ அம்மா வந்துட்டேன்டி செல்லம் போட்டுக்கறீங்களா?''

''நீ போ நான் போட்டுக்கறேன்!''

''என் கண்ணம்மாவுக்கு பசிக்குதா. ஒரு நிமிஷம் பொறுத்துக்குவியாம்... அம்மா பால் எடுத்துட்டு வருவேனாம்!'' தூளியிலிருந்த குழந்தையை தரையில் அமர வைத்து விட்டு, சமையலறைக்குள் ஓடினாள் மாலினி.

தரையில் அமர்ந்திருந்த ஒன்னே கால் வயது சவுந்தர்யா தந்தையைப் பார்த்து சிரித்தது.

சிரிக்கக் கூட பொறுமையின்றி அதன் கன்னத்தை லேசாய் தட்டிக் கொடுத்து அவசரமாய் சாப்பிட்டான்.

பால் பாட்டிலோடு வந்த மாலினி குழந்தையை மடியில் இருத்திப் புகட்டினாள்.

''பத்து மணிக்கு நானும் ஜி.எச். போறேங்க.''

''எதுக்கு?''

''மந்திலி செக்கப். ஷுகருக்கு மாத்திரை வாங்கிட்டு வரணும்!''

''சரி ''சட்டை பொத்தானை மாட்டிக் கொண்டு, சட்டையை முழங்கை வரை மடித்து விட்டான்.

''அப்பவே.. தலை தலையாய் அடிச்சுக்கிட்டேனே மாலினி... என் பேச்சைக் கேட்டியா?''

''எ... என்னங்க?'' குழந்தைக்கு பால் புகட்டுவதை நிறுத்தி விட்டு கணவனை ஏறிட்டாள்.

''லவ் பண்ணிட்டோம்ங்கறதுக்காக கல்யாணம் பண்ணியே ஆகணும்னு கழுத்துல கத்திய வச்சியே.

இப்பப் பார்த்தியா. தினமும் ரசமும், அப்பளமும் தான் சாப்பிடற மாதிரி வாழ்க்கைன்னு ஆகிப்போச்சு. இப்ப ஒரு உண்மையை சொல்றேன் கேட்டுக்கோ.

ஆரம்பத்திலேர்ந்தே வீட்ல பார்க்கிற பொண்ணை தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு தீர்மானமா இருந்தேன். பொண்ணும், பொருளும், சீர, கவர்ன்மெண்ட் வேலையும் தர போட்டிப் போட்டாங்க. ப்ச் எல்லாம் மாறிப்போச்சு.

''.......?!''

''உன் கூட ஆரம்பத்துல வெறும் ஃப்ரண்ட்ஷிப்போட தான்

பழகினேன். நல்லா யோசிச்சுப்பார்... முதல்ல நீ தான் ப்ரபோஸ் பண்ணினே. நான் கூட இதெல்லாம் சரி வராதுன்னு சொன்னேன். அதுக்கப்புறம் நாளடைவில் ஒரு சலனம் மனசுக்குள்ளே உண்டாச்சு. எந்த நேரத்துல... எப்ப உன் கிட்ட நானும் ஐ லவ் யூன்னு சொன்னேன்னு எனக்கே இப்ப ஞாபகம் இல்லே. வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டோம் இப்ப?



> ''இன்னைக்கு மழை பெய்யுமாம்... ரேடியோவில் சொன்னாங்க.''
> ''நீங்க கேட்டீங்களா?''
> ''அவங்க தான் சொன்னாங்க!''
> - அசோக்ராஜா, திருச்சி.

என்ன வாழ்க்கை இது? காதல், கன்றாவின்னு மனசை அலை பாய விட்டதால நீயும் நல்லாயில்லே நானும் நல்லாயில்லே! காதல்னு ஒண்ணை கண்டுபிடிச்சவன் இப்ப மட்டும் என் எதிரே வந்தான்னா அவனை கொலைப் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போகக் கூட தயங்க மாட்டேன்.''

எரிச்சலும், வெறுப்புமாய் பேசி விட்டு, அவளிடம் சொல்லிக் கொள்ளாமலே அலுவலகம் புறப்பட்டுச் சென்றான் கேசவ்.

மாலினி திகைப்புடன் வாசலையேப் பார்த்தாள்.

சமீப காலமாய் கேசவ்வின் பேச்சு இந்த ரீதியில் தான் இருக்கிறது. சலிப்பும், எரிச்சலும் பேச்சில் விஞ்சி நிற்கிறது. திருமணமான ஏழெட்டு மாதம் வரை எல்லா காதல் வயப்பட்ட கணவனைப் போல் தான் அவனும் இருந்தான். ஆனால் திருமணமாகி நான்காவது மாதத்திலேயே கருவுற்றாள்.

மகிழ்ந்தான்.

இரண்டு பக்கமும் அவர்களை ஏற்றுக் கொள்ளாததால் யாருடைய உதவியுமின்றி தன் சுய உழைப்பால் குடும்பத்தை நடத்திய போது அவனுக்கும் பெருமையாக தான் இருந்தது.

ஆனால், அதன் பிறகு தான்... அவனுக்கு கஷ்டம் ஆரம்பமானது. மாலினிக்கு கர்ப்ப கால சர்க்கரை நோய் இருந்ததால் காலை, இரவு இரண்டு வேளையும் இன்சுலின் இன்ஜெக்ஷன் போட வேண்டிய சூழ்நிலை.

வயிற்றிலிருக்கும் குழந்தைக்காகவும், மருந்து, ஊசி என்று ஏகமாய் செலவாக வட்டிக்கு கடன் வாங்கினான்.



பிறந்ததும் பெண்ணாய் இருக்க அவன் கவலை அப்போதே ஆரம்பித்தது.

அவன் வயதொத்த நண்பர்கள் வசதியான இடங்களில் பெண் பார்த்து கல்யாணம் பண்ணி, வீடு, கார் என்று செட்டிலாகி விட, அவர்களிடமே கைக்கும், வாய்க்கும் எட்டாமல் கடன் வாங்க கை நீட்டிய போது தான், வாழ்க்கையின் யதார்த்தமும், காதல் என்பது காற்றடைத்த பலூன் எனவும் புரிந்தது போல் உணர்ந்தான்.

குழந்தைப் பிறந்த பிறகும் ஏற்றுக் கொள்ளாத பெற்றோர் ஒரு பக்கம். மாலினி வீடு நடுத்தரவர்க்கம் தான் ஜாதியும், கவுரவமும் இரு கண்கள் என நினைக்கும் பெற்றோர். மாலினிக்கும் பிறகு இரண்டு தங்கைகள் வேறு. அதனால் அவளை ஒரேடியாய் தலை முழுகி விட்டார்கள்.

கேசவ் மாறிப்போனான். வேலை முடிந்தும் வீட்டிற்கு வரப்பிடிக்காமல் வெளியில் அலைந்து இரவில் பதினொன்று, பனிரெண்டு மணியென வீடு திரும்புவது வாடிக்கையானது.

குழந்தை பிறந்ததும் சர்க்கரை வியாதி போய் விட்டிருந்தது மாலினிக்கு. ஆனால் குழந்தைக்கு ஒரு வயதானதும் மறுபடியும் அந்த நோய் வந்து விட்டது.

கவலை, போதிய சத்தான உணவின்மை, உறக்கமின்மை என்று... வலிய நோய் வந்து ஒட்டிக் கொண்டது.

மேலும் செலவு காதல் மட்டுமல்ல... மனைவியும் கசந்துப் போனாள் கேசவ்விற்கு.

ஆரம்பத்தில் அவன் பேச்சும், உதாசீனமும் மாலினியை ரொம்பவே இதயத்தை அறுத்துக் கொன்றது.

இப்போது பழகி விட்டது.

ஆனால், ஒன்று மட்டும் தான் புரியவில்லை.

'அவளின் எதிர்காலம் எப்படியிருக்கும்?''

மடியிலிருந்த குழந்தை அவளைப் பார்த்து சிரித்தது. தன்னை மறந்து அவளும் புன்னகைத்தாள். அவள் மனக்காயம் போக்கும் அருமருந்து அச்சிரிப்பு மட்டும் தான்!



## 6

அம்மாவின் சில நடவடிக்கைகளுக்கு முகம் சுளிப்பானே ஒழிய கௌசிக் அவளை எதிர்த்து ஒரு வார்த்தை பேச மாட்டான். அந்தளவு தைரியமெல்லாம் கிடையாது. பிரார்த்தனா அவனுக்கும் சேர்த்து வைத்துப் பேசும் தைரியசாலி.

அம்மாவிடம் தன் காதல் விஷயத்தை

எப்படி சொல்வது என்று தொடை நடுங்கிக் கொண்டிருப்பவன். அதே சமயம் சில விஷயங்கள் அவள் பேசும் போது எரிச்சலை தந்தாலும், ஆழ்ந்து சிந்தித்தால் அதில் நியாயம் ஒளிந்திருப்பதையும் உணர்வான்.

எனினும் ஒரு தைரியம், நம்பிக்கை!

கண்டிப்பாய் அவந்திகாவின் அம்மா போட்டிருக்கிற கேஸ் அவர்கள் பக்கம் ஜெயிக்கும். அதனால் அவந்திகாவைப் பத்தி பேசும் போது அம்மாவின் எதிர்ப்பு இருக்காது என்று!

அன்று அதிசயமாய் அவன் அழைத்ததும் ரெஸ்டாரண்ட் போக சம்மதித்தாள் அவந்திகா.

''காத்ரீனா புயல் சென்னைக்கு வர வாய்ப்பிருக்கு அவந்தி.''

''சென்னைக்கா? அதுக்கான அறிகுறியே இல்லையே.'

''அதான் நீ ரெஸ்டாரெண்ட் வந்திருக்கியே... இது போதாது!''

''வரலேன்னாலும் தப்பு. வந்தாலும் கிண்டல் பண்றீங்க.!''

''என் பொம்முக்குட்டிய நான் கிண்டல் பண்ணாம வேற யார் பண்ணுவா?''

''சார் செம ஜாலி மூட்ல இருக்கிங்க போல.''

பைக்கை பார்க்கிங் பகுதியில் ஸ்டாண்ட் போட்டு விட்டு, அவளை ஒரு மாதிரி லுக் விட்டான்.

''ஆமா. செம மூட்ல தான் இருக்கேன். இந்த ரெஸ்டாரண்ட் மாடியில லாட்ஜ் ரூம் இருக்கு. ரூம் போட்றவா!''

''ச்சீ... பேச்சைப்பாரு... நான் இப்படியே போய்டுவேன்!''

''ஏய்.... சும்மா விளையாட்டுக்குடா! கல்யாணத்துக்கு முன்னாடி பெரிய தப்பெல்லாம் பண்ற அளவுக்கு சத்தியமா எனக்கு தைரியமில்லே! நீ கேட்டதுக்கு ஜாலியா பதில் சொன்னேன் அவ்வளவு தான்!'

மேற்கு சுவரோட மேஜை காலியாயிருக்க அமர்ந்தனர்.

''இல்லே மதியம் போன் பண்ணினப்ப அப்செட்ல இருந்தீங்க. இப்ப ஜாலியா இருக்கீங்கன்னதும் அப்படிக் கேட்டேன்.''

''ஆமாம் அவந்தி மதியம் பயங்கர டென்ஷன்ல இருந்தேன்.''

''ஆபிஸ்ல பிரச்னையா?''

''ம்ஹூம் என் கூட வொர்க் பண்ற முரளியால....''

''என்னாச்சு?''

''அவன் ஒரு ஏமாளி!''

''சரி!''

''அவங்கம்மா சமீபத்தில இறந்துட்டாங்க. சொந்த வீடு அடமானத்துல இருக்க. கூடப்பிறந்தவங்க ஒரு அண்ணனும், தங்கிச்சியும், வீடு மூணு பேருக்கும் தான்! அண்ணனும், தங்கச்சியும் கொஞ்சம் கஷ்டத்துல இருக்காங்களாம்.

அதனால அவங்கம்மா வீட்டுப்பேர்ல வாங்கின ரெண்டு லட்ச



ரூபாய் இவன் ஆபிஸ்ல லோன் போட்டு மீட்கப் போறானாம்.''

''அதனால என்ன?''

''அதனால என்னவா? வீட்ல மூணுபேருக்கும் உரிமை இருக்கிறப்ப... கடன்லேயும் மூணு பேருக்கும் பங்கு இருக்கு தானே? மத்த ரெண்டு பேரும் கஷ்டப்படறாங்கன்றதுக்காக... இவன் ஏன் மொத்த பாரத்தையும் சுமக்கணும்''?

''கூடப்பிறந்தவங்கன்னா உதவிப் பண்றது தானே நல்லது. இதிலென்ன தப்பிருக்கு?''

''சரியாப் போச்சு. இவன் ஏமாளிங்கறதால அவங்க அப்படி வேஷம் போடறாங்க. ஏன் அவங்க கடன் பட்டுமே! சொத்துக் கிடைக்குதில்லே? அப்புறமென்ன? யார்கிட்டேயாவது வாங்கித் தா வேண்டியது தானே? இல்லையா... வீட்டை வித்து கடனை அடைச்சு... மீதிய ஷேர் பண்ணிக்க வேண்டியது தான்?''

''அதுக்காக வீட்டை விக்கறதா?''

''விக்கலேன்னா.. முரளி ஒரு ஏமாளியாயிடுவான்''.

''சரி... அவர் தான் கூடப்பிறந்தவங்களுக்காக தான் கடன் அடைக்கறேங்கிறாரே... செய்யட்டுமே. இந்த காலத்திலே ஒரு கைப்பிடி நிலம் வாங்கறதே முடியாத காரியம். அதை விட பாக்கறது தலைகீழா நின்னு தண்ணிக்குடிக்கிற மாதிரி. அந்த வீட்டை விக்க சொல்றீங்களே.. தப்பில்லையா?''

''என்ன தப்பிருக்கு? இந்த காலத்திலே அண்ணனாவது தம்பியாவது? அவங்கவங்க சம்பாதிச்சதை பாதுகாத்து வச்சுக்கலேன்னா... உருப்படவே முடியாது. ஒருத்தர் மூலமா ஆதாயம் கிடைக்கும்னா பத்து வயசு இளையவனா இருந்தாக் கூட அண்ணனா ஏத்துக்கலாம், தப்பேயில்லே? சுயநலமா இல்லேன்னா... எதிர்காலத்திலே வானமே கூரைன்னு நடுத்தெருவிலேதான் நிக்கணும்!''

அவன் கருத்தை அவந்திகாவினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பல விஷயங்களில் அவன் கருத்துக்கள் சுயநலமாகவே இருக்கும். வெறும் பணமும், சுயநலமும் மட்டும் தான் வாழ்க்கை என்றால்.... உற்றம், சுற்றம் என்று எதற்கு? அன்பில்லாமல், காசு, பணம் என்று கமர்ஷியலாக வாழ்ந்து விட முடியுமா?'

அவள் பெரும்பாலும் அவன் கருத்துக் களுக்கு எதிர்வாதம் செய்வதில்லை.

இப்போதும் மவுனமானாள்.

''என்ன சாப்பிடறே?''

''ஏதாவது!''

''முரளிக்கு நான் பண்ணின அட்வைஸ் பத்தி என்ன நினைக்கிறே அவந்தி?''

''ரெஸ்டாரண்ட் வந்ததே பெரிய விஷயம். அதிலே முரளியப் பத்தி பேசியே டைமை வேஸ்ட் பண்ணனுமா?''

''அதுக்கில்லே... இதிலே எனக்கென்ன லாபம் சொல்லு? அவன் நல்லாயிருக்கணும்னு தானே சொன்னேன். பட், என் பேச்சையே கேட்க மாட்டேங்கிறான்.''

''ப்ளீஸ்... வேற பேசுவோமே...!''

''ஓகே... ஓகே!''

★★★

''அம்மா.. சப்பாத்தி ரெடி... சாப்பிட வா!''

கிச்சனிலிருந்து குரல் கொடுத்தாள் அவந்திகா.

''.......?!''

பதில் குரல் வராமல் போகவே மறுபடி அழைத்தாள்.

''அம்மா... உன்னைத் தான்... டிவியில சவுண்ட்டை கொஞ்சம் குறை... நான் பேசறது காதிலே விழுதா?''

இந்த முறையும் பதிலில்லை.

பருப்புக் கூட்டை தாளித்து இறக்கி வைத்து விட்டு, கையை கழுவிக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

''எவ்னோ நேரமா கத்த... அம்மா.... என்னம்மா ஆச்சு?''

திடுக்கிட்டவளாய் ஓடி வந்தாள்.

டிவியில் சீரியல் ஓடிக் கொண்டிருக்க, சீதாலட்சுமி சோபாவில் சுருண்டுப் படுத்திருந்தாள்.

''அம்மா... அம்மா!''

''ம்... ம்!''

அம்மாவைத் தொட்டுத் திருப்பியவள் முன்னிலும் அதிர்ந்தாள்.

உடம்பு உலைக்களமாய் கொதித்தது. ''அம்மா.. என்னம்மா உடம்பு இப்படி கொதிக்குது? எந்திரி....''

''மு...டி...ய...லே!''

''என்னாச்சு... நல்லாதானேம்மா இருந்தே?''

''....!''

''இரு.. அண்ணாவுக்கு போன் பண்றேன்!''

தன் செல்போனை எடுத்து உடனடியாகத் தொடர்பு கொண்டாள்.

பத்தே நிமிடத்தில் வீட்டிற்குள் நுழைந்தான் பரமேஷ்வர்.


''என்ன அவந்திகா... என்னாச்சு?''

''தெரியலேண்ணா... திடீர்னு பார்த்தா எக்கச் சக்கமா காய்ச்சல்!''

''நான் ஆபீஸ்லேர்ந்து வரும்போதுக் கூட நல்லாதானே இருந்தாங்க?''

''ஆமாண்ணா.. இப்பதான் நீ வந்துப்போன பிறகு, ஒரு மணி நேரம் கழிச்சு.. அந்த லாயர் என் செல்லுல போன் பண்ணி அம்மாக்கிட்டே பேசணும்னான். அதுக்குப் பிறகு தான் இப்படி. அரை மயக்கத்துல இருக்காங்க.... எந்திரிக்கவும் முடியல...''





''மைகாட்... அந்த லாயர் எதையாவது சொல்லி இருப்பான். பேசிட்டிருக்க நேரமில்லே... நான் போய் ஆட்டோவை அழைச்சிட்டு வந்திடறேன். நீயும் ரெடியாயிரு...''

''சரிண்ணா!''

# 7

ஹார்ட் அட்டாக்!

- டாக்டர் சொன்ன வார்த்தை சின்னது தான். ஆனால் அது அந்த இரு உயிர்களிடத்திலும் ஏற்படுத்திய அதிர்வலை மிகப்பெரியது. ஆபத்தான கட்டத்தை சீதாலட்சுமி தாண்டி விட்டாலும், பிள்ளைகள் இருவரும் நடுங்கிக் கொண்டிருந்தனர்.

பரமேஷ்வர் லாயருக்கு தொடர்பு கொண்டு அம்மாவிடம் பேசிய விஷயம் பற்றி கேட்ட போது தான் அதன் வீரியமும், அம்மாவிற்கு வந்த அட்டாக்கிற்கான காரியமும் புரிந்தது.

கேஸ் இவர்கள் பக்கம் ஆட்டம் கண்டு விட்டது. எந்த ஆதாரமும், சாட்சியும் இல்லாததால் வாரிசுதாரராக இவர்களை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. கேஸ் தோற்று விடும் சூழ்நிலை.

ஜெயிப்போம் என்று இருந்த ஒரே சொத்தையும் விற்று. இது நாள் வரை நிலைத்திருந்த நம்பிக்கை தகர்ந்து விழவும்... மகளின் எதிர்காலம் என்கிற கேள்விக்குறி விஸ்வரூபமெடுத்து... அவள் நெஞ்சில் நிலை கொண்ட தன் விளைவு...

சீதாலட்சுமி இப்போது ஆஸ்பத்திரியில்.

பரமேஷ்வருக்கு கூட அச்செய்தி அதிர்ச்சியாக தான் இருந்தது. அம்மா நம்பிக்கையாய் சொல்லி... சொல்லி... கேஸ் ஜெயித்து விடுமோ என்று கொஞ்சம் நம்பிக்கை இதயத்தின் மூலையில் ஒட்டிக் கொண்டிருந்தது நிஜம்.

பாவம்... அம்மா எப்படி தாங்கிக் கொண்டிருக்க முடியும்?

நான்கு நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை தரப்பட்ட பின்பு வீட்டிற்கு அழைத்து வரப்பட்டாள்.

சுவரோரில் சாய்ந்தமர்ந்திருந்த சீதாலட்சுமியின் கண்களில் கலக்கம்.

அலுவலகத்துக்கு விடுப்பு போட்டு விட்டு அம்மாவை கவனித்துக் கொண்டிருந்த அவந்திகா. அம்மாவுக்கு ஓட்ஸ் கஞ்சி தயாரித்து எடுத்து வந்தாள்.

மகளையே பார்த்திருந்த சீதாலட்சுமி கண்கலங்கினாள்.

''அம்மா... இதை சாப்பிட்டுடு...'' முக்காலியை அவள் முன்





''என்னடி இது உன் வீட்டுக்காரர் அடிக்கடி சக்கரை டப்பாவை திறந்து பாக்கிறார்?''

''டாக்டர் தான் 'சுகர் இருக்காறு' அடிக்கடி பார்த்துக்கச் சொன்னாராம்டி''

-அசோகராஜு, அரவக்குறிச்சி.

இழுத்து அதன்மேல் கஞ்சி கிண்ணத்தை வைத்தவள் அம்மாவைப் பார்த்து திடுக்கிட்டாள்.

''என்னம்மா.. ஏன் கண்ணு கலங்கியிருக்கு? நெஞ்சுவலிக்கிற மாதிரி இருக்கா?''

கேட்டதும் தான்.. அடுத்த கணமே அவளிடமிருந்து கேவல் வெளிப்பட்டது.

பயந்துப் போனவள், ''அண்ணா... இங்கே வாயேன்'' என்றழைத்தாள்.

பதட்டமான குரலுக்கு பத்தே நொடியில் அங்கிருந்த பரமேஷ்வர் அலுவலகம் போகும் அவசரத்தில் இருந்தான். சட்டையின் ஒரு கை மட்டும் மாட்டப்பட்டிருந்தது.

''என்ன... என்னாச்சு அவந்தி?''

''என்னன்னே தெரியலே... அம்மா அழுறாங்க...''

''ஏம்மா... என்ன செய்யுது? ஹாஸ்பிடல் போகலாமா?'' தங்கைக்கு மேல் பதறினான்.

''இ... இல்லே... எ... எனக்கு ஒன்னும் இல்லே!''

''சரி... ஏன் அழுறே?''

''நான் பாடுபட்டதெல்லாம் பாழாப்போயிடுச்சே பரமு?''

''ப்ச்... டாக்டர் என்ன சொல்லி அனுப்பினார்!

இப்படியெல்லாம் எமோஷனலாகக் கூடாதுன்னு தானே? உன் உடம்பை நீயே கெடுத்துக்கறியேம்மா! எதையும் நினைக்காதே!''

''எப்படி முடியும் பரமு? என் பொண்ணு கொடி மாதிரி வளர்ந்து நிக்குறாளே! அவளை கரையேத்த வேணாமா? அந்தக் குடும்பத்துக்கு தெரியாதா உங்களுக்கு இருக்கிற உரிமை எல்லாம்? படுபாவிங்க.

நியாயம், நேர்மை எல்லாம் சட்டம் பார்க்கறதில்லையா? பணக்காரங்களுக்காக மட்டும் தான் நீதிமன்றமா? அவங்களை மாதிரி சட்டத் தோட வாயை அடைக்க என்கிட்ட பணமில்லையே! இருந்த ஒரு சொத்தையும் வித்துட்டேனே! பொட்டப்புள்ளயை எப்படி கரையேத்தப் போறேன்?''

''அம்மா திரும்ப.. திரும்ப அதையே ஏம்மா பேசிட்டிருக்கே? இன்னும் ஜட்ஜ்மெண்ட் வரலே! நீயே ஏன்

கற்பனைப் பண்ணிக்கறே?''

''நீதிபதி சொல்லிதானா தீர்ப்பு தெரியனும்? தெரிஞ்சுப் போச்சே? பரமு இப்படிப் பண்ணினா என்ன?'' அதான்

''எப்படிம்மா?''

''நான் நேராப் போய் அவங்க கால்ல விழுந்து, எங்களுக்கு சேர வேண்டியதுல பாதியாவது குடுங்கன்னு கேட்கட்டுமா? தரமாட்டாங்களா என்ன?''

பரிதாபமாய் கேட்ட தாய் முன் மண்டியிட்டு அமர்ந்தான் பரமேஷ்வர்.

''எதுக்கும்மா... நீ எம்மா அவங்க கால்லப் போய் விழனும்? என்ன அவசியம் வந்துச்சு? அப்படிப்பட்ட பணம் என்னத்துக்கு?'' உணர்ச்சி மேலிடக் கேட்டான்.

''அவந்திகாவை கரையேத்தனுமே பரமு?''

''அவ உனக்கு மட்டும் மகள் இல்லே. எனக்கு தங்கையும் கூட! நானில்லையாமா உங்களுக்கு? என் தங்கச்சிக்கு கல்யாணம் பண்ண எனக்குத் தெரியாதாம்மா?''

''நீ எப்படிப்பா சமாளிப்பே?''

''அந்த கவலை உனக்கு வேணாம்மா! இன்னொன்னையும் சொல்லிடறேன். அவந்திகாவுக்கு கல்யாணம் பண்ணாம... நான் பண்ணிக்க மாட்டேன்!''

''ப..ர...மு.!''

''அ...ண்....ணா!''

★★★★

''இப்ப எப்படியிருக்காங்க உங்கம்மா!'' கிளிஞ்சல்களைப் பொறுக்கி அலைக்குள் எறிந்தபடி கேட்டான் கவுசிக்.

''பரவாயில்லே... ஆனா எப்பவும் என்னைப் பத்தியே நினைச்சு.. நினைச்சு கவலைப்படறாங்க.''

''அது எல்லா அம்மாங்களுக்கும் உண்டான பயம். இயற்கையான, நியாயமான கவலைதானே?

எங்கம்மாவும் என் தங்கச்சியை நினைச்சு கவலை படறாங்க. என் கல்யாணம் மூலமா அவளை கரையேத்த நினைக்கிறாங்க. இதுவும் நியாயமான எதிர்பார்ப்புதானே?''

''......?!''

''என்ன அவந்தி அப்படிப் பார்க்கிறே?''

''ஒ.. ஒண்ணுமில்லே!''

''உங்கம்மாவுக்கு நீதான் ஆறுதல் சொல்லனும், நம்பிக்கை தரனும்... என் மனசு சொல்லுது.. கேஸ் உங்க பக்கம் ஜெயிக்கும் பாரேன்!''

''சப்போஸ் ஜெயிக்கலேன்னா?''

''அந்த பேச்சுக்கே இடமில்லை... கண்டிப்பா ஜெயிக்கும்''



திரும்ப திரும்ப அவன் அதையே பேச, அவந்திகாவிற்கு சங்கடமாய் இருந்தது. மனதின் பாரம் கூடியது. பயம் வேர் விட்டது.

கேஸ் ஜெயிக்காமல் போனால் கவுசிக்கின் நடவடிக்கை என்னவாய் இருக்கும்?

'வேண்டாம்... கண்டதையும் நினைத்து அவநம்பிக்கையை மனதில் விதைக்க வேண்டாம்.

கவுசிக் எப்பவும் இப்படித்தான்.. யதார்த்தமாய் பேசும் வெளிப்படையான ஆண்! ஆனால், என் மீது உயிரையே வைத்திருப்பவன்!''

தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டவளின் முகம் தெளிவை பூசிக் கொண்டது.

''என்னண்ணா... ரெண்டு சப்பாத்திதான் சாப்பிட்டே... எந்திரிச்சிட்டே?'' ஆச்சரியமாய் கேட்டாள் அவந்திகா.

''போதும் அவந்தி... சவ்னிங் ஒரு பிரண்டோட லைட்டா டிபன் சாப்பிட்டேன்.'' என்றான் பொய்யாய்.

''ஆனாலும், கொஞ்ச நாளா நீ சரியாவே சாப்பிடறதில்லேண்ணா!''

நிஜம் தான்! அவன் பசி உணர்வே மரத்துப் போய் விட்டிருந்தது.

அம்மாவை அவன் தேற்றினாலும், அவனுள் அந்த கவலையும், பயமும் மிகுந்திருந்தது.

''அவந்திகாவை நல்ல இடத்தில் மணமுடிக்க வேண்டும். இப்போதுள்ள விலைவாசியில் ஒரு குண்டுசி வாங்க வேண்டும் என்றாலும், சேமிப்பு என்று இருந்தால் தான் சாத்தியம். இருந்த ஒரு சொத்தையும் கேஸிற்காக வித்தாயிற்று. இனி அவனின் சம்பாத்தியத்தை சேமித்து வைத்தால்தான் முடியும். குறைந்த பட்சம் நான்கு லட்சமாவது தேவைப்படும். எந்த காலத்தில் சம்பாதித்து கரையேற்றுவது வயதாகி விடுமே!''

''என்ன செய்து சம்பாதிப்பது?''

''எப்படியாவது.. எப்படியாவது என் தங்கைக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து தந்தே தீர வேண்டும்!''

## 8

கவுசிக் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்தான். மனம் அதில் லயிக்கவில்லை. அவன் எண்ணமெல்லாம் அவந்திகாவிடம் சென்றது.

''ஒரு வேளை அந்த கேஸ்

தோற்றுவிட்டால்?'' அவந்திகாவை கட்டின புடவையோடு நான் ஏற்றுக் கொள்வேன். அம்மா ஏற்றுக் கொள்வாளா? பிரார்த்தனாவிற்கு திருமணம் செய்ய... என் திருமணத்தை அல்லவா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்? என்ன செய்யப்போகிறேன்?''



''அண்ணா பால்!'' பிரார்த்தனா பால் தம்ளரை நீட்டினாள்.

''....?''

''அண்ணா உன்னைத்தான்!''

''அ.. என்ன பிரார்த்தனா?''

''பால்!''

''தாங்க்ஸ்'' வாங்கிக் கொண்டான்.

''ரொம்ப குழப்பமா இருக்கே போலிருக்கே?''

''சேச்சே... எதுக்கு?''

''எப்படிடா... அம்மாவை சம்மதிக்க வைக்கறதுன்னு''

''எதுக்கு சம்மதிக்க வைக்கணும்?''

''உன் லவ்வரை கல்யாணம் பண்ணிக்கறதுக்கு!'' குடித்துக் கொண்டிருந்த பால் புரையேறியது.

''மெதுவா...''

''ஏய்... என்ன சொல்றே நீ?''

''இன்னைக்கு அவங்க போட்டுட்டு இருந்த பிங்க் கலர் சுடிதார் அம்சமாயிருந்தது''.

''ஏய்... நீ என்ன சொல்றேன்னேப் புரியலே''

''அறுதப் பழசான டயலாக் இது ! நீ ஒரு பொண்ணை டாவடிக்கிற விஷயம் எனக்கு எப்பவோ தெரியும். நாலஞ்சு முறை உங்க ரெண்டுபேரையும் சேர்த்துப் பார்த்திருக்கேன். பீச்சை தவிர வேறெங்கேயும் கூட்டிட்டுப் போக மாட்டியா? எப்பப்பார்த்தாலும் பீச்சு... அலுக்கலே உங்களுக்கு!''

''ஏய்.. நீ எப்படி அங்கே?''

''லாஸ்ட் அவர் போராடிக்கறப்ப என் பிரண்ட்ஸோட மெரீனா வருவேன். அப்பதான் அண்ணியப் பார்த்தேன்... அவங்க பேரென்ன?''

''எங்க வீட்டு நாய்க்கு நன்றியே கிடையாது!''.

''என்ன விஷயம்?''

''நான் போட்ட சோத்தை தின்னுட்டு என் மாமியாரைக் கடிக்காம எதிர்வீட்டுக் காரிபோட மாமியாரைக் கடிச்சிருக்கு!''.

-நாகலட்சுமி கருணாநிதி,
வந்தவாசி.



''அதெல்லாம் எதுக்கு உனக்கு... போ!''

''ஏன்... எரிஞ்சு விழறே? நான் உன் சைட் தான்... ஓகேவா? பார்த்தா மிடில்கிளாஸ் மாதிரி தெரியறாங்க. ஐ லைக் ஹர். அம்மா ஒத்துக்கலேன்னா... ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்க... கைவிட்றாதே!''

''பிரார்த்தனா.. உன் வேலைய மட்டும் பாரு... போ!'' அழுத்தமாய் சொன்னான்.

''வர வர நீயும் அம்மாவை மாதிரி சிடுமூஞ்சியா மாறிட்டு வர்றே!'' சலிப்புடன் வெளியேறினாள்.

'போச்சுடா... இவளுக்கும் தெரிஞ்சு போச்சா?'

அன்று முஸ்லிம் பண்டிகையையொட்டி அரசு விடுமுறை.

வீட்டிலிருக்க போரடித்தது. கேசவ்வை பார்த்து வரலாமே என்று தோன்ற அவன் வீட்டிற்கு பைக்கை செலுத்தினான் கவுசிக்.

வாசலில் பைக் நிற்கும் போதே... ''சனியனே.. இருக்கிற செலவு போதாதுன்னு.. இதுவேறயா... சே.. விடா இது?'' என்று எரிந்து விழுந்த கேசவ்வின் குரல் வரவேற்றது.

''குழந்தைக்கு என்னங்க தெரியும்? நீங்க இல்லே பத்திரமா வச்சிருக்கணும். அதுக்குப் போய் சனியன்னு திட்றீங்க?''

''அப்படியென்ன வெட்டி முறிக்கிற சமையல் பண்றே? அதே சாம்பார்... காய்ஞ்சு போன ஏதாவதொரு காய்கறி பிரட்டல்... இதுதானே! குழந்தைய இடுப்பிலே வச்சுக்கிட்டு செய்யறது தானே?''

''குழந்தைக்கு இருமல் வேற... எண்ணெய் நெடி ஆகாது!''

''எல்லாத்துக்கும் ஒரு பதிலை ரெடியா வச்சுக்கத் தெரியுது... உன் குழந்தைக்கு செல்போனை எடுத்து சொம்புத் தண்ணிக்குள்ள போடக்கூடாதுன்னு சொல்லி வளர்க்கத் தெரியாதா?''

''கேசவ்...!''

''யாரு?'' அர்ச்சனையை பாதியில் நிறுத்திவிட்டு வாசலுக்கு வந்தவன் ஆச்சர்யமும், திகைப்புமாய் ''கவு...சி...க்!'' என்றான்.

''நல்லாருக்கியா? இதான் உன் பொண்ணா? ஸாரிடா... குழந்தைக்கு எதுவுமே வாங்காம வந்துட்டேன்!''

''பரவாயில்லே.. உள்ளே வா! ஏய் மாலினி... காபி போடு!''

''ப்ளீஸ்... வரும்போதே சாப்பிட்டுட்டு தான் வந்தேன்... வேண்டாம்!''

''வாங்க!'' என்று புன்னகைத்தாள் மாலினி.

''நல்லாருக்கீங்களா?'' என்றவனுக்கு அவளைப் பார்க்கையில் பாவமாக இருந்தது.

திருமணமான புதிதில் அவளைப் பார்த்திருக்கிறான். அப்போதைக்கு இப்போது உருவத்தில் ஏகப்பட்ட வித்தியாசம் சோர்ந்து இளைத்துப் போயிருந்தாள்.

சம்பிரதாய பேச்சுக்களிடையே வீட்டின் ஏழ்மையை

கவலிக்காமல் இல்லை.

கேசவிற்கு ஒரு பக்கம் உதைப்பாக இருந்தது.

கடனாக கொடுத்த பணத்தை கேட்க வந்திருப்பானோ?

''இங்கே காத்து வசதி இல்லை. வாயேன் பக்கத்திலே பார்க் இருக்கு அங்கே போய் பேசுவோம்''.

''ஓ... ஷ்யூர்!''

நடந்தே சென்றனர்.

வயதான ஏழெட்டுப் பெரியவர்கள் ஏதோ யோசனையுடன் ஆளுக்கொரு இடத்தில் அமர்ந்து இருந்தனர்.

''என்டா மாலினிகிட்டே இப்படி கத்தறே... பாவம்டா!''

''நானா, மாலினியா?''

''என்டா இப்படிக் கேக்கறே?''

''வெறுத்துப் போச்சு கவுசிக்! அறுபது வயசுல வரவேண்டிய அலுப்புகளைப் பெல்லாம் இப்பவே வந்துடுச்சு!''

''....?!''

''வாழ்க்கையை ஓட்டறதே கஷ்டமாயிருக்கு கவுசிக். வாய்க்கு ருசியா, மனசுக்கு நிறைவா சாப்பிட்டு எத்தனை வருஷமாயிடுச்சு தெரியுமா?''

''.....''

''இதெல்லாத்துக்கும் என்ன காரணம் தெரியுமா?''

''சொல்லு!''

''காதல்! பாழாய் போன லவ்வு!''

''காதலா?'' வியப்பாய் கேட்டான்.

''ஆமான்டா! வாழ்க்கைன்னா என்ன? சந்தோஷமா, மனசுக்கு நிறைவா வாழறது தானே? ஆனா, காதல்ங்கற மாய வார்த்தைய நம்பி அதுல தலைய கொடுத்து மீள முடியாம அவஸ்தைப் படறேன். நல்லா வாழறதுக்கு காதல் தேவையில்லை. வசதி வளர்ப்பும், சொந்த பந்தங்களும் தான் முக்கியம். தடுக்கி விழறப்ப, தடுமாறி நிக்கறப்ப... கைப்பிடிச்சுக்கக் கூட பக்கத்துல ஒரு சொந்த பந்தம் இல்லே கவுசிக்!''

''அப்ப காதலே தப்புங்கறியா?''

''காதலிக்கறது தப்பில்லே... அவளையே கல்யாணம் பண்ணிக்கறதுதான் தப்பு!''

''என்னடா சொல்றே''

''யாரையாவது லவ் பண்றியா?'' என்றான் அடிக்குரலில்.

''ம்...''

''பொண்ணு வசதியான இடமா?''

''இல்லே!''

''அப்ப தப்பித்தவறிக் கூட கல்யாணம் பண்ணிக்காதே!''

''என்ன கேசவ்.. இப்படி பேசறே!''



''உன் நன்மைக்காக தான் சொல்றேன். நாம சாதாரண நிலைமையில இருந்து வசதியான பொண்ணை கல்யாணம் பண்ணிக்கலாம். அப்ப, நம்ம சொந்த பந்தம் யாரும் பிரியவும் போறதில்லே. நம்ம தகுதியும் உயரும். ஆனா, காதல்னு சொல்லிக்கிட்டு பரிதாபப்பட்டு நமக்குக் கீழே இருக்கிற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கறதை விடவும் முட்டாள் தனம் வேற எதுவும் இருக்க முடியாது.''

''.......!''

''என்னடா... ரொம்ப சுயநலமா பேசறானேன்னு பார்க்கறியா? அனுபவத்தை சொல்றேன். நீயாவது தப்பிச்சுக்க. மாலினிய கல்யாணம் பண்ணிக்கிட்டதால அவ வீட்லேயும் சப்போர்ட் இல்லே. என் வீட்டை பத்திதான் தெரியுமே. அப்பா இறந்ததுக்கும் என்னை சேர்க்கலே. தங்கச்சி கல்யாணத்துக்கும் கூப்பிடலே. தனிமரமாகிட்டேன் கவுசிக். இந்த மாலினிக்கு தேவையான அளவுக்கு படிப்பும் இல்லே. எந்த வேலைக்குன்னு அனுப்ப முடியும்? நோயாளியா வேற ஆகிட்டா. இந்த அழகிலே பொட்டைப்புள்ள வேற. சம்பாதிக்கறது பத்தாம கடன் வாங்கி தான் சமாளிக்கிறேன். எதிர்காலத்தை நினைச்சா பயமாயிருக்குடா. என்ன பண்ணப் போறேன்னே தெரியலே. வீட்டுக்கு போறதுக்கே பிடிக்கலே. நீயாவது புத்திசாலித்தனமா நடந்துக்க. அவ்வளவு தான் சொல்லுவேன்!''

கவுசிக் குழம்பிப்போனான்.

இதயத்திலிருந்த அவந்திகாவின் உருவம்.... தண்ணீர் பிம்பமாய் ஆடி நெளிந்தது.

## 9

''என்னம்மா நீ... காபி கேட்டா பாயாசம் தர்றே! என்ன விசேஷம்? நம்ம பிரார்த்தனாவுக்கு இன்னைக்கு பர்த்டே கூட இல்லையே! எனக்கும் போனமாசம் முடிஞ்சுப் போச்சு. ஒரு வேளை, பிரார்த்தனாவுக்கு வரன் ஏதும் முடிவாகியிருக்கா?'' அடுக்கடுக்காய் கேள்விகளை கேட்டபடி கலைத்தான்.

''உனக்குத் தெரியாம பிரார்த்தனாவுக்கு எப்படி முடியும்? அதுவும் அவளுக்கு இப்போதைக்கு கல்யாணம் பண்ற எண்ணமும் இல்லை. உனக்கு முடிஞ்சப் பிறகுதானே அவளுக்குப் பண்ண முடியும்?'' பழைய பல்லவியையே பாடினாள் காமாட்சி.

''அப்ப என்னதான் விஷயம்... சொல்லேம்மா!''

''நான் கும்பிட்ட தெய்வம் கூரையை பிய்ச்சுக்கிட்டு கொட்டப்போகுது!''

''கொஞ்சம் கூடப் புரியலே!''

''சரி... சரி.. நேரடியா விஷயத்துக்கு வர்றேன். இன்னைக்கு என் அண்ணி கவுசல்யா நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்க.''

''கவுசல்யாவா... யாரது?''

''என்ன கவுசிக்... மறந்துட்டியா? என் மாமாவோட பெரிய பொண்ணு... நாமெல்லாம் ஒரு நாள் திருவேற்காடு கோவிலுக்கு போயிருந்தப்ப கார்ல வந்திருந்தாங்களே... என்னைப் பார்த்தும் கையைப் பிடிச்சுக்கிட்டு அழுதாங்களே....''

''ஓ... அந்த காலத்திலேயே ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு. அதனால உங்க மாமா கூட அவங்களை ஒதுக்கி வச்சு இன்னைக்கு வரைக்கும் பேசவே இல்லேன்னு சொன்னியே.... அவங்க தானே?''

''அதென்ன ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு பட்டவர்த்தனமா சொல்றது? மனசுக்கு பிடிச்சவனை கல்யாணம் பண்ணிக்கிட்டா. இன்னைக்கு ஆள், அம்பு, படைன்னு மகாராணி மாதிரி வாழ்ந்துட்டு இருக்கா. எங்கண்ணியும் பேரன், பேத்தின்னு எடுத்துட்ட பிறகு... எங்க மாமாவுக்கு இன்னும் மனசு இறங்கலே. இப்பவோ, அப்பவோன்னு இழுத்துக் கிட்டு இருக்கிற மனுஷனுக்கு என்னத்துக்கு இத்தனை வீம்பு?''

''அம்மா நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே!''

''என்ன?''

''என் பிரண்ட் கேசவ் வீட்டை எதிர்த்து லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டதுக்கு திட்டிக்கிட்டே இருப்பே! ஆனா, உங்கண்ணி அதே விஷயத்தை பண்ணினதை சப்போர்ட் பண்ணி பேசறே?''

''அதுவேற, இதுவேற! கேசவ் கட்டிக்கிட்டது ஒரு பஞ்சப்பராரியை, ஆனா, எங்கண்ணி... புளியங்கொம்பையில்லே பிடிச்சிருக்காங்க. ஜாதி வேறங்கறதாலதான் என் பெரியப்பா ஏத்துக்கலே. அதை விடு.... இப்ப நான் சொல்ல வந்ததே வேற...''

''.....!''

''மொதல்ல பாயசம் எல்லாத்தையும் சாப்பிட்டு முடி!''

''ம்.. முடிச்சாச்சு... இந்தா!''

டம்ளரை வாங்கி கீழே வைத்தவள், ''நமக்கு நல்ல காலம் பொறந்திடுச்சி கவுசிக்!''என்றாள்.

''.....?!''

''எங்கண்ணிக்கு மூணு பையன், ஒரு பொண்ணு! எல்லாரும் ஒரே குடும்பமா, ஒற்றுமையா இருக்காங்க. எல்லாருக்கும் தனித்தனி பிஸினஸ்னு பணம் கொட்டுது அவங்க நம்ம வீட்டுல சம்பந்தம் வச்சுக்கணும்னு ஆசைப்படறாங்க நம்ப பிரார்த்தனாவுக்கும் ஒரு விடிவு காலம் பொறந்துடுச்சு!''

''கேக்கவே சந்தோஷமா இருக்கும்மா. பிரார்த்தனா அவங்க



வீட்டுக்கு மருமகளா ஆகறதுக்கு கொடுத்து வச்சிருக்கணும்தான்!''

''அது சரி.. எங்கண்ணியோட மூணு பிள்ளைகளுக்கும் கல்யாணம் ஆகி குழந்தை குட்டிகளும் பிறந்தாச்சு!''

''அப்ப வேற?''

''அவங்க ஒரே பொண்ணு நிரஞ்சனாவை நம்ம வீட்ட மருமகளா அனுப்பணும்னு பிடிவாதமா இருக்காங்க!''

''அம்மா!'' தூக்கி வாரிப்போட்டது.

''என்னம்மா சொல்றீங்க?''

''ஆமா கவுசிக்! அவங்க சொன்னப்ப முதல்ல நானே நம்பலே. ஏகப்பட்ட சொத்து! நிரஞ்சனாவைப் பார்த்திருக்காயா.. அழகா, பாந்தமா இருப்பா, நிறைய படிச்சிருக்கா, அவ அழகுக்கும், அந்தஸ்துக்கும் எவ்வளவோ பெரிய இடத்திலேயெல்லாம் மாப்பிள்ளை பார்த்திருக்கலாம் ஆனா, நம்ம சொந்த பந்தமெல்லாம் இந்த கல்யாணத்து மூலமா ஒண்ணா சேரணும்னு ஆசைப்படறாங்க. அதுவும் உன்னை ஏற்கனவே பார்த்திருக்காங்க இல்லே. உன்னை ரொம்ப பிடிச்சிருக்காம். அவளை கல்யாணம் பண்ணிக்கிட்டா இந்த பிசாத்து வேலை கூட தேவையில்லை. காலத்துக்கும் உட்கார்ந்தே சாப்பிடலாம்!''

அம்மா சொல்ல, சொல்ல மலைப்பாய் இருந்தாலும், திகைப்பாய் இருந்தது.



அவந்திகா நினைவிற்கு வந்து நடுக்கத்தை ஏற்படுத்தினாள்.

நிழல்கூட இருட்டில் நம்மை விட்டு பிரியும். அதுவும் சொந்தமில்லை. அது போல் எப்பேர்பட்ட உறவும்.. இறுதிவரை நம்முடன் இருப்பதில்லை.

கேஸ் எதிராளிகள் பக்கம் சாதகமாக தீர்ப்பு வர... எதிர்பார்த்திருந்தாலுமே கூட.. சீதாலட்சுமியின் நசிந்து போன இதயம் தோல்வியைக் கண்டு, எதிர்கொள்ள திராணியற்று.. உடனடியாக தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

சீதாலெட்சுமி ஒரேயடியாய் இந்த உலகத்தை விட்டுப் போய் விட்டாள்.

இடிந்து போய்விட்டனர் அவள்

''இன்று உன் கணவர் கோபமாக இருக்கிறார்னு எப்படி சொல்றே?''

''அவர் வைத்த சாம்பார்ல உப்பு இன்று அதிகமா இருக்கே''.

- வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி.

பெற்ற இரு பிள்ளைகளும்.

பரமேஷ்வர் முன்னிருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தாலும், சொல்ல முடியாத ஒருவித பயம் அவனை வியாபித்திருந்தது.

அவந்திகா தன்னிலையிலேயே இல்லை. கவுசிக் இறுதிச் சடங்கில் வந்து கலந்து கொண்டாலும்.. அவள் மனசும் குழப்பத்தில் இருந்தது.

அடுத்த சில தினங்களில் அம்மா நிரஞ்சனா பற்றி பேச்செடுக்க, ஏற்கவும், முடியாமல், மறுக்கவும் முடியாமல் திண்டாடினான். ஒரு மாறுதலை வேண்டி கேசவை சந்தித்தான்.

''என்ன கவுசிக் டல்லாயிருக்கே?'' என்றான் கேசவ்.. ரோட்டோரத்தில் பத்து சேர், இரண்டு டேபிள் போட்டு கொஞ்சம் பாந்தமாய் தெரிந்த டீக்கடையில் அமர்ந்து ராகிமால்ட்டை உறிஞ்சியபடி கொஞ்சம் மனசு சரியில்லை கேசவ்.. குழப்பமாயிருக்கேன்.

''என்ன லவ் மேட்டரா?''

''அதுவும் தான்!''

''என்னாச்சு?''

சொன்னான்.

அவந்திகா பற்றி. அவள் அம்மா இறந்தது பற்றி, அவனின் அம்மா நிரஞ்சனாவை மருமகளாக்கிக் கொள்ள தீவிரம் காட்டுவது பற்றி.. விளக்கமாய் சொன்னான்.

வாய்விட்டு சிரித்தான் கேசவ்.

''என்னடா... நான் இவ்வளோ சீரியஸா சொல்லிட்டிருக்கேன்.. நீ பாட்டுக்கு சிரிக்கிறே!''

''நீ எப்ப இந்த விஷயத்திலே குழம்ப ஆரம்பிச்சிட்டியோ.. அப்பவே நீ உங்கம்மா எடுக்கிற முடிவுக்கு தலையாட்ட தீர்மானிக்கப்பட்டேன்னு அர்த்தம்!''

''நானா? அதெப்படி.. நான் தான் அவந்திகாவை..''

''காதலிச்சே.. ஆனா இப்போ இல்லை! இப்பத்தான் நீ தெளிவா சிந்திக்க ஆரம்பிச்சிருக்கே. நான் பண்ணின தப்பை நீயும் பண்ணாதே! கை நிறைய பணத்தை எடுத்துக்கிட்டுப் போய் கிழிஞ்ச சட்டையை வாங்கிட்டு வர்றவன் முட்டாள்டா. காதல்வேற, கல்யாணம் வேற! காதலோட பணமும் சேர்ந்திருந்தா, அதுதான் காதல் கல்யாணம்! பணம்தான் வாழ்க்கை. பொண்ணு வசதின்னா கல்யாணம் பண்ணிக்க, இல்லையா.. கழட்டிவிடு! பாவம் பார்க்காதே. இல்லேன்னா உங்க வாழ்க்கையே பரிதாபமாகிடும்.

பொண்டாட்டி நம்ம மேல 10 பர்சன்ட் அன்பு செலுத்தி 90 பர்சன்ட் சுதந்திரமா விட்டாலே போதும்... ஆம்பளைங்க ஜெயிச்சுடுவாங்க. அன்புக்கு கட்டுப்பட்டு குழந்தை, குட்டின்னு ஒரு



வட்டத்துக்குள்ளே சிக்கி வீட்டுக்கு சேவை பண்றதிலேயே பாதி வயசு ஓடிப் போயிடுது. நிம்மதியான வாழ்க்கைக்கு பணம் அவசியம். கை கொடுக்க உறவுக்கூடம் ரொம்ப அவசியம். அழகைப் பார்க்காதே! லைட்டை அணைச்சிட்டா எல்லாம் பொம்பளையும் ஒரே அழகு தான், ஒரே நிறம் தான். மாலினியை நேசிச்சு, வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணினேன். இப்ப லவ்வை விட சலிப்பும், வெறுப்பும் தான் அதிகம். வார்த்தையாலேயே அவளை தினமும் கொல்றேன். வேற வழி தெரியலே. இல்லேன்னா... நான் பைத்தியக்காரனாய்டுவேன், டைவர்ஸ் தான் ஒரே சொல்யூஷன். எனக்கு பணம் வேணும் பணத்தோட ஒரு விதவை இருக்கா. ஒரு மாசமாக மனசு விட்டுப் பழகறோம். இந்த வாழ்க்கையை பிடுங்கி அவளுக்கு கொடுத்துட்டா எல்லாக்கஷ்டமும் தீரும். பெண் குழந்தையைப் பெத்துட்டேன். அவளுக்கு பேங்க்ல ஒரு அமவுண்ட்டை போட்டுடுவேன்.. வேற வழி தெரியலடா!''

என்றான் உறுதியாய், கேஷுவலாய்!

கவுசிக் திகைத்தினப் பார்வையோடு கேசவ்வை.. பார்த்தான்.

ஆனாலும்.. யோசிக்க ஆரம்பித்தான் தன்னைப் பற்றி!



## 10

**ப**த்தாவது முறையாக மறுபடி எண்ணை அழுத்தினான். எதிர்முனை சிணுங்கிக் கொண்டே இருந்தது. கவுசிக் போன் அட்டெண்ட் பண்ணவில்லை. யோசனையுடன் தன் செல்போனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவந்திகா.

கொஞ்ச நாளாய் இப்படித்தான். கவுசிக்கிற்கு போன் பண்ணினால், எப்போதாவது பேசுவான். அப்படியும் 'வேலையில் இருக்கேன், அப்புறம் பேசறேன் என்பான், மற்றொரு முறை, ''ஸாரி அவந்திகா.. பிஸியாய் இருக்கேன்.. வரமுடியாதே!'' என்று அடுத்த வார்த்தை பேசுமுன் கட் பண்ணினான்.

அவந்திகா வெள்ளந்தியானப் பெண் அல்ல. பணி புரிவதற்கென்று படிதாண்டி வரும் பெண்கள் இப்போதெல்லாம் போனஸாய் மனிதர்களையும் படித்து விடுகிற வாய்ப்பு இலகுவாய் அமைந்து விடுகிறது.

அம்மா இறப்பதற்கு முன்பே.. கவுசிக்கின் காதலை மீறிய, சுயநலம் மிகுந்திருந்ததை உணர்ந்திருந்தாள். அவன் தெளிவானவன். வாழ்க்கையை உணர்ச்சியோடு அணுகாதவன்.. என்பது புரிந்துதான் இருந்தது. ஆனாலும், யதார்த்த சூழலை மீறி, தன் மீதான அன்பு எல்லாவற்றையும் தோற்கடித்து விடாதா என்கிற ஏக்கமும்

எதிர்பார்ப்பும் அவள் மனதை சூழ்ந்திருந்தது.

ஆனால்...

அம்மா இறந்து விட்டாள். அவள் நடவடிக்கை மாறிவிடுமோ என்று உள்ளத்து மூலையில் சுழன்றடித்த சிறுகாற்று மண்டலம்.. புயலாய் மாறி பயமுறுத்துகிறது.

அவன் தன்னை தவிர்ப்பது நிதர்சனமாய் புரிகிறது என்றாலும், இல்லை என் எண்ணம் தவறு. கவுசிக் என்னை ஏமாற்ற மாட்டான் என்று நிரூபிக்க மனசும் பரபரத்தது.

பரமேஷ்வருக்கு தங்கையின் சோகம் சூழ்ந்த முகம், ரணப்படுத்தியது. அம்மாவின் மரணம் சாதாரணமானதல்ல, எனினும் கூடவே அவளுக்கு தன் எதிர்காலத்தை பற்றிய பயமும் இருக்குமல்லவா? அம்மா கடைசி வரை பயந்து, பயந்து அவள் மனதிலும் அதை விதைத்து விட்டு போயிருக்கிறாள்.

இருவர் மட்டுமே இருந்த வீட்டில் மவுனம்.. நிலைத்து ஆட்சி செய்தது.

அண்ணனுக்கு காபியை கொண்டு வந்து தந்தாள்.

''நீயும் எடுத்துக்கிட்டு வந்து உட்கார் அவந்தி''

''சரிண்ணா!''

காபியுடன் வந்து அமர்ந்தாள்.

''அம்மா இப்படி திடீர்னு நம்மளை விட்டு போயிடுவாங்கன்னு எதிர்பார்க்கலே அவந்தி.''

''ஆமாண்ணா!''

''இந்த வீட்ல நீயும் நானும் தான்! அட்லீஸ்ட் நீயாவது கொஞ்சம் தெளிவான.. உன் முகம் பார்த்து நான் மனசை தேத்திக்குவேன்''

''முயற்சிப் பண்றேண்ணா!''

''அப்புறம்... அம்மா பயந்தது போலவே உன் வாழ்க்கையை நினைச்சு நீயும் பயப்படக்கூடாது. நான் இருக்கேன். உனக்கொரு நல்ல வாழ்க்கையை அமைச்சுத்தரவேண்டியது என் பொறுப்பு, கடமை!''

''இப்ப எதுக்குண்ணா அந்த பேச்செல்லாம். எனக்கு எந்த பயமும் இல்லை. நீயாவது கடைசி வரை என் கூட வேயிரு!''



''என் கனவில் லட்டு, அல்வா எல்லாம் வந்தது''.
அப்ப அது 'ஸ்வீட் ட்ரீம்ஸ்'னு சொல்லு''.
-அசோக்ராஜா, திருச்சி.



என்றாள் நெகிழ்ச்சியுடன்.

''ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? நமக்குள்ளே நாலஞ்சு வயசு வித்தியாசம்தான். ஆனாலும் நீ எனக்கு மகள் மாதிரி புரிஞ்சுக்க.'' தங்கையின் தலையை இதமாய் வருடிக் கொடுத்தான்.

அந்த நேரம்.. காலிங் பெல் அலறியது.

''இரு.. நான் போய் திறக்கிறேன்.''

கதவைத் திறந்த பரமேஷ்வர் வந்திருந்த பெண்ணை கணநேரம் நெற்றிசுருக்கி.. பின்புரிய.. அட... மாலினி... நீயா... வாம்மா... உள்ளே வா!'' என்றான்.

குரல் கேட்டு ஆச்சர்யமாய் ஓடிவந்தாள் அவந்திகா.

''மாலினியா.. வாடி.. உள்ளே வா! உன் குழந்தையா? எவ்ளோ நாளாச்சு உன்னைப் பார்த்து... உட்கார்!''

''அம்மா இறந்ததை கேள்விப்பட்டேன்.. இப்பதான் எனக்கு விஷயமே தெரியும்!'' என்றாள் மாலினி.

உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை வாங்கி கட்டிலில் கிடத்தினாள் அவந்திகா.

மாலினியும், அவளும் பள்ளித் தோழிகள். அவள் காதல் வசப்பட்டு ஒரு வாலிபனுடன் ஓடிப்போனது வரை தெரியும். அதற்குபின் அவர்களுக்கு எந்த சந்திப்பும் இல்லை. இடைப்பட்ட இன்னொரு தோழி மூலமாக விபரம் அறிந்த வந்திருக்கிறாள்.

சிநேகிதம் பற்றி சிறிது நேரம் சிலாகித்து விட்டு'' இப்ப எங்கே இருக்கிற மாலினி?'' என்றான்.

பரமேஷ்வர், ''நான் வெளியே போயிட்டு வந்திடறேன். மாலினியை சாப்பிட விடாம அனுப்பாதே'' என்றான்.

''இல்லே பரமுண்ணா. அவர் ஏழுமணிக்கு வந்திடுவார். அதுக்குள்ளே போயிடணும்!''

''என்ன அவசரம்? சொல்லிக்கலாம் விடு! நான் வந்திடறேன்'' என்று வெளியேறினான்.

அடுத்த கணமே, அவந்திகாவின் கையைப் பற்றிக் கொண்டே மாலினியின் கண்களில் முட்டிக் கொண்டு நின்றது கண்ணீர்.

''என்ன மாலினி?'' என்றாள் அவந்திகா பதற்றமுடன். ''நீ எங்கே வேலை செய்யறேன்னு எனக்குத் தெரியாது. ஆனா. எனக்கும் ஒரு வேலை வாங்கிக் குடு அவந்தி.. ''என்றாள் அழுகையினூடே.

''மொதல்ல அழுறதை நிறுத்து. என்னாச்சு உனக்கு?

''என் புருஷன் ரொம்ப சீக்கிரம் என்ன டைவர்ஸ் பண்ணிடுவார்னு தோணுது''

''என்னடி, பைத்தியம் மாதிரி உளர்றே!''

''உண்மையதான் சொல்றேன்'' என்றவள் கேசவ் தினமும் அவளை கடுமையான வார்த்தைகளால் சாடுவதையும், கொஞ்ச நாளாய் அவர் நடவடிக்கை சரியில்லாததையும், வேறு பெண்ணுடன்

தொடர்பு ஏற்பட்டு இருக்கலாம் என்று சந்தேகப்படுவதையும் கூறினாள்.

"நம்பவே முடியலே மாலினி! உன்னைப் பத்தி எல்லாமே தெரிஞ்சுதானே காதலிச்சு கல்யாணம் பண்ணினார்? ஒரு குழந்தையும் பெத்துட்ட பிறகு அந்தஸ்து பேதம் உறுத்துதாமா? சும்மா விடக்கூடாது மாலினி. மாதர் சங்கத்துல போய் கண்ணை முறைவிடலாம்!" என்றாள் கோபமாக.

"முறைவிட்டு..? அதுக்குப் பிறகு மனசு ஒத்து வாழ்ந்திடுவாரா? இன்னுமில்லே வெறுப்பு அதிகமாகும்? காலம் முழுக்க சந்தோஷமில்லாம, திட்டிக்கிட்டும், அடிச்சுக்கிட்டும், அழுதுகிட்டும் வாழறதா வாழ்க்கை? ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தராவது சந்தோஷமாயிருக்கலாம் இல்லையா? அந்த வாய்ப்பு அவருக்கு கிடைச்சா, குறுக்கே நின்னு வழிமறிச்சா மட்டுமே எனக்கு சந்தோஷம் கிடைச்சிடுமா? எனக்கு என் பொண்ணு இருக்கா. அவ வளர்ற சூழ்நிலை மாறணும். அவளுக்காக இனி வாழ்ந்திட்டுப் போறேன்" என்றாள் நெக்குருக.

"என்ன வேலைத் தெரியும் உனக்கு? எப்படி சமாளிப்பே?"

"பறவைகளோட உணவை கடவுள் கூட்டில் எறியறதில்லை அவந்தி. எனக்கான உணவை கடவுள் என் ரெண்டு கைகள்ல மறைச்சு வச்சிருக்கார். உழைக்க தயாராஇருக்கேன். எந்த வேலையாய் இருந்தாலும் பரவாயில்லை. ப்ளீஸ்ப்பா.. ஏற்பாடு பண்ணு!"

"செய்றேன் மாலினி.. தைரியமாயிரு!"

தனக்கும் சேர்த்து மாலினி எச்சரித்து விட்டு செல்வது போலிருந்தது அவந்திகாவிற்கு. கவுசிக்கின் ஒதுங்கலும் அதைத்தானே சொன்னது.

காமாட்சி மகனை ஒரு வழியாய்.. பேசிப் பேசி தன் வழிக்கு கொண்டு வந்து விட்டாள்.

"அடுத்த வாரம் நாள் நல்லாயிருக்கு... சம்பிரதாயத்துக்கு பொண்ணு பார்க்க வந்துடுங்கன்னு அண்ணி போன் பண்ணினாங்க... வர்றோம்னு சொல்லிட்டுமா கவுசிக்?"

"கொஞ்சநாள் போகட்டும்மேம்மா. என்னைக் கொஞ்சம் பிரியா விடு!"

"கல்யாணத்தை உடனே வச்சுக்க வேணாம். நிச்சயதார்த்தம் மட்டும் முடிச்சுடலாம். நல்ல காரியத்தை ஏன் தள்ளிப்போடணும்? வேற யாராவது நிரஞ்சனாவை கொத்திட்டுப் போய்டக்கூடாது. அடுத்து பிரார்த்தனா இருக்கா.. அவளையும் நினைச்சுப் பார்த்துக்க.. நல்ல வரனாப் பார்த்து அமோகமா கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம்."

"......?"

"ஜோஸியர்கிட்டே உன் ஜாதகம் காட்டினேன். சுக்ரதிசை





ஆரம்பிக்குதாம். தேவையில்லாத சங்கடமெல்லாம் உன்னை விட்டு ஓடிப்போகுமாம். கல்யாண யோகம் வந்துடுச்சாம். வசதியான இடத்துல தான் பொண்ணு அமையும்னு அடிச்சு சொல்லிட்டார். நல்ல விஷயத்தை தள்ளிப்போடாதே கவுசிக்!''

கவுசிக் தயங்குதவற்கு குழப்பம் காரணமில்லை. அவன் தெளிவாகத்தான் இருக்கிறான். கேசவ் வாழ்க்கையின் ரியாலிட்டியை துல்லியமாய உணர்த்திவிட்டான். அதன் பின் நிரஞ்சனாதான் தன் பெஸ்ட் சாய்ஸ் என்பதையும் தீர்மானித்து விட்டான். ஆனால், இதை நாசூக்காக அவந்திகாவிடம் சொல்லிவிட்டு அம்மாவிடம் சம்மதம் சொல்லலாம் என்று நினைத்திருந்தான். அம்மா விடறமாதிரி தெரியலையே!

''சொல்லு கவுசிக்!''

''சரிம்மா.. உன் இஷ்டம். பார்த்து செய். இது போதும் கவுசிக்.... நான் போய் அங்காளம் மகனுக்கு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்திடறேன்.. பிரார்த்தனா.. குக்கர்ல பருப்பு வச்சிருக்கேன். விசில் வந்ததும் இறக்கிடு!'' என்று கூறிவிட்டு காமாட்சி மகிழ்ச்சிப் பொங்க வெளியேறினாள்.

''பிரார்த்தனா.. கொஞ்சம் தண்ணி கொண்டு வாயேன்!'' அலுப்புடன் சேரில் அமர்ந்தான் கவுசிக்.

## 11

''எதுக்குண்ணா.. உன் காதலிய ஒரேடியா கை கழுவறதுக்கா?'' அவன் முன் தம்ளரை நீட்டியபடி கேட்டாள் பிரார்த்தனா.

''ஏய்.. என்னப் பேசறே?'' வாங்கி அருந்தினான்.

''எல்லாத்தையும் பார்த்துட்டுதான் இருக்கேன். வசதியான பொண்ணு கிடைச்சதும்.. காதலிச்சிட்டிருந்த பொண்ணை கழற்றி விடறியே.. எதுக்குண்ணா? எனக்காகவா?''

''இதோ பார்.. நீ சின்னப்பொண்ணு.. இதெல்லாம் பேசக்கூடாது.. சில விஷயங்கள்ல .. குடும்பத்துக்காக அனுசரிச்சிக்கிட்டு போறதுதான் நல்லது. கஷ்டப்படறதுக்காக கல்யாணம்? வாழறதுக்குத்தானே? யோசிச்சு புத்திசாலித்தனமா எடுத்த முடிவு இது! உனக்கும் சரி, நம்ம குடும்பத்துக்கும் சரி.. இது தான் சரி!''

''ஏதேது.. நீயென்னமோ தியாகி மாதிரிப் பேசறே! பணம் தான் வாழ்க்கைன்னா.. காதல்ங்கற உணர்வுக்கும், கணவன், மனைவிங்கற பந்தத்துக்கும் என்னதான் அர்த்தம்? கல்யாணத்தையும், கணவன் -





மனைவி உறவையும் கமர்ஷியலா பார்க்க ஆரம்பிச்சிட்ட பிறகு.. வாழ்க்கை உண்மையானதா இருக்கும்னு நினைக்கறியா? ஒரு பொண்ணோட கண்ணீருக்கு மேல... நீ காரோட்டிக்கிட்டு போகப்போறியா? இவ்வளோதானா நீ? ச்சை!'' கசப்புடன் அந்த அறையை விட்டு அகன்றாள் பிரார்த்தனா.

தங்கை பேசியதெல்லாம் உறைத்தது... கணநேரம் தான்.. கோவ்லை நினைத்துக் கொண்டான். ஜில்லென்று புதுரத்தம் பாய்ந்தது உடம்பில்.

''ராஜபாளையத்துப் பொண்ணை கல்யாணம் கட்டிக்கிட்டது தப்பாப் போச்சு!''
''என்னாச்சி?''
''கூடவே... ஒரு நாலையும் கொண்டு வந்து... எடுத்ததுக்கெல்லாம் அதை விட்டுக்கடிக்கச் சொல்றா!''
ச.ஆ. கேசவன், திருச்சி.

* * * * *

''பேசணும்.. பர்மிஷன் போட்டுட்டு வரமுடியுமா?'' என்று வெகுநாள் கழித்து கவுசிக் போனில் அழைத்த போதே புரிந்து விட்டது... இது வழக்கமான இதயப் பரிமாறல் சந்திப்பில்லை என்று.

அவன் ஏதோவொரு குண்டை தூக்கி போட்டு வேதனைபடுத்தப் போகிறான் என்று புரிந்தாலும் வலித்தது. அதை தாங்கிக் கொள்ள கூடிய சக்தி இருக்கிறதா என்று புரியவில்லை.

கடற்கரையையொட்டி பூங்காவில் அமர்ந்தனர். தடுமாற்றமும், அந்நியப்பார்வையும் மிகுந்திருந்தது கவுசிக்கிடம்.

படபடத்த உள்ளத்தை மட்டுப்படுத்தி மெல்ல புன்னகைத்தாள்.

''நல்லாயிருக்கீங்களா கவுசிக்?'' என்று கேட்டாள்.

''ம்.. நீ?''

''ம்!''

அடுத்த கணம், சாலையில் விரைந்தோடும் வண்டிகளையும், பலூன் பிடித்தபடி ஓடியாத விளையாடும் சிறுவர்களையும் வேடிக்கை பார்த்தான்.

பத்து நிமிடம் கடந்தது.

அந்த சூழ்நிலை அவந்திகாவிற்கு அவதியாய் இருந்தது.

''சொல்லுங்க... என்ன விஷயம் கவுசிக் ?'' நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

''நான் ஒரு முடிவெடுத்திருக்கிறேன். நீர யோசிச்சு எடுத்த முடிவு. பிராக்டிக்லா எடுத்த முடிவு.. இதுக்காக நீ வருத்தப்படுவே..

பட், எனக்கு வேற வழி தெரியலே...''

''ம்.. என்றாள். அடுத்து அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை அறிந்து.. அதனால் ஏற்படப்போகும் வலியை ஜீரணிக்க, ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டாள்.

''நான் உன்னை லவ் பண்ணியது நிஜம்.. ஆனா எல்லாவற்றையும் லவ்வும் மேரேஜ்ல முடியறதில்லை இல்லையா அவந்திகா?''

அவளுக்கு அலுப்பாய் இருந்தது. ''அந்த மோசமான விஷயத்தை சீக்கிரம் சொல்லி தொலைத்தால் என்ன? இதிலென்ன சஸ்பென்ஸ்? அதான் என்னை சந்திப்பதை அவாய்ட் பண்ணி எடுக்கப் போகும் முடிவை முன்பே உணர்த்தி விட்டானே!

அவனை நிமிர்ந்து நேருக்கு நேர் விழிகளை சந்தித்தாள்.

''மேரேஜ் பிக்ஸ் ஆயிடுச்சா கவுசிக்?''

எதிர்பார்க்கவில்லை கவுசிக்.

''அ.. அவந்திகா.. உனக்கு.. எப்படி?''

''புரிஞ்சுக்கிட்டேன்''

''என்னை.. தப்பா.. நினைக்கறியா?''

''எப்படி நினைக்கணும்னு சொல்லுங்க?''

''பிராக்டிகலா யோசி அவந்திகா. என்னை மட்டுமே குற்றம் சொல்லாதே! ஒவ்வொருத்தனுக்கும் சில லட்சியங்கள் இருக்கும். எனக்கும் இருக்கு. எங்க வீட்ல நானும், அம்மாவும், தங்கையும் மட்டும் தான். வீடு நிறைய உறவுகள் இருக்கணும்னு ஆசைப்படுவேன். எனக்கு வரப்போற மனைவிக்கு உடன் பிறந்த சொந்தங்கள் நிறைய இருக்கணும்னு ஆசைப்பட்டேன். அவ நிறைய படிச்சவளா, புத்திசாலியா இருக்கணும். எதிர்காலத்தில் நான் தொழிலதிபரா உயரும் போது அவ எனக்கு சப்போர்ட்டா இருக்கணும். ஆனா, உங்க வீட்ல உனக்கு அண்ணனை தவிர யாருமில்லை. வெறும் எக்னாமிக்ஸ் படிச்சிருக்கிறே அதை வச்சுகிட்டு நீ எப்படி என் லட்சியத்துக்கு துணையா இருக்க முடியும்?''

மழுப்பலான அவனின் காரணங்கள் சிரிப்பை உண்டாக்கின.

''இதெல்லாம்.. நாம் முதன் முதலாக சந்தித்தபோதே என்னிடம் இருந்த தகுதிகள் தானே?''

''நிஜம் தான். ஆனா, உன் மேல இருந்த நேசம் இதையெல்லாம் பெரிசு படுத்தலை. ஏன், நானே கூட இந்தப் படிப்பே போதும், வீட்டோட நல்ல பொண்டாட்டியா இருன்னு சொல்லியிருக்கேன். அந்தளவுக்கு பாசம் கண்ணை மறைச்சது. ஆனா, வாழ்க்கையை என் சூழ்நிலைல, என் கண்ணோட்டத்துல இருந்து பார்க்கிறப்ப.. நான் எடுத்த முடிவு சரியில்லேன்னு புரிஞ்சது. ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கறதும், புரிஞ்சுக்கறதும் மட்டுமே கல்யாணத்துக்கான தகுதிகளாயிடாது அவந்திகா. அதுக்கும் மேலே நிறைய இருக்குது.



யோசிக்காம நாம முடிவெடுத்துட்டு பின்னாடி வருத்தப்படக் கூடாதுல்லியா?''

அவன் தன் பக்கம் நியாயமிருப்பது போல் பெரிதாய் பிரசங்கம் பண்ண.. பொங்கிய கோபத்தை அடக்க பெரும்பாடு பட்டாள் அவந்திகா.

''பரவாயில்லை கவுசிக்.. என்னால புரிஞ்சுக்க முடியுது.. எப்ப கல்யாணம் பிக்ஸ் பண்ணியிருக்கீங்க?''

''அ... அது.. நிச்சயதார்த்தம் தான் முடிவு பண்ணி இருக்காங்க. வர்ற பதினஞ்சாம் தேதி!''

''கங்கிராட்ஸ் கவுசிக்!''

''நீயும் கண்டிப்பா வரணும்''

சிரித்தாள், முகத்தில் பொலிவை மீறி வலி தெரிந்தது...

''இன்விடேஷன் அனுப்புங்க.. கண்டிப்பா வர்றேன்.''? அவன் கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல் சொன்னாள்.

''......?!''

''நேரமாச்சு.. கிளம்பறேன்.. அண்ணன் காத்துக்கிட்டிருப்பார்''

சட்டென புறப்பட்டாள்.

முதுகை வெறித்துப் பார்த்த கவுசிக்கிற்கு புரிந்தது... அவள் கண்கள் கலங்கிக் கொண்டிருப்பது. வேறு வழி தெரியவில்லை அவந்திகா.. ஸாரி!''

குளிக்கும் போது தண்ணீரோடு, கண்ணீரும் சேர்ந்து கரைந்து ஓடியது. இம்சித்த இதயத்தை அடக்கத் தெரியாமல் திண்டாடினாள். அண்ணன் எதிரில் இயல்பாய் இருப்பது போல் காட்டிக் கொள்ளத்தான் சிரமப்பட்டாள். காரணம், அவளுக்கு நடிக்கத் தெரியவில்லை.

அம்மாவின் மரணம் அவளை இன்னும் இயல்புக்கு கொண்டு வரவில்லை என்றே தமயன் நினைத்தான்.

அதிகம் எதிர்பார்பில்லாத அன்பின் தோல்வி யாரையுமே நிலை குலையவே செய்து விடும்.

அவந்திகாவின் ஆசை, மாட மாளிகையோ, கணவனின் பணமோ, உடம்பெங்கும் நகைகளோ அல்ல.

அன்பு.. என்றுமே மாறாத அன்பு!

அதனாலோ என்னவோ நொறுங்கிப்போய் விட்டாள்.

காரணம் எதுவாயினும்.. நேசித்த ஒரு பெண்ணை எப்படித் தூக்கி எறிய முடியும்?

பணம் மட்டும் தான் வாழ்க்கையின் அஸ்திவாரமா? அது இல்லாவிட்டால் வாழவே முடியாதா?

அப்படியானால் செவிட்டு கணவனும், குருட்டு மனைவியும்தான் பிரச்சனையின்றி வாழமுடியும் போல!

தன் காயத்தை வெளியில் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

அவந்திகா.

அவள் முகவரிக்கு நிச்சயதார்த்த அழைப்பிதழ் அனுப்பி இருந்தான் கவுசிக்.

அப்படிப்பட்ட விழாவிற்கு போவதை விட பெரிய வலி எதுவுமில்லை. தோல்வி கண்ட இதயத்திற்கு. ஆனால், போகாவிட்டால் தான் அவனையே நினைத்து மருகிக் கொண்டிருக்கிறோம் என் ஆண் மனது நினைக்குமே!

வீணா ரோஷ தலைதூக்க...

அவந்திகா.. நிச்சயதார்த்த விழாவிற்கு சென்றாள்.

## 12

சிட்டியில் பெரிய மண்டபம், வாசலிலேயே மிக பிரமாண்டமான திரை வைத்து மேடையில் நடப்பதைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

நிறைய கூட்டம், பணக்காரர்களைக் கொண்ட மனிதர்கள். பெரிய இடத்து சம்பந்தம் என்பது அப்பட்டமாய் தெரிந்தது.

மேடையில் ஏகப்பட்ட உறவுக் கூட்டம். மாலை மாலையாய் நகைகள்.

கௌசிக்கின் பக்கத்தில் நின்றிருந்த நிரஞ்சனா நிறமாய், பொலிவாய், அழகாய் இருந்தாள். சத்தம் போட்டு சிரித்தாள்.

கேஷுவலாய் கௌசிக்கின் தோள் தொட்டுப் பேசினாள். வெகு நாள் பழக்கம் போல்!

ஏன் முடியாது? இரண்டு மாதமாய் அவளை ஒதுக்கி வைத்திருந்தானே? அவளுடன் பேசிப் பழக அந்த அவகாசம் போதுமே!

இருவரையும் ஒரு சேர பார்த்தபோது இதயத்தை ரம்பம் கொண்டு அறுப்பது போல் இருந்தது.

மெல்ல... மேடையேறினாள்.

கௌசிக் என்ன சொன்னானோ...?

யூ... காண்ட் சீட் மீ டியர்!'' செல்லமாய் அவன் கன்னத்தை தட்டி கோபப்பட்டாள் நிரஞ்சனா. பதிலுக்கு அவனும் சிரித்தபடி எதையோ சொல்ல வாயெடுத்தவன்... அவந்திகாவை பார்த்து விட்டான். இந்த பதினைந்து நாட்களில் இன்னும் இளைத்ததுப் போல் தெரிந்தாள்.

''வாழ்த்துக்கள்'' என்றபடி சிறு புன்னகையுடன் அவனிடம் பொக்கேயை நீட்டினாள்.

அழைத்திருந்தானேயொழிய அவள் வருவாள் என்று சற்றும்





''தண்ணியில வாழும் உயிரினம் ஒண்ணு சொல்லுடா குமார்?''

''என் அப்பா சார்!''

- எம்.அசோக்ராஜா, திருச்சி.

எதிர்பார்க்கவில்லை கௌசிக்.

அதிர்ந்தவன் சட்டென தன் நிலை உணர்ந்து இயல்புக்கு வந்தான்.

''வாங்க அவந்திகா. பரமேஷ்வர் வரலியா?

நிரஞ்சனா இது அவந்திகா. என் நண்பன் பரமேஷ்வரோட தங்கை!''

''ஹாய்...''

''ஹலோ...''

மனதிற்குள் அவனின் சாமர்த்தியத்தை நினைத்து சிரித்துக் கொண்டாள்.

''அவந்திகா... இது நிரஞ்சனா. அவங்க நிரஞ்சனாவோட அம்மா. இது அவளோட பெரிய அண்ணி, அவங்க ரெண்டாவது அண்ணி, அதோ.

ஆஷ் கலர் சூட் போட்டிருக்காரே... அவர்தான் பெரிய அண்ணன், வரிசையாய் அவனின் புதிய உறவுகளை பெருமையாய் அறிமுகப்படுத்தியபோது... அவந்தியகாவின் நெஞ்சடைத்தது.

அவர்கள் மத்தியில் தான் தனியாக, அனாதை போல் உணர்ந்தாள்.

''அவங்க மண்டபத்தை விட்டு வெளியே போகும்போது... கண்களெல்லாம் கலங்கிப் போய்... சே.. பார்த்ததுமே.. மனசு துடிச்சுப் போச்சு.'' பிரார்த்தனா அங்கலாய்த்தாள்.

''இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''இதை சொல்ல உனக்கு வெட்கமாயில்லையாண்ணா? ஒரு பொண்ணோட கனவுகளை சிதைத்து... அதை காரணம் காட்டி.. என் வாழ்க்கையோட அஸ்திவாரத்தை கட்ட நினைச்சீங்கண்ணா.. ஸாரி... அப்படிப்பட்ட கல்யாணமே எனக்கு வேணாம்!''

''ஏய் என்ன நீ அதிகமா பேசறே?''

''நீ பண்ணின அநியாயத்தை சொன்னேன். புது பணக்காரனாகிட்டே நீ பண்ணின துரோகமெல்லாம் பெரிய விஷயமாகவே தெரியாதே!'' வெறுப்பாய் அண்ணனை பார்த்து விட்டு நகர்ந்தாள் பிரார்த்தனா.

ஏதோ... சின்னப் பெண் பிதற்றுகிறாள் என்றுதான் நினைத்தான்.

ஆனால், சுளீர் என உறைக்கும்படி அடுத்த ஒரு வாரத்திலேயே அந்த காரியத்தை செய்தாள் பிரார்த்தனா.

தான் காதலித்த சந்துருவை பதிவுத் திருமணம் செய்து கொண்டு வீட்டிற்கே வந்தாள் பிரார்த்தனா.

எதிர்பார்க்காத காமாட்சி ஆவேசமாய் கத்தி மூர்ச்சையாகிப் போனாள்.

கௌசிக் கோபத்தில் கத்தினான்.

''என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கே?''

''கல்யாணம்தானே பண்ணியிருக்கேன்? காரியம், கிரியம்னு அபசகுனமா பேசறே! நானும், இவரும் மனப்பூர்வமா, உண்மையா நேசிச்சோம். வீட்ல சொல்லி கல்யாணம் பண்ணிக்கணும்னுதான் ஆசைப்பட்டோம். ஆனா பாவம் செய்து வந்த பணத்துல என் கல்யாணம் நடக்கறதை நான் விரும்பலே. அதான் இந்த முடிவு.

சந்துரு சம்பாதிக்கிற பணம் போதும். அவங்க வீட்லேயும் எங்க காதலை ஏத்துக்கிட்டாங்க. பிரச்சனையில்லாம குடும்பம் நடத்த இது போதுமேண்ணா! நாங்க வர்றோம்'' என்று சந்துருவின் கரத்துடன் தன் கரம் கோர்த்து திரும்பி நடந்தாள் பிரார்த்தனா. கௌசிக்... திக் பிரமையுடன் நின்றிருந்தான்.

* * * *

நாளாக ஆக பொலிவிழந்து போன தங்கையை உள்ளம் துடிக்க பார்த்தான் பரமேஷ்வர்.

அம்மா இறந்து ஐந்து மாதம் ஆகிறது. அவனாவது ஓரளவு மனதை திடப்படுத்திக் கொண்டு விட்டான். அவளை எப்படி திடப்படுத்துவது?

''அவந்தி...''

''என்னண்ணா?''

''இப்படி வந்து உட்கார்!''

''சப்பாத்திக்கு மாவு பிசைஞ்சிட்டிருக்கேன்.''

''பரவாயில்லை.. அதை அப்புறம் பார்த்துக்கலாம். இப்படி வா!''

''சொல்லுண்ணா!'' கையை கழுவாமலே வந்தமர்ந்தாள்.

''இப்படியே இருந்தா எப்படி அவந்தி?''

''புரியலே''

''ஆனது ஆச்சு. அம்மா இறந்தது மறக்க முடியாத வேதனைதான். இப்படி நடை பிணமா வலம் வர்றதை பார்க்கறப்ப கஷ்டமாயிருக்கு அவந்தி! இதோ பார் உன்னை கரையேத்தாம நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... பயப்படாதே!''

''நீதான் என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டே. நான் எப்பவும் உன் தங்கச்சியா இருக்கணும்னுதான் ஆசைப்படறேன். அப்படியே இருந்துடறேனே!''

''அப்படியே இருந்துட்டா அம்மாவோட ஆத்மா சாந்தியடைஞ்சிடுமா? நீ வேணா பார்... அம்மா ஆசைப்பட்டதை



விடவும் உன்னை எவ்வளோ பெரிய இடத்துல சேர்க்கிறேன்னு!''

உதடு பிரியாமல் சிரித்துவிட்டு எழுந்து கிச்சனிற்கு சென்றாள்.

அலுவலகம் செல்ல ஷேர் ஆட்டோவிற்காக காத்திருந்தாள் அவந்திகா. எல்லாமே ஏழெட்டு பயணிகளுடன் திமிறிக் கொண்டு வந்த ஆட்டோ, மேலும் பயணிகளை ஏற்றிக் கொள்ள நிறுத்தத்தில் வந்து நின்றது. அவர்களில் ஒருத்தியாக இருக்கி, பிதுங்கி உட்கார விரும்பாமல் வேறொரு ஆட்டோவிற்காக காத்திருந்தபோதுதான் அவர்களைப் பார்த்தாள்.

புத்தம் புது காரில் திருமணமாகி இரண்டு மாதமே ஆகியிருந்த புதுமண தம்பதியர் கௌசிக்கும், நிரஞ்சனாவும் எதோ ஜோக் சொல்லி சிரித்தபடி... பஸ் நிறுத்தத்தை ஒட்டியிருந்த பெட்ரோல் பங்கில், பெட்ரோல் நிரப்ப காத்திருந்தனர்.

அவனுடன் பைக்கில பட்டும் படாமல், விண்ணை முட்டும் காதலுடன் பயணித்த நினைவுகள் எழ, கண்களில் நீர் திரையிட்டு பிம்பங்கள் தழும்பின.

அவன் கண்ணில் படுவதை விரும்பாத அவந்திகா.. புறப்பட எத்தனித்த ஷேர் ஆட்டோவில் ஏறி.. கும்பலோடு ஐக்கியமானாள்.

இந்த சாலையில்தான் கௌசிக்கின் அலுவலகமும் இருப்பதால் ஏற்கனவே ஓரிருமுறை அவர்களை பார்த்து உடைந்து போய் இருக்கிறாள். அதற்காகவே அவள் பார்த்து வந்த வேலையை விட்டு, வேறு வேலைக்கு முயற்சித்து வந்தாள்.

அடுத்த வாரம் அதற்கான நல்ல தகவல் வரும் என்றாள் நம்பகமான தோழி ஒருத்தி.

சிட்டியில் புகழ்பெற்ற சூப்பர் மார்க்கெட்!

அலங்கார கலைப் பொருட்கள் அடங்கிய பிரிவு!

''எனக்காக, நான் சொன்னதும் கவர்ன்மெண்ட் வேலையை ரிசைன் பண்ணிட்டு அண்ணனுங்க கூட சேர்ந்து பிஸினஸ் பண்ண சம்மதிச்ச என் டார்லிங்குக்கு... நான்தான் பிரசன்ட் பண்ணுவேன்!''

நிரஞ்சனா கொஞ்சலாய் சிணுங்கினாள்.

''நோ.. நோ.. எனக்கு கவர்ன்மெண்ட் வேலை கிடைச்சதே எதிர்பாராமத்தான்.

ஆனா, என்னோட கனவு, லட்சியம் எல்லாமே பிஸினஸ்மேனா ஆகணுங்கறதுதான். அது உன் மூலமாதானே நனவாச்சு.

ஸோ.. என்னுள் நுழைந்த என் முதல் காதலிக்கு என் அன்பு பரிசு இந்த தாஜ்மகால் பிடிச்சிருக்கா டார்லிங்!''

கௌசிக் மனைவியை நேசமுடன் ஏறிட்டான். ''வாவ்... தாங்க்ஸ்டா செல்லம்!'' அதீத மகிழ்ச்சியில் சுற்றுப்புறம் மறந்து கணவனின் கன்னத்தை சரப்படுத்தினாள் நிரஞ்சனா.

இந்தக் காட்சி புதிதாய் வேலைக்கு சேர்ந்திருந்த சூப்பர்வைசர் அவந்திகா கண்களில் தானா பட வேண்டும்?

அந்த சின்ன இதயம் வேதனையில் விம்மியது.

# 13

''காபி சாப்பிடுங்க சித்தப்பா... ஆறிடப்போவுது!'' பரமேஷ்வர் வந்திருந்த உறவினரை உபசரித்தார்.

''பரவாயில்லே பரமு நான் சூடா சாப்பிடறதில்லே ஆறட்டும். அண்ணியோட மரணம் நான் எதிர்பார்க்காதது. சரி விடு அதைப் பத்தியே பேசி என்னாகப் போகுது? அவந்திகா எங்கே?''

''ஆபீசுக்கு போயிருக்கா... வர லேட்டாகும். நீங்க.. முக்கியமான விஷயம் பேசணும். உடனே வாடான்னு சொன்னதால அரைநாள் லீவுபோட்டுட்டு வந்தேன். என்ன விஷயம் சித்தப்பா?''

''ஏற்கனவே நீ சொல்லியிருந்தேயில்லே.. அவந்திகாவுக்கு வரன் பார்க்கச் சொல்லி... அது விஷயமாதான் இந்த வீட்டு பெரிய தலை செத்துபோச்சு... உடனே ஒரு நல்ல காரியம் பண்ணினா நல்லது!''

''என்ன அலையன்ஸ்... சொல்லுங்க!''

''சுத்தி வளைச்சு... நமக்கு தூரத்து சொந்தம் வேணும். பெரிய எடம். ஒரு பொண்ணு, ஒரு பையன். பையன் ஐ.டி.யில வேலை பார்க்கிறான். கை நிறைய சம்பளம். அவங்க அப்பா, தாத்தான்னு சேர்த்து வச்ச சொத்து இருக்கு. சொந்தமா மூணு வீடு! கெட்ட பழக்கம் எதுமில்லே!''

''என்ன சித்தப்பா... நான் அவந்திகாவுக்கில்லே மாப்பிள்ளை பார்க்கச் சொன்னேன்!''

''நானும் அவளுக்குத்தானே சொல்றேன்!''

நீங்க பெரிய எடத்து பையனை இல்லே சொல்றீங்க! எங்க தகுதிக்கு ஒத்த இடமா இருந்தா பரவாயில்லே! அவந்திகாவுக்கு எப்படியாவது ஒரு இருபது பவுன் போட்டுருவேன். என்னால முடிஞ்ச சீர் பண்ணிடுவேன். பையன் பிரைவேட் கம்பெனியில வேலை செய்தாலும் பரவாயில்லே... நல்லவனா, ஒழுக்கமானவனா, என் தங்கச்சிய கண்கலங்காம பார்த்துக்கறவனா இருந்தா போதும்.''

''அவசரப்படாதே பரமு... நான் இன்னும் முழுசா சொல்லி முடிக்கலே..''

''....?!''

''அவங்க வரப்போற மருமகளுக்கு இதைப் போடு, அதைப்போடுன்னு எந்த கண்டிஷனும் சொல்லலே. அவங்க இஷ்டப்படறதை செய்யட்டும். பொண்ணு நல்ல குணமாயிருந்தா போதும். ஆனா...''

''சொல்லுங்க!''



''ஒரே வீட்லே பொண்ணு குடுத்து பொண்ணு எடுக்கணும்ங்கறதுதான் அவங்களோட நிபந்தனை''

''.....?!''

''அதுவும் அந்தப் பொண்ணுக்கு..''

''ம்...'' என்றான் யோசனையாய்.

சித்தப்பா... எல்லாமே சொல்லி முடித்தார்.

''இதை நீ ஏத்துக்கணும்னு சொல்லலை. நல்ல இடம். வசதியான இடம். உனக்கு பிடிக்கலேன்னா வேற அலையன்ஸ் பார்க்கலாம்.''

''இல்லே சித்தப்பா.. என் சைடு எந்த பிரச்சனையும் இல்லே. அவந்தி வரட்டும். அவகிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு சொல்லிடறேன்.''

''என்ன அவசரம் பரமு... டைம் எடுத்துக்க.. நிறைய யோசி..''

''இல்லே சித்தப்பா... அவந்திகாவுக்கு இப்படியொரு நல்ல இடம் அமையறது கஷ்டம்.

''அது சரிதான்பா.. உன் எதிர்காலத்தை பத்தியும் யோசிக்க வேணாமா?''

இதிலே யோசிக்க எதுவுமே இல்லே. இப்ப எனக்கு அவந்தி சம்மதிக்கணுமேன்ற கவலை மட்டும் தான் இருக்கு. சின்ன வயசிலேர்ந்தே கஷ்டப்பட்டு வளர்ந்தவ... போற இடத்திலயாவது நல்லாயிருக்கட்டும்''

சித்தப்பா அவனை நெகிழ்ச்சியுடன் பார்த்தார்.



* * * * *

தங்கையிடம் சுருக்கமாய் சொன்னான்.

எதிர்பார்க்காத அவந்திகா தடுமாறிப் போனாள்.

''என்னண்ணா திடீர்னு.. என்ன அவசரம் இப்போ?''

''அம்மாவோட கவலையே உன் எதிர்காலத்தைப் பத்திதானே? இப்ப எனக்கும் அதே சிந்தனைதான்.''

''எனக்கு இப்ப

''என்மனைவியிடம் நாய்க்கு இருக்கிற மதிப்பு கூட எனக்கு இல்லே..''

''எப்படி சொல்றே..?''

''நாயை மடியில் தூக்கி வெச்சு கொஞ்சுறா''. என்னை தூக்கியெறிஞ்சு திட்டுறா..''

-ராஜீராதா, பெங்களூர்.

வேண்டாம்ண்ணா... நீ மட்டும் பண்ணிக்க?''

''எனக்கென்னம்மா அப்படி அவசரம்? குலசேகரன் சித்தப்பா உனக்காக பாத்த வரன் இது? ஒரே வீட்லே பொண்ணு குடுத்து பொண்ணு எடுக்கணும்னு சொன்னாங்களாம். உன்னை வீட்ல வச்சிட்டு எனக்கென்னம்மா அப்படி அவசரம்? பிடிக்கலேன்னா சொல்லு... வேற இடம் பார்க்கலாம். அதை விட்டுட்டு என்னை முதல்ல பண்ணிக்கன்னுல்லாம் சொல்லாதே! உனக்கு எப்ப தோணுதோ, அதுவரைக்கும் எனக்கும் வேணாம். நீயாரையாவது விரும்பறதாயிருந்தாலும் சொல்லு!''

''இ... இல்லேண்ணா அப்படி எதுவும் இல்லே!'' என்றாள் அவசரமாய்.

''யோசிச்சு நிதானமா சொல்லு! என்றான் பரமேஷ்வர்.

அதற்கடுத்த நாட்களில் குலசேகரன் சித்தப்பாவும் அவள் மனதை கரைக்க...

மேலும் அண்ணனுக்கு பாரமாய் இருக்க விரும்பாமல் ஏகப்பட்ட யோசனைக்கு பின், அரை மனதுடன் சம்மதித்தாள்.

முழு விபரமும் அறிந்தால் தங்கை சம்மதிக்க மாட்டாள் என்பதால்... இருபக்கமும் திருமணத்திற்கு முன் அதிக சந்திப்பு ஏற்படுவதை தடுக்குமாறு சித்தப்பாவிடம் சொல்ல அவரும் மாப்பிள்ளை வீட்டாரிடம் பேசினார்.

''அம்மா இறந்து எட்டு மாசம்தான் ஆகுது. முன்னே நின்னு செய்யறதுக்கு யாரும் இல்லாத வீடு. இந்த பெண் பார்க்கிற வைபவமெல்லாம் எதுக்குன்னு பீல் பண்றார். அவங்க போட்டோ இதிலே இருக்கு. உங்க பொண்ணு, பையனோட போட்டோ குடுங்க காண்பிச்சிடறேன். ஒரு நல்ல நாள்ல கோவில்ல வச்சு சந்திக்கலாம்.''

சம்மந்தியம்மா சந்திரமதிக்கு நிம்மதி.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பெரிய மனதுடன், ''அதுக்கென்னங்க பாவம். பெத்தவங்க இல்லாத வீடு.. அவங்க உணர்வுக்கும் மரியாதை கொடுக்கணுமில்லையா? மார்கழி நடந்திட்டிருக்கு. இப்ப எந்த நல்ல காரியமும் பண்ண வேண்டாம். தை மாசம் முதல் முகூர்த்தம்தான் பசங்க ஜாதகப்படி சரியான நாள். அன்னைக்கே நிச்சயதார்த்தமும், கல்யாணமும் வச்சுக்கலாம்.''

''இதுவும் நல்ல விஷயம்தான். பரமுகிட்டே சொல்லிடறேன். மாப்பிள்ளை. எங்க பொண்ணுகிட்டே பேச விருப்பப்பட்டா... இந்தாங்க... இது அவந்திகாவோட நம்பர்...

''ஐயோ... எதுக்குங்க.. நாங்க கொஞ்சம் கட்டுப்பாடு. கல்யாணத்துக்கு முன்னாடியே இதுமாதிரி பேசிக்கிறதெல்லாம் வழக்கமில்லைங்க. என் பையன் சித்தார்த்தும் அப்படிதான். படிச்சவன், மைசூர்ல கை நிறைய சம்பளத்துல வேலை பார்க்கிறான். ஆனாலும் பெத்தவங்களுக்கு பயந்து நடப்பவன். ஒரு கெட்ட



பழக்கமும் இல்லீங்க. இதுல ரெண்டு பேரோட போட்டாவில் கனிகா என்கிற கன்னிகா பரமேஸ்வரியை... முதல் பார்வையிலேயே பிடித்து விட்டது. குழந்தைத் தனமான முகம். நிறமாக, களையாக இருந்தாள்.

சித்தார்த்தும் அவன் சாயலில்தான் இருந்தான். நாகரீகமாக, கண்களில் அழுத்தமுடன்... பார்க்க பிரமாதமாய் இருந்தான்.

திருப்தியுடன் அவந்திகாவிடம் போட்டோவை காட்டினான்.

பார்த்தாள்... ஆனால் மனதில் பதிய மறுத்தான். மௌன சிரிப்பொன்றை உதிர்க்க.. அதுவே போதுமானதாய் இருந்தது பரமேஷ்வருக்கு.

எந்த சடங்கும், சம்பிரதாயமும் இல்லாத திருமண முடிவு அவந்திகாவிற்கு வியப்பைத் தந்தது. ஏதேதோ காரணம் சொல்கிறார்கள். ஆனாலும் வசதியான இடம். தங்களுக்கு சம்பந்தமே இல்லாத இடத்தில் சம்பந்தம் பேசியதும், தேரில் இதுவரை பரஸ்பரம் பார்க்காததும் யோசிக்க வைத்தது.

இடையில் ஒருமுறை சந்திரமதி வந்து பார்த்தாள். அவளிடம் பரிவுடன் பேசினாள். எல்லாம் சரி... அந்த சித்தார்த் ஒருமுறைக்கூட, போனில் பேச முடியாதது இயல்பான விஷயமாய் தெரியவில்லை.

'ஆனால், கனிகா போன்ற பெண் அமைய அண்ணனுக்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்ற திருப்தியோடு, இச்சந்தேகங்களை கேள்விகளாக ஆக்காமல் வாய்மூடிக் கொண்டாள்.

திருமணம் நடந்தேறியது.

## 14

கோவிலில் திருமணம். ஹோட்டலில் ரிசப்ஷன் விமரிசையாக நடந்தது. தடபுடலான விருந்து பெரும்பாலும் கார்களில் வந்திறங்கிய உறவினர்கள். அவந்திகாவிற்கு ஒரே ஒரு ஆச்சரியம் மட்டும் தான். திருமணம் நடக்கும் வரையிலும் சரி அதன்பின் நடந்த பால் பழம் சாப்பிடும் வைபவத்திலும் சரி இதோ வரவேற்பு நடந்து கொண்டிருக்கும்போதும் சரி சித்தார்த் அவளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

தெளிவாய் புரிந்தது.

அவருக்கு என்னை மணமுடிப்பதில் விருப்பமில்லை.

பிறகேன்?

முதலிரவில் விடை கிடைத்தது.

இடப்பாற்றாக்குறை... அது இதென்ன காரணங்கள் சொல்லி முதலிரவை தன் வீட்டிலேயே ஏற்பாடு செய்தாள் சந்திரமதி.

பரமேஷ்வர் எல்லாவற்றிற்கும் சந்தோஷமாய் தலையாட்டினான்.

தங்கைக்கு மிக உயர்ந்த இடத்தில் மணமுடித்து வைத்தாயிற்று. கண்ணுக்கு நிறைவாய் மாப்பிள்ளை. அம்மாவின் ஆத்மா சாந்தியடைந்திருக்கும். மனம் நிறைந்திருந்தது. தன் வம்சத்தை அதற்காக விலையாக கொடுத்ததில் துளியும் வருத்தமில்லை அவனுக்கு.

ஆம்... அவன் மணந்து கொண்ட கன்னிகா பரமேஸ்வரி.. பதினோறு வயதில் விபத்தில் அடிபட்டு கர்ப்பப்பை கிழிந்து துவம்சம் ஆகிவிட்டது.



''கூண்டில் நிற்பதுதான் கவாளியா?''

''இல்லை... டவாலி... டவாலி செய்த தப்புக்குத்தான் கூண்டில் நிற்க வைத்துள்ளார், நீதிபதி''.

- அசோக்ராஜா, திருச்சி.

அவளால் பூப்பெய்தவும் முடியாது. தாய்மை அடையவும் முடியாது. தாம்பத்ய சுகம் கூட அரைகுறையாகத்தான். இப்படிப்பட்ட பெண்ணை எப்படி கரையேற்ற முடியும்? அதற்கு தன் மகன் சித்தார்த் வாழ்க்கையை விலையாக வைத்தாள் சந்திரமதி. பரமேஷ்வரின் ஏழ்மையை தனக்கு சாதகமாக்கி அவந்திகாவை மருமகளாக்கிக் கொண்டாள்.

அலங்கரிக்கப்பட்ட அறையினுள், மெருகேற்றி அழகுப் பதுமையாக அவந்திகாவை அனுப்பி வைத்தனர்.

திறந்திருந்த கதவை உள் தாழிட்டாள். சித்தார்த் கட்டிலில் இவளுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தான். இவள் வருவதை யூகித்ததும், நிமிர்ந்து பாராமலேயே எழுந்தான். புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை காலால் நசுக்கி தரையில் விரிப்பை போட்டு படுத்துக் கொண்டு மற்றொரு விரிப்பால் தலை வரை போர்த்திக் கொண்டான்.

அவன் செய்கை முகத்தில் அடிப்பது போல் இருந்தது.

ஆனால், திட்டவட்டமாகப் புரிந்தது.

அவன் மனதில் வேறொருத்தி இருக்கிறாள். வற்புறுத்தப்பட்டிருக்கிறான். வேறு வழியின்றி என்னை மணந்திருக்கிறான்.

சரி.. எதற்காக வற்புறுத்த வேண்டும்? எந்த விதத்திலும் பொருத்தமில்லாத இடத்தில் சம்பந்தம் வைத்துக் கொண்டது



எதற்காக?

புரியவே இல்லை.

அதற்கு மேல் யோசிக்கவும் களைப்பாக இருந்தது. ஒரு வார்த்தையாவது அவன் பேசியிருக்கலாம் என்று தோன்றியது. அட்லீஸ்ட், ''உன்னை எனக்கு பிடிக்கவில்லை.'' என்றாவது சொல்லி இருக்கலாம்.

இருக்கட்டும் அவனாகவே தனக்குள் அலசி ஆராய்ந்து நிதர்சனம் புரிந்து கொள்ளும் வரை காத்திருப்போம்.

இந்த தனிமை எனக்கும் தேவைதான். என் மனசும் காதல் தோல்வியால் புண்பட்டிருக்கிறதல்லவா?

கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அவள் கண்விழித்தபோது மணி ஆறு!

புதிய வீட்டில், புதிய சூழலில் அவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டிருந்தது வெட்கத்தைத் தா அரக்க பரக்க எழுந்தாள்.

அப்போதுதான் கவனித்தாள் சித்தார்த் இல்லை.

ஒரு வேளை பாத்ரூமில் இருக்கிறானோ? அறைக்குள்ளேயே இருந்த பாத்ரூமின் கதவில் கை வைத்தாள்.

திறந்து கொண்டது.

வெளியே இருப்பான்.

அவந்திகா அவசர அவசரமாய் குளித்து, உடையுடுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

பரமேஷ்வர் ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டிருக்க நாணத்துடன் கனிகா காபி தந்தாள். மென் சிரிப்புடன் வாங்கிக் கொண்டான். ரசனையான காட்சி. மிச்சமிருந்த உறவினர்கள் விருந்து சமைப்பதில் மும்முரமாகியிருக்க.. கல்யாண களை வீடு முழுக்க விரவிக் கிடந்தது.

''அவந்திம்மா'' தாயின் கனிவும், அன்பும் மிளிர்ந்த வார்த்தையில் பரவசப்பட்டு திரும்பினாள்.

மாமியார் நின்றிருந்தார்.

மருமகளின் முகத்தில் அவசரமாய் எதையோ ஆராய்ந்தாள்.

அவந்திகா புன்னகைத்தாள்.

''ஏம்மா இவ்வளவு சீக்கிரம் எந்திரிச்சிட்டே?

களைச்சிப் போயிருப்பே தூங்கியிருக்கலாமே!

என்ன அவசரம்?''

''நேரங்கழிச்சி எந்திரிச்சு பழக்கமில்லேம்மா...

''எ... என்ன என்ன சொன்னே?''

நேரங்கழிச்சி''

''அதில்லே கடைசியா என்னை என்னன்னு சொன்னே?'' ஆர்வமாய் கேட்டாள்.

''அ... அம்மா அம்மான்னு!''

''என் ராஜாத்தி இனி நீ என்னை எப்பவும் அம்மான்னே கூப்பிடு... நீயும் எனக்கு பொண்ணுதான்டி கண்ணே!'' சட்டென நீர் மல்க அவளைக் கட்டிக் கொண்டாள் சந்திரமதி.

எதிர்பாராத அவந்திகாவும் நெகிழ்ந்துதான் போனாள்.

புது உறவு அதுவும் அம்மாவாக கிடைத்திருப்பது அதுவும் புகுந்த வீட்டில்? அதிர்ஷ்டம் தானே?

கீழேயிருந்த பரமேஷ்வர் இந்த காட்சியை பார்த்து விட்ட ஆச்சர்யமும், பரவசமுமாய் முகிழ்த்த கண்ணீரை கட்டுப்படுத்த திணறினான்.

தங்கையை நல்லதொரு இடத்தில் பாதுகாப்பாக சேர்த்து விட்டோம் என்ற நிம்மதியில் கன்னிகாவை அழைத்துக் கொண்டு தங்கள் அறைநோக்கிச் சென்றான். மனைவியை பற்றியிருந்த கரத்தினுள் காதலின் கதகதப்பு அதிகரித்திருந்தது.

மருமகளிடம் சித்தார்த் பற்றி எதையும் கேட்கவும் தயக்கமாய் இருந்தது.

மகனுக்கு விருப்பமில்லாத திருமணம். மிரட்டி பணிய வைத்ததெல்லாம்... தன் நடவடிக்கை மூலம் முதலிரவில் அவந்திகாவிடம் தெரியபடுத்தியிருப்பானோ?

''என்ன குறை இவளிடம்? களங்கமில்லா அழகு முகம்? கனிவும், பணிவும் மிகுந்திருந்த நடவடிக்கை. மனை மாறியிருக்காதா மகனிடம்? எப்படி கேட்பது?''

''அவந்திம்மா ... காபி தரட்டா?''

''ம்...''

''ஒரு நிமிஷம்... இந்த சோபாவிலே உட்காரு... வந்திடறேன்.''

''ம்...''

ஐந்து நிமிடம் கடந்த பின் சந்திரமதி காபி தட்டுடன் வந்தாள். இரண்டு பீங்கான் கோப்பைகளில் ஆவி பறந்தது.

''எடுத்துட்டு போம்மா!''

''இதையா எங்கேம்மா!''

''உங்க ரூமுக்குத்தான். சித்தார்த்துக்கு எந்திரிச்சதும் பெட் காபி தந்தாகணும். சொல்லலையா உன்கிட்ட?''

''அவர் இல்லையேம்மா!''

''புரியலே...''


''எ..ன்..ன.. சொல்..றே?'' சந்திரமதியின் முகம் மாறியது. உள்ளுக்குள் கிலி பரவத் தொடங்கியது.

ஐந்து மணிக்கே கண் விழித்துக் கொண்டாள் சந்திரமதி.

அதன் பிறகு சித்தார்த் வெளியே செல்ல வாய்ப்பே இல்லை. ஒரு வேளை மொட்டை மாடியில்?

''கொஞ்சம் இரு.. வந்துட்டேன்! '' சந்திரமதி தன் வீடு முழுக்க சல்லடைப் போட்டு தேடினாள்.





சித்தார்த் எங்குமில்லை.
எங்கே போனான்?
''எங்க... நம்ம.. சித்...''
''இரு .. போன் அடிக்குது!'' தலையணை பக்கத்தில் இருந்த செல்போனை எடுத்து ''ஹலோ'' என்றார்.
''ம்... இரு... தர்றேன்... சித்தார்த் பேசறான்... இந்தா!'' மனைவியிடம் நீட்டினார்.
''சித்தார்த்?'' நடுங்கின விரல்கள்.

**15**

''**ஹ**லோ...''
''ம்... என்னா சிரித்தான்.
நீ... நீ எப்ப வெளியேப் போனே?
''போகணும்னு நினைச்சிட்டா... எப்படியும் போய்ட முடியுமில்லையா?''
''என் ஒரு மாதிரி பேசறே? சீக்கிரம் வீட்டுக்கு வா! அவந்திகா உனக்காக காத்திருக்கா!
''யாரும்மா அவ?''
''என் இப்படி பேசுறே? அவ உன் பொண்டாட்டி!..
''இல்லேம்மா... அவ உன் மருமகள் அவ்வளவுதான். என்னைக்குமே... எந்த ஜென்மத்திலேயுமே அவ எனக்கு பொண்டாட்டியா ஆகவே முடியாது.''
''சி..த்..தா..ர்..த்!'' உதடுகள் நடுங்கின.
''என் பொண்டாட்டி... இதோ என் பக்கத்திலே இருக்கா.''
''சித்தார்த்!''
''கத்தாதேம்மா... என்னை பேசவிடு! உன் சுயநலத்துக்காக... உன் பொண்ணு வாழ்க்கைக்காக விஷத்தை கையிலே வச்சுக்கிட்டு என்னைமிரட்டி... எவளோ ஒருத்தி கழுத்துல தாலியக் கட்ட வச்சே! உனக்கா கூட இல்லே... கனிகாவுக்கு ஒரு வாழ்க்கை அமையட்டுமேன்னு தான்.. அந்த கல்யாணத்துக்கே சம்மதிச்சேன். ஆனா, அதுக்காக அனிதாவை மறந்துட முடியுமா?''
''சித்தார்த்.. நீ தப்புப் பண்றே.. அவந்திகா சட்டப்படி உன் மனைவி!''
''ஆனா மனசுக்கு? ஒண்ணுத் தெரியுமா? இன்னும் அவளை நான் சரியா நிமிர்ந்து கூட பார்த்ததில்லே... ஒரே ஒரு வார்த்தை கூட பேசினதில்லே... நான் அனிதாவுக்கு துரோகம் பண்ணுவேனா?''
''அதுக்காக...?''
''மொத்தமா என் அனிதாகிட்டே வந்துட்டேன்!''
''என்டா உன் புத்தி கெட்டு போகுது? அருமையா உனக்கு சொந்தமான பொண்டாட்டி இங்கே இருக்கப்ப எவனோ வேண்டாம்னு டைவர்ஸ் பண்ணிட்டு போனவளை லவ் பண்றேன்... அவளை தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு வந்து நின்னா... எந்த பெத்தவங்க? உன்னை பெத்தவளுக்கு உனக்கு நல்லது பண்ணத் தெரியாதா? என்னடா குறைச்சல் உனக்கு? எவளோ ஒருத்திக்கு ரெண்டாவது புருஷனா போகணும்னு ஒத்தைக்கால்ல நிக்கறே?''
''புரியாமப் பேசறியே... இப்ப நானும் கல்யாணம் ஆனவன்தானே?''
''இதோ பார்... வில்லங்கமாகவே பேசிட்டிருக்கே! இது சரியில்லே. நானே போய் போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளைண்ட் பண்ணுவேன். சட்டப்படி நீ இப்ப அவந்திகாவோட புருஷன். அவளுக்கு துரோகம் பண்ண நினைச்சியான்னா உள்ளேப் போய்டுவே!''
''தெரியும்மா.. சட்டத்தால என்ன வேணாலும் செய்ய முடியும்னு எனக்கும் தெரியும். ஆனா... இனி எந்த சட்டத்தாலேயும் என்னையும் அனிதாவையும் பிரிக்க முடியாத பந்தத்தை நான் ஏற்படுத்திக்கிட்டாச்சு.''
''டேய்...''
''கொஞ்சம் பேசவிடும்மா... எனக்கு நேரமில்லே...?
''இன்னைக்கு எனக்கும் அனிதாவுக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. மனசால மட்டுமில்லே... உடலாலேயும் நாங்க இணைஞ்சாச்சு...''
''சித்தார்த்...''
''குறுக்கே பேசாதே... என்னால முடியலே! போதும்மா... என் அனிதாவோட நாலு மணி நேரம் வாழ்ந்துட்டேன். இனி எங்களை யாராலேயும் பிரிக்க முடியாது. நாங்க ரெண்டு பேரும் நிறைய தூக்க மாத்திரை சாப்பிட்டுட்டோம்...''
''ஐயோ... சித்தார்த்... சித்தார்த்... இப்ப எங்கே இருக்கே?'' அலறினாள் சந்திரமதி.



''மிஸ், என்பையனுக்கு ஹோம் ஒர்க்கே இனிமே கொடுக்காதீங்க!''
''ஏன்?''
''என் புருஷனை ஒரு வீட்டு வேலைகூட செய்ய விட மாட்டேங்கறான்!''.
- நாகலட்சுமி கருணாநிதி, வந்தவாசி

''என்னாச்சு சந்திரா...?'' ரங்கராஜன் பதற்றமானார்.

''என்னை கோழையாக்கிட்டேம்மா! கனிகாவுக்கு வேற அலையன்ஸ் கிடைக்காதா என்ன? ஆனா, அதை காரணம் காட்டி என் வாழ்க்கைய நாசமாக்கிட்டியேம்மா. அனிதாவும் பாவம்மா... நல்லவ. எத்தனையோ விதவைங்க மறுமணம் பண்ணிக்கலையா? நானும் அந்த மாதிரி பண்ணியிருந்தா தியாகின்னு சொல்லியிருப்பே! டைவர்ஸ் பண்ணிட்ட பொண்ணுங்கன்னா மோசமானவங்கன்னு யார் சொன்னது உனக்கு? ஒரு படுபாவிகிட்டேர்ந்து டைவர்ஸ் வாங்கினப் பொண்ணு... இப்ப என் கூட சேர்ந்து செத்துக்கிட்டிருக்காளே... அவளையாம்மா கெட்டவன்னு சொல்றே?''

''இப்ப எங்கேடா இருக்கே? பெத்த வயிறு எரியுதே...!''

''பேச முடியலேம்மா... அனிதா வீட்லேதான் இருக்கேன். தயவுப்பண்ணி எங்க ரெண்டு பேரையும் ஒண்ணா சேர்த்து எரிச்சிடு. எங்க சாம்பலும் ஒண்ணா கலக்கட்டும். பிரிச்சிடாதேம்மா... ப்..ளீ...ஸ்!''

எதிர்முனை ஆப் ஆனது.

★★★



சோமு! நம்ம கல்யாணத்த பத்தி நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்!

ரொம்ப தேங்க்ஸ் மீனா! நாளைக்கே என் வீட்ல சொல்லி, எனக்கு பெண் தேட ஆரம்பிச்சிடுறேன்!

-கு. அருணாசலம், தென்காசி.

சந்திரமதி, ரங்கராஜன், பரமேஸ்வர் எல்லோரும் அனிதாவின் வீட்டை அடைந்த போது... எல்லாமே முடிந்து விட்டிருந்தது.

சித்தார்த்தும், அனிதாவும் மணக்கோலத்தில் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி கட்டிலில் சடலமாகி இருந்தனர்.

பெற்றவர்கள் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொள்ள... பரமேஷ்வர் மின்சார கம்பியை மிதித்த நிஜுசில் நின்றான்.

நேற்று இதே மணக்கோலத்தில் நின்றிருந்த அவந்திகா கண்முன் வந்து கலக்கமுற செய்தாள்.

என்ன நடந்தது?

இதற்காகவா அவசரப்பட்டேன்?

இனி அவந்திகா?

ஐயோ... கடவுளே!

போலீஸ் வந்தது. அனிதாவின் பெற்றோருக்கும் தகவல் போனது.

இறந்தவர்கள் கடிதமும் எழுதி வைத்திருந்தனர். அதன் படி வேறு வழியின்றி இருவரையும் ஒன்றாய் சேர்த்து எரித்தனர்.

அவர்கள்... காதலிலும் வென்று விட்டார்கள். கல்யாணத்திலும் ஒன்று சேர்ந்து விட்டனர்.

ஆனால் ... அவந்திகா?

காதலிலும் தோற்று விட்டாள்.

கல்யாணத்திலும் தோற்று விட்டாள்.

வெகுநேரம் கழித்தே அவள் காதுக்கு விஷயம் போனது.

திகைத்துப் போனாள்.

ஆனால்... கண்ணீர் மட்டும் வரவேயில்லை.

வாசலில் வேறொரு பெண்ணுடன் சடலமாக கிடந்திருந்தவனை பரிதாபமாக பார்க்கத் தோன்றியதே தவிர... தன் வாழ்க்கை சிதிலமாகிப் போன உணர்வே வரவில்லை.

எப்படி வரும்?

நேற்றுதான்... மணமேடையில் அவனை முதன் முதலாகப் பார்த்தாள். அதன் பின் ஒரே ஒரு வார்த்தை? புன்னகை? ம்ஹூம்... எதுவும் பரிமாறிக் கொள்ளவே இல்லையே!

ஏதோ... வந்தான்..போனான்! எல்லாம் ஒரே நாளில் நடந்து முடிந்து விட்டது.

பழகியிருந்தாலாவது... அந்த மாசத்திற்கு இரண்டு சொட்டு கண்ணீர் வரலாம்.

தாலி கட்டும்போது காற்று உரசுவதுப் போல் அவன் விரல் கழுத்தில் பட்டது போல் நினைவு.

நிஜம்தானா?

யோசித்துப் பார்த்தால் அதுக்கூட இல்லைப்போல்தான் தோன்றியது.

''அவி...அவந்திம்மா... ஏம்மா இப்படி கல்லு மாதிரி உட்கார்ந்திருக்கே... அழுதிடும்மா... அழு...அழு...உன்னை பார்த்தா பயமாருக்குடா!'' பரமேஷ்வர்தான் அவளைப் பிடித்து உலுக்கி... கதறினான்.

''முடியலேண்ணா... நிஜமாகவே அழுகை வரலே. எதற்காக...யாருக்காக அழுணும்! யாரிந்த சித்தார்த்? பெத்தவங்க கட்டாயத்துக்கு தாலி கட்டினான். தன்னை நம்பியவளோட சேர்ந்து உயிரை விட்டான். இதுக்காக நான் ஏன் அழுணும்? எனக்கும், அவனுக்கும் என்ன சம்பந்தமிருக்கு? நான் காதல்ல தோத்தப்ப

அழுதேன். அதுக்கு காரணமிருக்கு. என்னா கெளரிக்கை நான் நேசிச்சேன். விலகினப்ப வலிச்சது. இங்கே எதுவுமே நடக்கலையேன்னா. இதெல்லாம் விடுண்ணா. நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். நிஜமா? கேட்கணும்... இப்ப எதையும் பேச முடியாது. அனா கேட்டே ஆகணும். இதிலே பலிகடா யாரு? நீயா... நானா?'' உள்ளுக்குள் எண்ணங்கள் முட்டி மோதிக் கொண்டன.

''ஏம்மா.. அப்படி பார்க்கிறே?''

வேதனையுடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள் அவந்திகா.

## 16

பதினாறு நாள் காரியம் முடிந்ததும்... பெட்டியுடன் கிளம்பிய அவந்திகாவை புகுந்த வீடு அதிர்ச்சியுடன் பார்த்தது.

பரமேஷ்வர் திடுக்கிட்டு அருகில் வந்தான்.

''எங்கேம்மா கிளம்பறே?''

''நம்ம வீட்டுக்குண்ணா!''

சந்திரமதி மருமகளின் கையை கெட்டியாகப் பற்றி கொண்டாள்.

''என்ன அவந்திகா பேசறே? இதுதான் நம்ம வீடு. இனி இது உன் வீடும்மா... உள்ளே போம்மா''

''ஸாரிம்மா... என்னால இங்கே முடியலே.''

''எதையாவது பேசி என் மனசை மேலும் புண்படுத்திடாதே அவந்திகா. கல்யாண வீட்டை, கருமாதி வீடா மாத்திட்டுப் போய்ட்டான் என் பிள்ளை! உன் வாழ்க்கைய பாழாக்கிட்டேனேன்னு ஏற்கனவே குற்ற உணர்ச்சியிலே மருகிட்டிருக்கேம்மா.

கன்னிகா மாதிரி நீயும் எனக்கு ஒரே பொண்ணுதான். இப்ப நான் எதையும் சொல்லக் கூடாது. ஆனாலும் சொல்றேன். இன்னும வாழவே ஆரம்பிக்காத உனக்கு ஒரு நல்ல வாழ்க்கைய ஏற்படுத்தி உன்னை சீரும் சிறப்புமா வாழவச்சுப் பார்க்கணும்னு இந்த தாய் மனசு ஆசைப்படுது.''

''நீங்க என் மேலே இத்தளவுக்கு பாசமா இருக்கிறதே எனக்கு ஆறுதலா இருக்கு. என்னை தயவுப் பண்ணி நீங்க புரிஞ்சிக்கணும். இந்த வீடு என்னை சங்கடப்படுத்துது. அப்பப்ப நான் உங்களை வந்து பார்த்துப்பேன். இப்ப என்னை போக அனுமதிக்கணும்.''

அதுநாள் வரை மருமகளிடம் ஒரு வார்த்தையும் பேசியிராத ரங்கராஜன் தளர்வாய் அவள் முன் வந்து நின்றார்.



''அம்மாடி... இந்தக் கல்யாணம் நடந்திருக்கக் கூடாது. சில விஷயங்களை மூடி மறைக்க உன்னை பலிகடாவா ஆக்கிட்டோம். அதுவே எந்நேரமும் உறுத்திக்கிட்டிருக்கு. நீ இப்படி ஒரேயடியா எங்களை ஒதுக்கிட்டு கிளம்பினா... அது எங்களை தண்டிக்கற மாதிரி தானே''

''ஐயோ... அப்படியெல்லாம் இல்லே மாமா!

எந்த பெத்தவங்களும் தன் பிள்ளைக்கு ஒரு வாழ்க்கை அமையணும்ங்கிறதுக்காக... சில உண்மைகளையோ, கசப்புகளையோ மறைக்க கல்யாணம் பண்ணத்தான் பார்ப்பாங்க.

எனக்கு யார்மேலயும் கோபமில்லே. உங்க பிள்ளை உட்பட! எங்க வீட்ல கொஞ்ச நாள் இருக்கணும்னு தோணுது... பின்ன மாமா!''

ரங்கராஜன் மனைவியை பார்த்தார். கண்களால் சில விஷயங்களை பகிர்ந்துக் கொண்டார். பிறகு...

''சரிம்மா... நீ சொல்றதும் நியாயம்தான். ஆனா கொஞ்ச நாள்தான்.... அப்புறம் இங்கே வந்துடணும்.

''ம்'' என்றாள் தலைகவிழ்த்து.



''மாப்பிள்ளே... உங்க தங்கச்சி அங்கே தனியா இருக்க வேண்டாம். நீங்க அவகூட போய் துணைக்கு இருங்க. அதுவரைக்கும் கனிகா இங்கேயே இருக்கட்டும். என்ன சந்திரா நான் சொல்றது?''

ஆமாங்க... மாப்பிள்ளையும் கூட போகட்டும். பாரும்மா அவந்தி... ரொம்ப நாள் அங்கேயே இருந்துடாதே... சீக்கிரம் வரப்பாரு!

''ம்''

தங்கையுடன் இருப்பது அந்த சூழ்நிலையில் இருவருக்குமே ஆறுதல் தரும் என்பதை உணர்ந்த பரமேஷ்வர் எதுவும் பேசாமல் அவளுடன் புறப்பட்டுச் சென்றான்.

இயல்பாய் இருப்பதை

''தலைவரின் சிலைக்கு ஏன் 'தலை' வைக்காமல் விட்டு விட்டார்கள்?''

'சிலையை உடைக்க வருகிறவர்கள் அடையாளம் தெரியாமல் அவதிப்படட்டுமே! ன்னுதான்.

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

போல் தன்னைக் காட்டி கொள்ள பெரிதும் முயற்சிக்கிறாள் என்பதை எளிதில் உணர்ந்து கொண்டான் பரமேஷ்வர்.

ஆபிஸிற்கு லீவுப் போட்டு விட்டு தங்கையுடனே இருந்தான்.

''அண்ணா... உனக்கு பிடிச்ச சேமியா புலாவ் பண்ணியிருக்கேன்... உட்காரு...''

''அதெல்லாம் அப்புறம் சாப்பிட்டுக்கலாம். இப்படி உட்காரு அவந்தி''

அமர்ந்தாள்.

''என்னாலதானே உனக்கு இப்படி?''

''இப்ப என்னாகிப்போச்சு? நான் அதே பழைய அவந்திகாவாதானே இருக்கேன். போன தலைமுறையா இருந்தாலும் சித்தார்த்தோட அம்மாவும், அப்பாவும் நான் பூவையும், பொட்டையும் இழக்க கூடாதுன்னு உறுதியா இருந்து எனக்கு எந்த சங்கடத்தையும் தரலியே... அப்புறம் என்னண்ணா?''

''எனக்கு சமாதானம் சொல்றியா?''

''பிளீஸ்ண்ணா... நான் பழசு எதையும் நினைச்சுப் பார்க்க விரும்பலே... நான் உங்ககிட்டே பேச வந்தது வேற...''

''சொல்லு!''

''நான் மறுபடியும் வேலைக்குப் போகணும்னு நினைக்கிறேன்.''

''என்ன அவந்தி சொல்றே!'' நெற்றி சுருங்கியது.

''ஆமாண்ணா... அதுக்கு நீங்கதான் ஏற்பாடு பண்ணணும்.''

புரிஞ்சிதான் பேசறியா? உனக்கென்ன தலை எழுத்து? தவிர.. உன் மாமனாரும், மாமியாரும் நீ வேலைக்கு போறதை அனுமதிக்க மாட்டாங்க.''

''அவங்க அனுமதி எனக்கு அவசியமில்லேண்ணா''

''அ..வ..ந்..தி...''

....?!''

'' ஏன் இப்படி பேசறே? அவங்க நல்லவங்க. நான் என்ன நினைச்சேனோ.. அதைத்தான் அவங்களும் யோசிச்சிருக்காங்க. கண்டிப்பா உனக்கொரு நல்ல வாழ்க்கைய...''

''அண்ணா பிளீஸ்...''

''........?!''

எனக்கும் அவங்க மேல மரியாதை இருக்கு. மத்தபடி எந்த சம்பந்தமும் இல்லே!''

''அ..வ..ந்..தி?!''

''அண்ணா... நான் எப்பவும் உன் தங்கச்சியாதான் இருக்க ஆசைப்படறேன். எனக்காக... எனக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கணும்ங்கறதுக்காக நீ செய்த தியாகம் எப்பேர்பட்டது?''

''அ..அவந்தி... உ..உனக்கு?!''



''எல்லாமே தெரியும். ஏண்ணா இப்படி? கூடப்பிறந்தவளுக்காக கடன்படலாம். அவ ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுக்கலாம். பிடிச்ச இடங்களுக்கு அழைச்சிட்டுப் போய் சந்தோஷப்படுத்தலாம். இதுதான் லிமிட். ஆனா, நீ... உன் சந்ததிக்கே முற்றுப்புள்ளி வச்சுட்டியேண்ணா! எதுக்காக? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்ல வேணாமா?''

''இ... இதெல்லாம் பெரிய தியாகமா? ரெண்டு குழந்தைய தத்து எடுத்துக்கிட்டாப் போச்சு. ஆனா, உன் வாழ்க்கை ஒரே நாள்ல...'' அதற்கு மேல் தாங்க முடியாமல் அழுது விட்டான்.

''அழாதேண்ணா... எனக்காக நீ ரொம்பவே அழுதுட்டே! நம்ம வீட்டுக்கு வந்த இந்த ஒரு வாரத்துல நானும் கவனிச்சுட்டுதான் இருக்கேன். போதும்ண்ணா நீ அழுதது. உனக்காக... நீ என் மேல வச்சிருக்கிற பாசத்துக்காக நீ விருப்பப்பட்டபடி வாழப் போறேன்.''

''நிஜமாவா சொல்றே?'' சட்டென முகம் மலர்ந்தது.

''ரொம்ப கற்பனை பண்ணிக்காதே! நான் நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். ஆனா தயவு பண்ணி அதுக்கு இப்ப முட்டுக்கட்டை போடக்கூடாது''.

''......?!''

''நான் மேற்கொண்டு படிக்கப் போறேன்.''

''படிக்கப் போறியா?''

''ஆமாண்ணா! என் இழப்புகளை படிப்பு மூலமா மறக்கப் போகிறேன்.''

''அதுக்கு நான் உடனடியா லேடீஸ் ஹாஸ்டல்ல சேரணும்.''

''என்ன அவந்திகா.. இப்படியொரு குண்டை தூக்கிப் போடறே? நான் அனுமதிக்க மாட்டேன். நான் இருக்கப்ப... நீ எதுக்கு...?''

''இல்லேண்ணா... அண்ணி ரொம்ப நல்லவங்க. அவங்க மனசிலேயும் ஏகப்பட்ட ஆசை இருக்கும். அதை என்னால புரிஞ்சிக்க முடியும். நான் இடையிலே எதுக்கு? தவிர, எனக்கும் தனிமை தேவைப்படுது. புரிஞ்சிக்கண்ணா. இன்னொரு முக்கியமான விஷயம். சித்தார்த்தோட மனைவிங்கற உரிமைக்காக, அவங்க சொத்திலேயோ, வீட்டிலேயோ எனக்கு எந்த உரிமையும் வேண்டாம்.''

''அவந்திகா... நீ இப்படியெல்லாம்...''

''புரிஞ்சிக்கண்ணா... நான் எல்லாத்தையும் மறக்க நினைக்கிறேன். அதை நினைவுப்படுத்தற எதுவும் எனக்கு வேண்டாம்.

ஒரு பெண்ணுக்கு கடைசிவரை துணை நிற்கிற படிப்பும், உழைப்பும், சுயபலமும் தான் எனக்கிப்ப அவசியம். அதுக்காக எனக்கு நீங்க துணையா இருந்தாப் போதும்ண்ணா!''

அவனின் தீவிரத்திற்கு முன் எதுவுமே செய்ய இயலாத

பரமேஷ்வர் பெருமூச்சுடன் தங்கையின் தலையை தடவிக் கொடுத்தான்...சம்மதமாக!

மாமனாரும், மாமியாரும் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல்... விமன்ஸ் ஹாஸ்டலில் தங்கி வேலைக்குச் சென்றாள் அவந்திகா.

தபாலில் பட்ட மேற்படிப்பு படித்தாள்.

வேலைக்கு போய் வந்த நேரம் போக கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட அத்தனை கோர்ஸையும் படித்தாள்.

## 17

காலம் மிக வேகமாக தன் பணியை செய்ய... ஏழு வருடங்கள் கடந்து சென்றன.

கார் சிக்னலில் நின்றது. கௌசிக் கிரீன் சிக்னலுக்காக காத்திருந்தான்.

''டாடி... ரொம்ப லேட்டாயிடுச்சு... மிஸ் திட்டுவாங்க... காரை எடுங்க... டாடி...'' ஆறுவயது தர்ஷிணி அவசரப்படுத்தினாள்.

''இரும்மா... சிக்னல் விழட்டும்.''

''இன்னைக்கும் மிஸ் திட்டப் போறாங்க. உங்களால தான் யூ ஆர் லேஸி டாடி... உங்கிட்டே ஸ்பீடே இல்லே!''

''ஸாரிடா... இதோ போய்டலாம்'' என்றவனுக்கு மனசு வலித்தது. சின்னப்பெண். தந்தையை சோம்பேறி என்கிறாள். அவளை குறை சொல்ல முடியாது. பெரியவர்களின் பாதச்சுவட்டை பின்பற்றிதானே சின்னப் பாதங்கள் அடியொற்றி நடக்கின்றன? நிரஞ்சனா அவனை மதித்தால்தானே?

தான் பணக்கார வீட்டுப் பெண் என்ற மமதை அவளிடம் அதிகமாகவே இருந்தது. கூட்டுக் குடும்பம். சேர்ந்து தொழில் பார்த்ததால் பணமழை கொட்டியது. கல்யாணமான புதிதில் கிடைத்த மரியாதை... விரைவில் தேய்ந்து கட்டெறும்பானது.

வீட்டோடு மாப்பிள்ளை என்பது முன்பே முடிவான பேச்சு. வேறு வழியின்றி அவனின் அம்மா தனிமையில் வசித்தாள். அவள் வற்புறுத்தி மணமுடித்து வைத்த சம்பந்தம்தானே? குடும்பத் தொழிலை பார்ப்பதற்கு அரசு உத்யோகம் இடைஞ்சல், தவிர சம்பளமாய் கிடைக்கும் சில ஆயிரங்கள் கவுரவக் குறைச்சல் என பிரெய்ன் வாஷ் பண்ணி, கொஞ்சி கெஞ்சி கணவனை வி.ஆர்.எஸ். வாங்க வைத்து விட்டாள்.

நிரஞ்சனாவின் அழகு, நுனிநாக்கு ஆங்கிலம், கார், படாடோபம், ஹனிமூன், பாக்கெட்டில் புரண்ட பணம், மனைவி சொல்லை



வேதமாக மதிக்க வைத்தது.

நிரஞ்சனா உண்டான போது அப்படித் தாங்கினான். அந்த நேரத்தில் காமாட்சிக்கு உடல் நிலை சரியில்லாமல் போகவே... அம்மாவை பார்க்க ஓடினான்.



அதிக காய்ச்சல், வாந்தி என வாடிப் போயிருந்த அம்மாவை மூன்று நாட்கள் பக்கத்திலேயே இருந்து பார்த்தது கொலை குற்றமாகி விட்டது மாமியார் வீட்டுக்கு.

''என் பொண்ணு வாந்தி, மயக்கம்னு முடியாம கிடக்கறப்ப... உங்கம்மா கூடவே இருக்க மனசாட்சி எப்படி இடம் கொடுத்துச்சு மாப்பிள்ளே!'' என்று கேட்டாள் மாமியார்.

''இல்லே அத்தே அம்மா அங்கே தனியா ரொம்ப முடியாம...''

''யார் அப்படி தனியா இருக்கச் சொன்னது? கப்பல் மாதிரி வீடு இருக்கு. ஒரு மூலையில வந்து இருந்துக்க வேண்டியது தானே? யார் வேண்டாம்னு சொன்னா? கவுரவம் பாருங்க மாப்பிள்ளே... எனக்கு என் பொண்ணு முக்கியம்... அவ கண்ல ஒரு சொட்டு கண்ணீர் வந்தாலும் என் நெஞ்சு வெடிச்சிடும் சொல்லிட்டேன்.'' மாமியார் கௌசல்யா சொன்னது கெஞ்சலாக தெரியவில்லை. மிரட்டல் போல இருந்தது.

நீங்க புதுசா அறிமுகப்படுத்தும் நடிகை ஒவ்வொரு கவர்ச்சி காட்டி நடிக்கிறாங்களாமே!

ஜயையோ! இந்த வதந்திகளை நம்பாதீங்க. அவங்க கவர்ச்சி மட்டும் தான் காட்டுவாங்க. மத்தபடி நடிக்க தெரியாது.

- அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

நிரஞ்சனா ஒரு படி மேலேபோய் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி அவன் சட்டையையே கிழித்து 'அதெப்படி என்னை விட்டு போகலாம் என்று?'

வேறு வழியின்றி தன்னைத் தானே சமாதானப்படுத்தி கொண்டான்.

அம்மாவை அந்த வீடு ஒரு பொருட்டாகவே நினைக்காததால்.... அவர்களுக்கு தெரியாமல் போய் பார்த்து வந்தான்.

அந்த வீட்டு ஆண்களுடன் ஒட்டி உறவாடுவதே சிரமமாய் இருக்க... தொழிலில் எப்படி கவனம் செலுத்த முடியும்? சின்ன சின்ன தவறுகளுக்கெல்லாம் ஏளனம் செய்தே திருத்தினார்கள்.

ஆனாலும் கௌசிக் பக்கம் தவறுகள் அதிகரிக்கவே... அவன் மீதான மரியாதை குறைய ஆரம்பித்தது.

தைரியமாய் அவனை தனிமைப் படுத்தினர். வீட்டுப் பொறுப்பை அவன் தலையில் கட்டி, நாளடைவில் மளிகை சாமான், கரண்ட்பில், டெலிபோன் பில், பிளம்பர் போட்டு பொகக்கு வேலையெல்லாம் அவன் மேற்பார்வையில் வந்தமர்ந்தது. அதற்கான சம்பளமாக ஒரு தொகை மாதம் மாதம் அவன் கைக்கு வந்தது. அது அவன் அரசுப் பணியில் வாங்கின சம்பளத்தில் பாதிக் கூட இல்லை.

நிரஞ்சனாவின் பேச்சிலும் நடவடிக்கையிலும் ஏகமாற்றம். இரண்டாவது பெண் திரிஷா பிறந்த பிறகு முதல் குழந்தையை குளிப்பாட்டி, உணவூட்டி, பள்ளிக்கு அழைத்துச் சென்று, அழைத்து வருவதும் அவன் தான்.

எதற்கெடுத்தாலும் கணவன் மீது எரிந்து விழுந்தாள்.

''தர்ஷினிக்கு இன்னைக்கு மேத்ஸ் டெஸ்ட்டாம். இதை நேத்தே கவனிச்சு சொல்லி குடுத்திருக்க வேண்டாமா? எதை தான் உருப்படியா செஞ்சிருக்கீங்க? பிள்ளையையும் ஒழுங்கா பார்க்கத் தெரியலே.

உங்களால என் வீட்டில் எனக்கே மரியாதை இல்லாம போச்சு.சே... ஒவ்வொருத்தனும் எங்கேயோ பிரில்லியண்ட்டா இருக்கான்? நீங்க ஏன் இப்படி இருக்கீங்க? வளத்தைப் பாருங்க... தொப்பை விழுந்து அசிங்கமா... வீட்லேயே ஜிம் இருக்கு. கொஞ்சம் சீக்கிரம் எந்திரிச்சி எக்சர்சைஸ் பண்றதுக்கு உடம்பு வணங்க மாட்டேங்குது... லேஸி... லேஸி... ஒரு பிரச்சனை என்றால்... எல்லாவற்றிற்கும் சேர்த்து வைத்து திட்டுவாள் நிரஞ்சனா.

அத்தனையும் தர்ஷினி எதிரிலேயே?

நிரஞ்சனாவின் குணம் கொண்டே அவளும் வளர்ந்தாள்.

சலிப்புத்தட்டியது வாழ்க்கை. நிரஞ்சனா எதிர்த்து ஒரு வார்த்தை பேசி விட முடியாது. அவ்வளவுதான் அந்த வீட்டு உறுப்பினர்களின் கரங்களில் இவன் சிவிடல்லவா பறிபோகும்?

நாளாக, ஆக மனைவியின் வாயில் சம்பாதிக்க வக்கற்றவன் என்ற ரீதியில் வார்த்தைகள் வந்து விழுந்தன.

கௌசிக் இப்போதெல்லாம் நிறைய யோசித்தான். தர்ஷினியை பள்ளியில் விட்டுவிட்டு, காரை தன்னிச்சையாக கடற்கரை நோக்கி செலுத்தினான்.

இப்போதெல்லாம் அவன் மன உளைச்சலை தனிப்பது அந்த இடம்தான்.

காரணம்... கடற்கரை காற்று அல்ல!

அவளும்' அவந்திகாகவும் வந்தமளும்... அதே இடத்தில் அமரும் போது... வேதனையும், நிம்மதியும் ஒரு சேர ஆட்கொள்ளும்.



அவந்திகாவை ஒதுக்கியது எப்பேர்பட்ட அறிவீனித்தனம்?

மகன் பணக்காரனாகி விடுவான் என்று ஆசைப்பட்டு திருமணம் செய்து வைத்த அம்மா இன்று தனிமையில் வசிக்கிறாள்.

நல்ல சாப்பாடுதான். ஆனால் உடம்பில் ஒட்டவில்லை. எந்த ஒரு ஆணுக்கும் திருமணத்தில் எதிர்பார்ப்பு என்ற வகையில் முதலிடம் வகிப்பது, 'என்னை புரிந்து, என் அம்மாவை தன் அம்மாவாக பார்த்துக் கொள்வது தானே? எதுவுமே நடக்கவில்லையே. பல்லைப் பிடுங்கின பாம்பல்லவா அவன்?

தன் செலவிற்கு கூட அவர்களை அல்லவா எதிர்பார்க்க வேண்டியிருக்கு?

'நோ.... கூடாது... பொறுத்தது போதும். சொந்தமாய் எனக்குத் தெரிந்த தொழிலை தானே தனியாய் தொடங்கியாக வேண்டும். என் வீட்டில் என் அம்மாவோடுதான் இனி இருப்பேன். நிரஞ்சனா என் வீட்டில் வந்து வாழ வேண்டும். வராவிட்டால் போகட்டும். நான் ஏன் அவர்களுக்கு பயப்பட வேண்டும்?

என் தங்கை சொன்னது எத்தனை உண்மை? வாழ்க்கையை கமர்ஷியலாக மட்டுமே பார்த்தான் விளைவு. இன்று செல்லாக்காசாகி விட்டேன். நிரஞ்சனா அன்பாக இரண்டு வார்த்தை பேசமாட்டாளா என்று ஏங்குகிறேனே! ஏன்?



வாழ்க்கை நேசத்தாலும், உணர்வுகளாலும் கட்டுண்டு கிடப்பதாலா?

எப்படி யோசிக்காமல் முடிவெடுத்தேன்? பாவம் அவந்திகா! என் மீது அளவுக் கடந்த பாசம் வைத்திருந்தாளே! எவ்வளவு நாசுக்காய், மனசாட்சியின்றி அவளை என் வாழ்க்கையிலிருந்து நீக்கினேன்?

அதன் பிறகு அவந்திகா என்ன ஆனாள்?

திருமணமாகி இருக்குமா? என்னைப் போல் அவளும் இங்கு வருவாளா?

காதலிக்கும் போது அவள் சொன்னது நினைவிற்கு வந்தது.

''கௌசிக்... நமக்கு கல்யாணமாகி, குழந்தை, குடும்பனு ஆகி, தாத்தா பாட்டினு வயசான பிறகும் நாம

மாப்பிள்ளைக்கு 25 லட்சத்துக்கு இருக்குன்னு சொன்னதை நம்பி பொண்ணு கொடுத்து தப்பா போச்சு ஏன்?

''25 லட்சத்துக்கு கடன் இருக்கு''

-தேனிமுருகன், தேனி.

எப்பவும் உட்கார்ந்து பேசற இந்த பீச்சுக்கு வர்றதை நிறுத்தவேக் கூடாது'' என்றாள் காதலாய்.

'அவந்தி... நீ வேறு நான் வேறாகிப் போனாலும் நீ சொன்ன மாதிரியே நான் இங்கே வந்துக் கொண்டிருக்கிறேன். ஏன்னா... என் காதல் இங்கேதான் புதைந்திருக்கிறது. நீயும் இங்கே வருவியா?'

ஏதேதோ கேள்விகள், நினைவுகள்... அவனை அலைகழித்தன.

அவன் சென்ற பிறகு ஒரு மணி நேரம் கழித்து அவந்திகா வந்தாள்.

அதே இடத்தில் அமர்ந்தாள்.

மனசு எரிந்தது. வைராக்கியம் கூடியது.

அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றமும், தோல்வியும் அவளை பட்டை தீட்டிக் கொண்டே இருக்கிறது.



## 18

''மாலினி டைமாச்சுக்சு கிளம்பலாமா?'' சேலையின் மடிப்பை சரிப்பண்ணியபடி அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டாள் அவந்திகா.

''நானும் ரெடி. லன்ச் பேகை கார்ல வச்சுட்டு வந்துடறேன்.''

''சவுந்தர்யாவுக்கு லன்ச் குடுக்க மறக்கலியே...''

''அதெல்லாம் இல்லே... குடுத்து அனுப்பிட்டேன்.''

''சவுந்தர்யாவை ஸ்கூல்ல விட்டுட்டு வர வேற ஆட்டோவை ஏற்பாடு பண்ணணும். இவன் சரியில்லே... துணி மூட்டையை அடுக்கி வச்ச மாதிரி ஏகப்பட்ட குழந்தைகளை ஏத்திக்கிட்டுப் போறான். அதுவும் வேகமா ஓட்டிட்டுப் போறான்.''

''நீ சொல்றது சரிதான் அவந்திகா... அட... வாங்க... வாங்கண்ணா, வாங்கண்ணி, அவந்தி... சீக்கிரம் வா... யார் வந்திருக்காங்கன்னு பாரு...''

அவந்திகா ஹேண்ட் பேகை மாட்டிக் கொண்டு வெளியில் வந்தவள், ''அண்ணா!'' என்றாள். உற்சாகமாக.

பரமேஷ்வரும், கனிகாவும், நான்கு வயது அம்சவர்தனை கையில் பிடித்தபடி நின்றிருந்தனர்.

பரமேஷ்வர் தங்கையையே உற்றுப் பார்த்தான். முன்பிருந்த அவந்திகாவிற்கும், இப்போதிருந்த அவந்திகாவிற்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருந்தது.

புத்திசாலித்தனமும், தன்னம்பிக்கையும் மிளிர்ந்த முகம். சின்னதாய் பொட்டு, மெலிதான லிப்ஸ்டிக் தீற்றல், தளர்வாய் பின்னலிட்டு, ஜரிகை பார்டரிட்ட காட்டன் சேலை கட்டியிருந்தாள்.





பக்கத்து வீட்டுப் பொம்பளை வாங்கியிருக்கிற சேலை விலை அதிகமோ?

நீங்க என்ன மந்திரவாதியா டாக்டர்? கரெக்டா கண்டுபிடிச் சுட்டீங்களே!

பின்னே! உங்களுக்கு உடம்புல எந்த குறையும் இல்லே. ஆனாலும் வயிறு எரியுதுன்னு சொல்றீங்களே!

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

இன்று அவந்திகா சாதாரண பெண் இல்லை. பன்னாட்டு வங்கியில் உயர் அதிகாரி.

''வாங்கண்ணி... ஹாய் குட்டிப்பையா... எப்படியிருக்கே?''

''நல்லாருக்கேன் அத்தை!''

''குட்... என்னண்ணா நின்னுக்கிட்டே இருக்கீங்க... உக்காருங்க...''

''இல்லேம்மா... கனிகாவோட அத்தைக்கு உடம்பு சரியில்லைன்னு பார்க்க வந்தோம். ரெண்டு தெரு தள்ளிதான் வீடு... சரி, நீ ஆபிஸுக்கு கிளம்பறதுக்குள்ளே உன்னையும் பார்த்துட்டு போய்டலாம்னுதான் வந்தோம்.''

''அரக்க பரக்க கிளம்பறதுக்கு எதுக்கு வரணும்?''

''கோவிச்சுக்காதே அவந்தி! நீயும் பிஸியா இருக்கே தானே? சரி... விடு.. இருக்கிற சில நிமிஷங்கள்லேயும் சண்டை போடணுமா? நீ எப்படிம்மா இருக்கே மாலினி?''

''நிம்மதியா இருக்கேண்ணா... இருங்க காபி எடுத்துட்டு வர்றேன்.''

''அதெல்லாம் எதுவும் வேண்டாம்மா... கமிங் சண்டே காலையிலேயே வந்துடறேன். மூணு வேளையும் இங்கே தான் சாப்பிடறோம்.... சரியா?''

''ம்'' என்று இருவருமே புன்னகைத்தனர்.

''அம்சவர்தன் ஒண்ணுமே பேசமாட்டேங்கிறான்... என்னாச்சுடா உனக்கு?''

''இன்னைக்கு இங்கே அழைச்சிட்டு வந்துட்டதால ஸ்கூலுக்கு அனுப்பலே... அந்த கோபம். மிஸ் திட்டு வாங்கணும்.''

''அடடா... என் செல்லக்குட்டிக்கு படிப்பு மேல இவ்வளவு அக்கறையா? வெரிகுட்... டாடிய அப்புறமா நான் அடிக்கறேன் சரியா?''

''சரி... அத்தை!''

''கிளம்பறோம்மா... சண்டே வந்திடறோம்.''

''சரிண்ணா...''

அதுவரை எதுவும் பேசாமலிருந்த கனிகா அவந்திகாவின் அருகில் வந்தாள்.

அவள் கையைப் பற்றினாள்.

''உன்னைப் பார்க்க... பார்க்க இதயத்தை ரம்பத்தால அறுக்கிற மாதிரி இருக்கு அவந்திகா. என் அண்ணன் இறந்துப்போன வலி கூட மறந்துப் போச்சு. ஆனா, உன்னை இப்படிப் பார்க்கறப்ப... தாங்கலே'' கண்கள் துளிர்த்தன.

''எனக்கென்ன அண்ணி... நான் நல்லாதானே இருக்கேன்.''

''படிப்பும், பணமும் தான் வாழ்க்கையா? நீ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

பதில் கூறாமல் சிரித்தாள்.

''என்னாலதானே? உனக்கு கல்யாணம் நடக்கறதுக்கு மூல காரணமே நான் தானே? எதுக்கும் உதவாத காகித மலரா நான் இருக்...''

சட்டென அவள் வாயைப் பொத்தினாள்.

''ப்ளீஸ்... உங்களை நீங்களே ஏன் குறைச்சுப் பேசறீங்க அண்ணி? அம்சவர்தனை ஆர்பனேஜ்லேர்ந்து தத்தெடுத்து அன்பைக் கொட்டி வளர்க்கறீங்களே! இந்த மனசு எத்தனை பேருக்கு வரும்? எது நடக்கணுமோ அது நடந்தது. எது நடக்க வேண்டியதோ அது நடந்துட்டு இருக்கு...''

''அப்ப... நான் சொன்னது?''

''அதுக்கு என்கிட்ட பதில் இல்லே... கிளம்பலாம் நேரமாச்சு...''

அதற்கு மேல் அந்தப் பேச்சைத் தொடர விரும்பவில்லை. கனிகா கணவனுடன் வாசல் நோக்கிச் சென்றாள்.

★★★★

''வா.. கௌசிக்... சொன்னதெல்லாம் கொண்டு வந்தியா? என்றார். பேங்க் மேனேஜர் வாசுதேவன்.''

''கொண்டு வந்திருக்கேன் சார்... லோன் கிடைச்சிடுமா?''

சொல்லி இருக்கேன். என் மேல தனி மரியாதை வச்சிருக்காங்க. தப்பான ஆளுக்கு சப்போர்ட் பண்ண மாட்டேன்னு நல்லாத் தெரியும். நீ தொடங்கப்போற பிஸினஸ் பத்திய டீடெய்ல் வச்சிருக்கே இல்லே?''

''இருக்கு சார்!'' என்றவனுக்குள் கொஞ்சம் உதைப்பாகதான் இருந்தது.

மனதால் அடிபட்டு, அசிங்கப்பட்டு, பின் சொந்தமாய் தொழில் துவங்க முடிவெடுத்து வங்கியில் லோன் எதிர்பார்க்கிறான். உயர் அதிகாரி மனது வைத்தால் முடியும். அவனை அறிந்த மேனேஜர் உயர் அதிகாரியிடம் அவனைப் பற்றி சொல்லி வைத்திருந்தார்.



இவளிடமும் அவனைப் பற்றி கூறியிருந்தார்.

கண்டிப்பானவள். இளம் வயதிலேயே தன் திறமை மூலம் உயர் பதவியில் அமர்ந்தவள். திருமணமான ஒரே நாளில் விதவையானவள்.

மேலும் அரைமணி நேர காத்திருப்புக்குப் பின் கௌசிக் அழைக்கப்பட்டான்.

''கௌசிக்... புறப்படு.. தேவைப்படற விஷயங்களை மட்டும் பேசு'' என்றார் வாசுதேவன்.

''ஓக்கே சார்... மேடம் காபின் எங்கே இருக்கு?''

மாடியிலே செகண்ட் ரூம்.. ஒரு நிமிஷம் இரு.... மாலினி இங்கே வாம்மா... சாருக்கு மேடம் ரூமை காட்டு!'' சொல்லிவிட்டு நகர்ந்தார்.

சர்சதியில் இயங்கிக் கொண்டிருந்த அப்பெண் இவர்களை நோக்கி வர... கௌசிக் அதிர்ந்தான்.

''இவளா? இவளெங்கே இங்கே?''

அவளும் இவனைப் பார்த்து விழிகளை அகல மலர்த்தினாள்.

''நீங்களா?''

''நீங்களா?''

அவளைப் பார்க்கவே மனம் சஞ்சலப்பட்டது. கேசவ் அவளை டைவர்ஸ் பண்ணிவிட்டு வேறொரு விதவைப் பெண்ணை மணந்து வசதியாய் சந்தோஷமாய் இருக்கிறான். குழந்தை சவுந்தர்யாவின் எதிர்காலத்திற்கு என ஒரு தொகையை தா கேசவ் முன் வந்த போது மாலினி புறக்கணித்து விட்டாள்.

''என் வாழ்க்கையை வித்து அதில் கிடைத்த பணம் என் மகளுக்கு வேண்டாம். அவளை வளர்க்க என் உடம்பிற்கு தெம்பிருக்கு'' என்று மகளோடு போனவளை... இப்போது தான் பார்க்கிறான்.

''நீங்க இங்கே எப்படி மாலினி?''

''மேடம் கொடுத்த வாழ்வு இது! அவங்கதான் மேற்கொண்டு என்னை படிக்க வச்சு... இங்கே அட்டெண்டர் வேலையும் வாங்கிக் கொடுத்தாங்க. என் மகளையும் படிக்க வைக்கிறாங்க. இருக்க நிழலும் கொடுத்திருக்காங்க.''

''ஓ... அவ்வளோ நல்ல வங்களா இந்த மேடம்?'' ஆச்சர்யமாய் கேட்டான்.

''என்ன அப்படிக் கேட்டுட்டீங்க? என்னை மட்டுமில்லே... என்னை மாதிரி பாதிக்கப்பட்ட பல பேருக்கு இதே மாதிரி உதவிகள் செஞ்சுக்கிட்டிருக்காங்க.... நீங்க எப்படி இங்கே?'' சொன்னான்.

''கண்டிப்பா கிடைக்கும் சார்... நம்பிக்கையோட போங்க...''

''தாங்க்ஸ் மாலினி''

''இதோ இந்த ரூம் தான்!''

நிலைவாசல் முகப்பில், ஆனந்தி என்ற பெயரும் அவள் படித்து



''எங்க வேலைக்காரி கிட்டே எடாகூடமா நடந்துகிட்டீங்களா?''
''ஏன் கேட்கறே?''
''என்னை மாதிரியே அவளும், எத்தனை நாளைக்குத்தான் இந்த வீட்டுல குப்பை கொட்டறதோ''ன்னு புலம்பிணாளே!

-அனன்யா, திருச்சி

வாங்கிய பட்டங்களும், பொறுப்பு வகிக்கும் பதவியும் பொறிக்கப்பட்ட பித்தளை போர்டு பளிச்சென்றிருந்தது.

கதவை விரலால் இருமுறை டொக்கினான்.

''யெஸ்... கம்மின்..''

கவுசிக் உள்ளே சென்றான்.

''யூ வெயிட் ரைட் தவ். பட், ஐ டோன்ட் பீலிங் இஸ். ஒக்கே... ஐ கால் யூ லேட்டர்'' போனை வைத்து விட்டு ரோலிங் சேரில் திரும்பியவள் வந்தவனை பார்த்து அதிர்ந்தாள்.

கவுசிக் அவளை விட அதிகமாய் திடுக்கிட்டான்.

''கவுசிக்?''

''அவந்திகா!''

ஆனந்தி என்ற உயர் அதிகாரியாய் அவந்திகாவை சந்திப்போம் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

இப்போது தான் நினைவிற்கு வந்தது. அவந்திகாவின் ஜாதகப் பெயர் ஆனந்தி! வீட்டில் செல்லமாய் அழைப்பது அவந்திகா.

'எல்லாம் சரி. இங்கே... இத்தனை பெரிய போஸ்ட்டில் இவள் எப்படி? சரளமான ஆங்கிலம். எல்லாவற்றிக்கும் மேலாக திருமணமான ஒரே நாளில் விதவை? அவந்திகாவிற்கா இப்படியொரு நிலைமை?'

''சிட் டவுன்!''

''தாங்க்ஸ் அவந்தி...''

''என்ன விஷயமாய்...'' தன் கசப்புகளை மறைக்க வெகுவாய் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

''லோன் விஷயமாய்.. இதில் எல்லா டீடெய்லும் இருக்கிறது'' என்று ஒரு பைலை நீட்டினான்.

''ஓ... வாசுதேவன் சார் சொன்ன நபர் நீங்கதானா?''

அவர் கவுசிக்கின் பர்சனல் லைப் பற்றியும் கொஞ்சம் சொல்லியிருந்தார்.

அதெல்லாம் நினைவிற்கு வந்தபோது சிரிப்புதான் வந்தது.

''உன்னை இங்கே எதிர்பார்க்கவில்லை.''



''ம்.. நானும்தான்!''

''உன்னைப் பத்தி எந்த தகவலும் எனக்குத் தெரியாது. இங்கே கூட ஆனந்தி மேடம் ஒரே நாளில் விதவையானவங்கன்னு சொன்னப்ப அது நீயா இருப்பேன்னு நினைச்சிக் கூட பார்க்கலே... எப்படி... எப்படி அவந்தி?''

''ப்ளீஸ்... எல்லாத்தையும் மறக்கணும்னு கஷ்டப்பட்டு, மறந்து... அதோட பயனா.... இதோ இந்த சீட்ல உட்கார்ந்திருக்கேன். எதையும் கேட்டு டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். பார்த்து வந்த வேலையை விட்டுட்டு என் பிஸினஸ் பண்ணனும் நினைக்கறீங்க?''

''உனக்கு பண்ணின துரோகத்துக்கு நான் நிறைய அனுபவிச்சிட்டேன் அவந்தி. வாழ்க்கையை தப்பான கோணத்துல பார்த்ததால... இல்லேயில்லே... போதிக்கப்பட்டதால... கல்யாண விஷயத்துல தப்பான முடிவெடுத்தேன். அதனால நான் ரொம்ப அசிங்கப்பட்டுட்டேன்...'' என்றபடி சுருக்கமாய் தன் வாழ்க்கையைப் பத்திக் கூறினான்.

அவனை பரிதாபமாய் பார்த்தாள். ''ஆனா, இப்ப என்னோட உறுத்தல் எல்லாம் உன் வாழ்க்கை என்னாலதானே இப்படியாச்சுங்கறதுதான்''.

''இல்லை மிஸ்டர் கவுசிக். காதலால கிடைச்ச தோல்வியால நான் ஒண்ணும் மூலையில முடங்கி உட்கார்ந்துடலியே, என்னை ஒரு உயரத்துக்கு கொண்டு வந்து, நாலு பேருக்கு உதவுகிற கபாஸிட்டிய கொடுத்தது ஒரு வகையில நீங்களும் ஒரு காரணம்.''

''....?!''

''அதனால நான் உங்களுக்கு தாங்க்ஸ் தான் சொல்லணும்.''

''என்மேல் உனக்கு இன்னும் கோபமிருக்கு.''

''இல்லேன்னு பொய் சொல்ல விரும்பலே. அதுக்காக பழசையெல்லாம் மனசுல வச்சு உங்க அப்ளிகேஷனை ரிஜக்ட் பண்ணிடுவேன்னு நினைச்சிடாதீங்க. எல்லாமே சரியாயிருக்கு. உங்க லோன் சாங்ஷன் ஆகிடும்.''

''எனக்கு இப்ப அது பெரிசில்லே. நீ ஏன் மறுகல்யாணம் பண்ணிக்கக் கூடாது அவந்திகா?''

சில கணங்கள் கண்மூடித் திறந்தவள் சிரித்தாள்.

''கல்யாணம்ங்கறது என்ன? சிறந்த தம்பதியா வாழணுங்கறதுக்காக உருவாக்கப்பட்ட சம்பிரதாயம் தானே? உலகத்திலேயே சிறந்த தம்பதியார் தெரியுமா?''

''....?!''

''சிரிப்பும், அழுகையும் கலந்த அந்த தருணம் தான். அப்படி ரெண்டுமே சந்திக்கறது அரிது. அப்படியொரு அழகான தருணத்தை எல்லா ஆண்களாலும் தந்துட முடியாது. ஆனா, அப்படியொரு தருணம் என் வாழ்க்கையிலேயும் வந்தது.

''போர்க்களத்தில் எதிர்மன்னனின் வீரத்துக்கு முன்னால், உங்கள் வேகம் ஜெயித்துவிட்டதா... எப்படி மன்னா?''

''நான் ஓடிவந்த வேகத்தை சொல்கிறேன் மந்திரியாரே!''

-வெ.ராம்குமார்,
வேலப்பாடி.



வசதியான மனைவிக்காக காதலியை ஒதுக்கிய காதலனும், காதலிக்காக மனைவியை விட்டு இறந்துப் போன கணவனும் என் கண்கள்ல அழுகையை மட்டும் தான் பரிசாதந்தாங்க. ஆனா, கூடப்பிறந்த தங்கைக்காக வம்சத்தையே இழந்த அருமையான அண்ணனையும் பார்த்தவள் நான். இனி, புதிதாய் வேறு ஆணையும் என் வாழ்க்கையில் சந்திக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணுக்கு திருமணத்தை விட படிப்பும், தன்னம்பிக்கையும் தான் ரொம்ப முக்கியம். அது என்னைக்கும் அவளை கைவிடாது. அம்போன்னு விட்டுட்டு ஓடியும் போகாது''.

துளிர்த்த கண்ணீருடன் அவளையே பார்த்த கவுசிக்,'' எல்லாருக்கும் ஒளி தர்ற தீபமா இருக்கே... ஆனா, உன் வாழ்க்கை...?''

''தீபம்... அது உட்கார்ந்து இருக்கிற அடிப்புறத்திற்கு ஒளிதராது கவுசிக். மத்தவளுக்கு ஒளி தர்றவளா இருக்கேனென்னு மனசுக்குள்ளே ஒரு திம்மதி இருக்கு அது போகும்... ஓக்கே... உங்களுக்கு ஒதுக்கின நேரம் முடிஞ்சுப் போச்சு.. உங்க லோன் சாங்ஷன் ஆகிடும்...''

''தாங்க்ஸ் அவந்தி..'' என்று எழுந்தான். கால் மீ மேடம், ஆனந்தி மேடம்! உங்களைப் பொறுத்தவரை அவந்திகா செத்துப் போய்ட்டா... புறப்படுங்க'' என்றாள் சலனமின்றி.

இதயத்தில் கனத்தை சுமந்தபடி வெளியேறினான் கவுசிக்.

ஆனால், அவனின் முதுகை தவிப்புடன் பார்த்தாள் அவந்திகா. வாய் கூறும் அத்தனையும் இதயம் நினைப்பதில்லை. அவள் இதயத்தில் முளைத்த காதல் செடி பூக்க வில்லையே தவிர, அழியவில்லையே!

கண்கள் தளும்பின. ஏனென்று தான் அவளுக்கேப் புரியவில்லை. வாழ்க்கை உணர்வுளால் நெய்யப்பட்ட உடை அல்லவா?

**முற்றும்**